# சக்தி





88878

முல்லைச் சிரிப்பு.

இன்று உலகம் சிரிப்பை வேண்டுகிறது. சிரிக்கும் முகம் அழகாய் இருக்க வேண்டும். பல்களும் அழகாய் வரிசையாய் முத்துப் போல இருக்க வேண்டும். எத்தனைதான் உதட்டிற்கு வர்ணம் தீட்டினாலும், முகத்தில் ஸ்னோக்கள் தடவினாலும், பலவிதமான பசைகளைப் போட்டு பல் துலக்கினாலும் இயற்கையான முக வசீகரம் வராது. தாம்பூலம் போட்டுக் கொள்ளுங்கள். பல் அழகாக இருக்கும். உதட்டில் இயற்கையாக வெற்றிலைச் சிகப்பு இருக்கும். நீங்கள் சிரிப்பதை ஒவ்வொரு கண்ணும் பார்த்து மகிழும். தாம்பூலத்துக்கு உகந்த சுகந்த மணமுள்ள பாக்குத்தூள் 'அசோகா'தான்.

# அசோகா

## சுகந்த பாக்குத் தூள்

தயாரிப்பவர்:

எம். கே. கிருஷ்ண செட்டி

சோகா பாக்டரி' :: கோயமுத்தூர்.



For SILKS and SAREES
நாகரீகமான பட்டு புடவை
கள் பல ரகங்களில் ஏராள
மாக கிடைக்குமிடம்
S. R. B.
குப்புசாமி அய்யர் & சன்
(பழைய விலாசம்)
S. R. பாலுசாமி அய்யர்
& சன்ஸ்
117, நயினியப்ப நாய்க்கன்
தெரு, P. T. மதருஸ்
230, கீழமாரெட் வீதி, மதுரை
SRB
MSD




மிகப் பழைய காலத்திலே மனித சமுதாயம் காட்டுமிராண்டி நிலைமையிலிருந்தபோது வர்த்தகம் என்பது பண்டமாற்று வியாபாரமாகத்தான் இருந்தது. உதாரணமாக, நீர் ஒரு வேட்டைக்காரராயிருந்தால், நீர் உமது புலித்தோலைக் கொடுத்து அதற்குப் பதிலாக ஓர் ஆட்டையாவது தானியத்தையாவது வாங்கியிருக்கக்கூடும். அல்லது உமக்கு ஒரு மனைவியையும் சம்பாதித்திருக்கக்கூடும். விற்பனையாளர்களில் எவருக்குமே ஒரு புலித்தோல் வேண்டியிரா விட்டால், நீர் எதையுமே வாங்கியிருக்க முடியாது!

அநிச்சயமான எதிர்காலத்துக்காக ஒருவர் சேர்த்துவைக்க விரும்பினாலும்கூட அது அவ்வளவு சுலபமான அல்லது உகந்த காரியமாக இருக்கவில்லை; ஏனெனில் சேமிப்பு

தபாலாபீஸுகளிலும், கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட அதகாரம் ஸெர்டிபிகேட்டு

கள் விநோதமான உருவத்தில் இருந்திருக்கக்கூடும். வாழைத் தாறுகள்! தானிய மூட்டைகள்! செம்மறியாட்டு மந்தைகள்! அழியத்தக்க சேமிப்புகள், அப்படித்தானே? வருஷ முடிவில் ஈவுத் தொகைகளும் கிடையா!

எனினும் இன்று பொருள்களைக் கிரயத்துக்கு வாங்குவதிலோ சேர்த்து வைப்பதிலோ அதிக கஷ்டம் இருப்பதில்லை. புத்திசாலியான மனிதன் இப்பொழுதே செலவு செய்து விடுவதற்குப் பதிலாக எதிர்காலத்துக் கென்று சேர்த்து வைப்பதைச் சிலாக்கியமாய்க் கொண்டு, தனது சேமிப்புகளைப் புத்திசாலித்தனமாய் வட்டிக்குப் போட்டு வைக்கிறான். நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகளில் வட்டிக்குப் போட்டு வைக்கப்படுகிற பணம் மிகவும் பத்திரமாயிருக்கிறது; மேலும் அது உரிய காலத்தில் 50 சத வீதம் அதிகமாகிறது; அதாவது பிரதி 10 ரூபாயும் பன்னிரண்டு வருஷங்களுக்குப் பிறகு 15 ரூபாயாகிறது. இந்த வட்டிக்கு இன்கம் டாக்ஸ் கிடையாது. இப்பொழுது நீர் 5 ரூபாயிலிருந்து 15,000 ரூபாய் வரையில் எவ்வளவு தொகையையேனும் வட்டிக்குப் போட்டு வைக்கலாம். சிறு சேமிப்புக்காரர்கள் 4 அணா, 8 அணா அல்லது 1 ரூபாய்க்கு ஸேவிங்ஸ் ஸ்டாம்புகள் வாங்கலாம்.

எதிர்காலத்துக்கென்று சேர்த்து வைக்கவும்

**நாஷனல் ஸேவிங்ஸ் ஸர்டிபிகேட்டுகளை**

வாங்கவும்

**பிரபலமான முகவிடு**

பெற்ற ஏஜென்டுகளிடமும், ஸேவிங்ஸ் பிரோக்களிலும் இவைகள் கிடைக்கும்.

AC 210 TM



# இந்தியன் பாங்க்
## லிமிடெட்

**இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்**
**நார்த் பீச் ரோட், மதராஸ்**

*மதராஸ் ஆபீஸ்கள்:*

**எஸ்பிளனேட், மவுண்ட் ரோட், திருவல்லிக்கேணி, தியாகராயநகர், மயிலாப்பூர், புரசைவாக்கம், எழும்பூர்.**

தென் இந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் கிளை ஆபீஸ்கள் உள்ளன

| | |
|---|---|
| வழங்கி வாக்களிக்கப்பட்ட முலதனம் | ... ரூ. 72,00,000 |
| செலுத்தப்பட்ட முலதனம் | ரூ. 53, 00,000 |
| ரிஸர்வ் நிதி | ... ரூ. 62,00,000 |

எல்லாவித பாங்கு அலுவல்களும் கவனிக்கப்படும்.

**N. கோபால அய்யர்,**
செக்ரெடரி.

IBN/101




மருந்து சாப்பிட ஆரம்பித்ததுமே கபத்தைக் கலைத்து, மூச்சுத் திணறலை மட்டுப்படுத்துவதுடன், மலச் சிக்கலை மாற்றி, ஜீரண சக்தியைக் கொடுத்து, உடலுறுதி பெற வேலை செய்கிறது. புரோகித் ஸ்வாஸஹரிதான் இந்த நோய்க்கு லகைகண்ட மருந்து. நுரையீரலை வலுவாக்கி, ஆஸ்த்மாவை அறவே தீர்க்கிறது. ஈரல் கோளாறு, மலச் சிக்கல், பித்தாசயக் கோளாறு, மூச்சுத் திணறல், இருமல், சுவாஸாசயக் கோளாறு முதலியவற்றிற்கு ஸ்வாஸஹரி ப்ளெயின் (நீலப்பாக்கிங்) சிறந்தது.

சிவப்பு பாக்கிங் உள்ள ஸ்வாஸஹரி காம்பௌண்ட் நீடித்த கடுமையான வியாதிகளை குணப்படுத்தும்.

3, 6, 12 அவுன்ஸ் ஸைஸ்களில் கிடைக்கும். விலை முறையே ரூ. 3-6-0 ரூ. 5-12-0, ரூ. 10-0-0. எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

ஸ்டாகிஸ்ட்டுகள்:
மெஸர்ஸ். அப்பா அண்ட் கம்பெனி
கெமிஸ்ட்ஸ், சைனபஜார், சென்னை.

*Customers are requested to Communicate in English*

ஆஸ்த்மா, சுவாஸாசய நோய்களுக்கு டாக்டர்கள் விதிப்பது



**புரோஹித ஸ்வாஸஹரி**

**DR. PUROHIT PHARMACY, KOLHAPUR.**

## இது ஒரு ஸோப் அன்றி




## மாயமல்லா?

உள்ளதை உள்ளபடி சொல்லுகிறோம். இவ்விளம்பரத்தின் மூலம் நாங்கள் விற்க விரும்புவதெல்லாம் எளியோர் பணக்காரர் யாவருக்கும் கிட்டக்கூடிய ஓர் உயர்தரஸ்தான ஸோப். காந்தி ஸோப் உங்களுக்கு அழகு சிருங்காரம் முதலியவற்றை உண்டாக்குமென்று நாங்கள் வாக்குறுதி கொடுக்கவில்லை.

ஆனால் காந்தி ஸோப் பரிமளம் பொருந்தியவை என்றும் மிருதுவான சருமத்துக்கு கெடுதலை உண்டாக்காது என்றும் உறுதி சொல்லுவோம்.

இதர உயர்தர ஸ்வஸ்திக் தயாரிப்புகள். சீகக்காய்ஸோப். பரிமள ஆமணக்கெண்ணை. ஸ்வஸ்திக் ஷவர ஸோப், சலவை ஸோப்புகள், கோவாலின் பிராண்ட் வனஸ்பதி முதலியன.




# காந்தி ஸோப்

குணத்துக்கு நிகரற்றது.

SHILPI

Sora. 1

ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிமிடெட் பம்பாய்.

## ஜெர்மெக்ஸ்




புண் | புண் இன்னும் கோளாருகாமல் தடுத்து - குணப்படுத்துவது - | தொத்துநோய்

புண்ணுக்கும், தொத்து நோய்க்கும் உள்ள தொடர்பை ஜெர்மெக்ஸ் துண்டிக்கிறது.

லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம் & பர்மசியுடிகல்ஸ் லிமிடெட்.

தபால் பெட்டி நெ. 67, சென்னை

DIK 22



# பொருள் அடக்கம்

மலர் 14 : இதழ் 8


| | | | |
|---|---|---|---|
| சர்க்கார் சிப்பந்திகள்...... | ... | தலையங்கம் | 9 |
| காலச் சுழல் | ... | ... | 12 |
| சக்தி பொங்கல் மலர் | ... | ... | 13 |
| கன்ட்ரோல் போக வேண்டுமா? | ... | ஆர். ராமநாதன் | 14 |
| தீ விபத்துக்கள் | ... | ... | 16 |
| சோழர்களின் அழியாக் கலைகள் | ... | வீ. க. சோமசுந்தரன் | 17 |
| பாதாளப் பயணம் | ... | பார் லாகர்க்விஸ்ட் | 23 |
| ஹைதராபாத் அரசியல் | ... | ரபி அஹமத் | 31 |
| குழந்தைகளுக்கு ஆஸ்த்மா | ... | வைத்தியர் | 35 |
| கொள்கையும் குடித்தனமும் | ... | ரா. கி. ரங்கராஜன் | 37 |
| செக்கஸ்லோவேகியா | ... | அ. சிங்காரவேலு | 45 |
| நாம் ஏன் கனவு காண்கிறோம்? | ... | ச. மு. பிள்ளை | 51 |
| ராஜேந்திரப் பிரசாத் | ... | ப்ளூடெரியோ ஸோர்ஸ் | 55 |
| வனஸ்பதி என்பது என்ன? | ... | கம்பெனியார் | 63 |
| வனஸ்பதி | ... | ப. வெ. வே. சுப்பிரமணியன் | 67 |
| சாக்கடையிலிருந்து (தொடர் கதை) | ... | பி. கேசவதேவ் | 73 |
| புத்தக உலகம் | ... | கு. அ. | 83 |


அட்டைப் படம்: எம். டி. வின்ஸென்ட்

*

சர்வசித்து சக்தி மார்கழி

## நீங்கள் நேரில் வந்து
## பரீக்ஷை செய்யுங்கள்



முதல்தரமான வஸ்துக்களுக்கு ஈடு கிடையாது. எதிலும் தரம் வேண்டுமானல் அதற்கு உண்டான மதிப்பைக் கொடுத்துத்தான் ஆக வேண்டும். நீங்கள் தேர்ந்தெடுக்கும் வைரங்கள் **பாபாலால்** கம்பெனியிலிருந்து வாங்கினதானல் அவைகளின் கண்ணியமான தரத்தைப்பற்றி உங்களுக்குக் கவலை வேண்டியதில்லை. அவைகள் எப்பேர்ப்பட்ட பரீக்ஷைகளுக்கும் தயாராக இருக்கின்றன.

# பாபாலால் & கம்பெனி

**கீர்த்திபெற்ற வைர நகை வியாபாரிகள்**

**மதராஸ்**

**DIRECT IMPORTERS OF QUALITY DIAMONDS.**

சர்வசித்து
மலர் 14

# சக்தி

மார்கழி
இதழ் 8

மெய்ப் பொருள் காண்பது அறிவு

## சர்க்கார் சிப்பந்திகள் வேலை நிறுத்தம்

மத்திய சர்க்கார் ஊழியர்களுக்குக் கொடுக்கப்படும் பஞ்சப்படி விகிதப்படி தங்கள் பஞ்சப்படியையும் கூட்ட வேண்டும் என்று சென்னை சர்க்காரின் கெஜட்பதிவில்லாத சிப்பந்திகள் கோரினார்கள். ஆனால் சென்னை சர்க்கார், தங்களிடம் அதற்குப் போதிய பணம் கிடையாது என்று கூறிவிடவே, சிப்பந்திகள் 15-ம் தேதி முதல் வேலை நிறுத்தம் செய்தார்கள். ஏறக்குறைய 100-க்கு 75 பேர் வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்டார்கள். ஆனால், கடைசி வரையிலும் சர்க்கார் விட்டுக்கொடுக்காமல் இருந்துவிடவே, சர்க்கார் சிப்பந்திகள் 21-ம் தேதியன்று மாலையில் வேலை நிறுத்தத்தை வாபஸ் வாங்கும்படி நேரிட்டது.

ஒரே ஊரில் அக்கம்பக்கமாக வசிக்கும் மத்திய சர்க்கார் ஊழியருக்கும், மாகாண சர்க்கார் ஊழியருக்கும் வாழ்க்கைச் செலவிலோ, வாழ்க்கைத் தரத்திலோ வித்தியாசமிருக்கக் காரணமில்லை. ஆகவே, தற்போது வாழ்க்கைச் செலவுக்குப் போதாத சம்பளம் வாங்கும் சிப்பந்திகள் தங்கள் பஞ்சப்படியை உயர்த்த வேண்டுமெனக் கோருவதில் தேசத் துரோகமோ, அரசாங்கத் துவேஷமோ கலந்திருக்கக் காரணமில்லை. இன்று அரசாங்கச்சிப்பந்திகள் கஷ்டப்படுவதுடன், அரசாங்கமும் பொருளாதார நெருக்கடியினால் கஷ்டப்படுகிறது. இந்த நெருக்கடிகளைச் சமாளிக்க அரசாங்கம் தேசப் புனருத்தாரணத்துக்கான பற்பல காரியங்களில் ஈடுபட்டால்தான் அரசாங்க ஊழியர்களும், பொது மக்களும் கஷ்டங்களிலிருந்து விடுபட முடியும். தேசத்திலுள்ள தொழில்களை எல்லாம் அரசாங்கம் தேசீய மயமாக்கி, உற்பத்தியைப் பெருக்குவதற்குரிய திட்டங்களை உடனடியாகத் தயாரிக்கவேண்டும். போட்ட மூலதனத்துக்கு அதிகமாகவே லாபம் சம்பாதித்த அந்நிய நாட்டுக் கம்பெனிகளையோ, உள்நாட்டுக் கம்பெனிகளையோ அரசாங்கம் தனக்குச் சொந்தமாக்கிக் கொள்ளும்போது அவற்றிற்கு நஷ்ட ஈடு கொடுத்துக்கொண்டிருக்கக் கூடாது. அதைப் போல ஜமீன்களுக்கும் இனாம்களுக்கும் நஷ்ட ஈடு கொடுப்பதும் தப்பான காரியமாகும். இன்று தேசத்திலுள்ள எந்த ஒரு யோக்கியமான மனிதனும், மேற்படி நஷ்ட ஈடு கொடுப்பதை ஆதரிக்கவில்லை. இம்மாதிரி நஷ்ட ஈடுகள்

கொடுத்துக்கொண்டே வந்தால் இனி வருஷம் நூறானாலும் தேசம் பொருளாதார நெருக்கடியி லிருந்து மீளப்போவதில்லை; கடைசியில் அமெரிக்காவிடம் போய் டாலர் பிச்சைக்குக் கையேந்தும் நிலை வந்துவிடக் கூடாது. ஆனால், இந்த ஆபத்தான யோசனையையும் ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு பத்திரிகை தெரிவித்திருக்கிறது. அமெரிக்காவிடம் கடன் வாங்குவது என்றால், அமெரிக்காவின் ஆதிபத்தியத்தை ஏற்றுக் கொள்ளுவது என்றுதான் அர்த்தம். பிறகு அமெரிக்காவிடம் சிக்கிய சீனா இப்பொழுது எந்த நிலையில் அவதிப்படுகிறதோ அந்த நிலையில் இந்தியாவும் அவதிப்பட நேரும். அதனால் பொது ஜன அரசாங்கம் தேசத்தின் செல்வ நிலையை உயர்த்தும் விஷயத்தில் அக்கறையுடனும், சர்வ ஜாக்கிரதையுடனும் நடந்துகொள்ள வேண்டியிருக்கிறது.

அரசாங்கம் புனருத்தாரண காரியங்களில் ஈடுபடுவதற்கு முன்பாகவே, பெரிய உத்தியோகஸ்தர்களின் சம்பளத்தையும் குறைக்கவேண்டும். மாதம் ஆயிரம் ரூபாய் சம்பளத்திற்கும் மேலாக ஊதியம் பெறும் உத்தியோகஸ்தர்கள் சுதந்திர இந்தியாவில், ஏழை இந்தியாவில் இருப்பதை அனுமதிக்க முடியாது. இந்த விதமாகப் பல வழிகளிலும் அனாவசியச் செலவுகளைக் குறைத்து, பொருளாதார நெருக்கடியில் அவதிப்படும் பொது மக்களுக்காகவும், நடுத்தர சிப்பந்திகளுக்காகவும் அரசாங்கம் பணத்தைச் செலவிட வேண்டும்.

சிப்பந்திகள், தேசத்தின் பொருளாதார நெருக்கடியை உணர்ந்து இன்னும் கொஞ்ச காலம் பொறுத்திருந்திருக்கலாம். அதற்கு அனுசரணையாக அரசாங்கமும் அனுதாபம் காட்டி அவர்களுக்கு நம்பிக்கை அளித்திருக்க வேண்டும். ஆனால், இனி எதிர்காலத்தில் சிப்பந்திகளின் கோரிக்கையை சென்னை சர்க்கார் கவனிக்கும் என்றே நம்புகிறோம். பழி வாங்கும் முறையையும் சர்க்கார் கடைப்பிடிக்காது என்று எதிர்பார்க்கிறோம். பொது மக்களின் அரசாங்கம் பொது மக்களின் ஒரு பகுதியைத் தனக்கு விஸ்வாசமான ஊழியர்களாக ஆக்கிக் கொள்ளுவதுதான் விவேகமான காரியமாகும். இதே சமயத்தில் சர்க்கார் ஊழியர்களுக்கும் ஓர் எச்சரிக்கை செய்ய விரும்புகிறோம். வேலை நிறுத்தத்தின் போது பொது ஜனங்களின் அனுதாபத்தைப் பரிபூரணமாக இழந்து, அந்தரத்தில் நின்று தவித்ததை அவர்கள் மறந்திருக்கமாட்டார்கள். எடுத்ததற்கெல்லாம் அவர்கள் லஞ்சம் வாங்கி, பொது ஜனங்களை ஆட்டிக்குலைத்த தீவினைதான் 'தன்வினை தன்னைச்சுடும்' என்று அவர்களையே பாதித்துவிட்டது. பிரிட்டிஷ் ஆட்சியில் குமாஸ்தாக்களும் பியூன்களும் கூட தாங்களே ஜனங்களுக்கு எஜமானர்கள் என்று நினைத்துத் தர்பார் நடத்தினர்கள். அந்தக் காலம் இப்போது மலை ஏறி விட்டது. அந்த முட்டாள்தனமான அதிகாரத்திமிருக்கும் லஞ்சப் பழக்கத்துக்கும் சமாதி கட்டினாலொழிய அவர்களுக்கு இந்த ஜனநாயக சகாப்தத்தில் விமோசனம் பிறக்கப் போவதில்லை. அத்துடன், பெயரையும், புகழையும் விரும்பியோ, அல்லது சுயநலமாகத் தங்கள் காரியத்தைச் சாதித்துக் கொள்ளும் நோக்கத்துடனோ சதிகார

யோசனையுடன் கெட்ட காரியங்களைச் செய்யும்படி தூண்டிவிடக்கூடிய நபர்களை, சர்க்கார் சிப்பந்திகள் தங்கள் சங்கத்தின் தலைவர்களாக வைத்துக் கொள்ளுவதும், அவர்கள் வலையில் விழுந்து கும்மாளம் போடுவதும் பெரிய ஆபத்தான காரியங்களாகும் என்பதையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

✻

### பெண்களின் வயதை நிர்ணிக்க...

பெண்களின் உண்மையான வயதை, அவர்கள் காலையில் படுக்கையினின்று எழும்பொழுதுதான் தெரிந்துகொள்ளமுடியும்.

—எங்கோர்

### வானவெளியில் சலவைக்கம்பெனி

நியூயார்க்கில், ஆகாய விமானம் மூலமாக ஒரு சலவைக் கம்பெனி ஆரம்பமாகியிருந்தது.

125 மைல் வேகத்தில், இரண்டுநாட்களுக்கு ஒருமுறை, ஒரு ஏரோப்பிளேன் நியூயார்க்கைவிட்டு, சலவைசெய்த உருப்படிகளுடன் புறப்பட்டு, அங்கங்கு குறிப்பிட்ட இடங்களில் (சிறிய மைதானமாயிருந்தால் போதுமானது) நிற்கும். சுற்றுப்புறத்திலுள்ளவர்கள் குறிப்பிட்ட இடத்தில், சலவை செய்யவேண்டிய தங்கள் துணிமணிகளுடன் விமானம் வரும் நேரத்திற்கு, வந்துநிற்பார்கள்; விமானம் வந்ததும், சலவைசெய்த தங்கள் துணிகளைப் பெற்றுக் கொண்டு, சலவைசெய்ய வேண்டிய துணிகளைக் கொடுத்துவிட்டுப் போய்விடுவார்களாம். பிறகு அந்த விமானம் மற்றொரு இடத்திற்குப் பறந்து செல்லும்.

இந்தமாதிரி நியூயார்க்கின் 175 மைல் சுற்றுப்புறத்தில் உள்ளவர்களுக்கு, வாடிக்கையாக அந்தக் கம்பெனி சலவைசெய்து கொடுக்கிறது. துணி எடுப்பதும் கொடுப்பதும் இரண்டு நாட்களுக்கு ஒருமுறை நடக்கிறது.

இந்த 175 மைல்தூரம் விமானம் மூலமாகப் போய்வரவும் துணிகளை எடுத்துவரவும் ஆறுமணி நேரம் ஆகிறது. எடுத்துவந்த துணிகளை 42 மணி நேரத்தில் சலவைசெய்து விடுகிறார்கள்.

—பிரீ இந்தியா

### சுகமான சாவு

ஓர் ஆஸ்பத்திரியில் 'வெயிட்டிங் ரூம்' நிறைய வியாதியஸ்தர்கள் கூடிவிட்டார்கள். நாற்காலிகள், பெஞ்சுகள் எல்லாம் நிறைந்துவிட்டன. சில நோயாளிகள் நின்று கொண்டிருந்தார்கள். நோய்வேதனை தாங்க முடியாமல் சிலர் முணு முணுத்துக்கொண்டும், சிலர் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டும் இருந்தனர். திடீரென்று நிசப்தம் நிலவியது. எல்லோரும் என்ன நடக்கிறது என்று பார்த்தார்கள். ஒரு கிழவர் "நான் வீட்டிற்குப் போனாலாவது, நிம்மதியாகச் சாகலாம்" என்று சொல்லிக் கொண்டே ஆஸ்பத்திரியை விட்டு வெளியில் சென்று கொண்டிருந்தார்.

—நியூ ஜீலண்ட் வீக்லி நியூஸ்

### எது உண்மைக் கல்வி?

பள்ளிப்படிப்புக்குப் பிறகு நீ தெரிந்து கொள்ளுவது தான் உண்மைக் கல்வி; இல்லாவிட்டால் மற்றவர்கள் என்ன தெரிந்துகொண்டிருக்கிறார்களோ அதைத்தான் நீயும் தெரிந்து கொண்டிருப்பாய்.

—குட் பிஸினெஸ்

# காலச் சூழல்

**ராஜாஜி வாழ்க!:** இம்மாதம் 10-ம் தேதியி லிருந்து சுமார் ஒரு வார காலம் தமிழ்நாடெங்கும் ராஜாஜியின் 70-வது பிறந்ததின விழாவைச் சிறப்பாகக் கொண்டாடினார்கள். பிறந்த தின வைபத்தை ஒட்டி வாழ்த்துக்கள் அனுப்பியிருந்த வெளி நாட்டுப் பிரமுகர்களும், வடநாட்டுப் பிரமுகர்களும் ராஜாஜியின் அரசியல் ஞானத்தை ஒருமிக்கப்புகழ்ந்தார்கள். தமிழ்நாட்டின் தலைவருக்கு இப்படிப்பட்ட புகழ்மாலைகள் சூட்டப் பெறுவது தமிழ்நாட்டுக்கும், தமிழர்களுக்கும் பெருமை அளிக்கும் செய்தியாகும். இந்திய நாட்டுக்கே முதல் இந்திய கவர்னர்—ஜெனரலாகப் பதவி வகித்ததும், வங்காளக் கவர்னர் பதவியை ஏற்று அம்மாகாண மக்களின் அன்புக்கும் அபிமானத்துக்கும் பாத்திரராக இலங்குவதும், ராஜாஜி மறைமுகமாகத் தமிழ் நாட்டுக்குத் தேடித்தந்த பெருமைகள் என்பதில் சந்தேகமில்லை. உலகின் தலைசிறந்த ராஜ தந்திரிகளில் ஒருவராகத் திகழும் தமிழர் தலைவராகிய ராஜாஜி இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்து தேச மக்களுக்கு வழிகாட்டி வரவேண்டும் என்று வாழ்த்துகிறோம்.

**ரேஷன் போகிறது:** சிறிது சிறிதாக உணவுப் பங்கீடு முறையைக்குறைத்துக் கொண்டே வந்து, அப்புறம் பங்கீடு முறையைப் பூரணமாக ரத்து செய்துவிட வேண்டும் என்று மத்திய சர்க்கார் தீர்மானித்தது. அந்தத் தீர்மானத்தை ஒட்டி மாகாண சர்க்கார்களின் ஆலோசனையையும் கோரியிருந்தது மத்திய சர்க்கார். ஏனென்றால், இது ஒரு பெரிய விஷப் பரீட்சை. ஆனால் நம் சென்னை சர்க்கார் உடனடியாக மத்திய சர்க்காரின் திட்டத்தை அமலுக்குக் கொண்டுவரும் காரியத்தில் ஈடுபட்டுவிட்டது. இம்மாதம் 28-ம் தேதியன்று பற்றாக்குறைப் பிரதேசங்களில் உள்ள கிராமங்களில் ரேஷன் எடுபடப் போகிறது. பற்றாக்குறைப் பிரதேசங்களில் ரேஷன் எடுக்கப்பட்டுவிட்டால், எப்படி அங்கே உணவு நிலை சரிப்பட்டு விடுமோ, தெரியாது! தென் ஜில்லாக்களில் உணவுப் பஞ்சமே வந்து விட்டது என்று சொல்லலாம். ரேஷன் முறையிலுள்ள சீர்கேடும், மழையில்லாததும், வேலை கிடைக்காததுமாகப் பல கஷ்டங்கள் சேர்ந்து மக்களை வாட்டி வதைக்கின்றன. பட்டினிச்சாவு என்று தகவல்வந்தால், கலெக்டர்களின் கூற்றை நம்பி, அதை வேறு வகையான சாவு என்று நிரூபிக்க முயலுவதால், மக்களின் கஷ்டம் நீங்கிவிடாது. ரேஷன் அமலில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் பஞ்சப் பிரதேசங்களுக்கு உணவுத் தானியங்களை அனுப்பும் பொறுப்பை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். ரேஷன் எடுக்கப்பட்டதன் காரணமாக விலைவாசிகள் மட்டுக்குமீறி உயர்ந்தாலும், அல்லது தானியங்கள் கடைகளுக்கு வாராமல் பதுங்கினாலும், மக்கள் நூற்றுக்கணக்கில் மடிய நேரிடும். அப்படிப்பட்ட ஓர் ஆபத்தான நிலையையும் எதிர்பார்த்து, அதைச்சமாளிக்க அரசாங்கம் உடனே போதிய முன்னேற்பாடுகளைச் செய்து கொள்ளவேண்டும்.

# சக்தி பொங்கல் மலர்

சக்தி பொங்கல் மலர் தயாராகிறது என்றால், சக்தி வாசகர்களுக்கு ஒரே ஆனந்தம். வருஷத்திற்கே ஒரு நாளான பொங்கல் நாளன்று அழகும் புதுமையும் தாங்கி, வருஷந்தோறும் வீடு தேடிவந்து சந்தோஷமூட்டும் சக்தி பொங்கல் மலரின் வருகையை எதிர் பார்த்து வாசக நண்பர்கள் ஆனந்தம் அடைவதில் அதிசயம் என்ன இருக்கிறது! இந்த வருஷமும் வழக்கம்போல் பொங்கல் நாளன்று உங்களுக்குக் கலை விருந்தளிக்க மிகவும் குறைந்த விலையில் வெளிவருகிறது சக்தி பொங்கல் மலர். சென்ற வருஷங்களை விட இவ் வருஷத்தில் அதிகமான பக்கங்களுடனும், ஏராளமான வர்ணப் படங்களுடனும், போட்டோக்களுடனும் மலர் தயாராகிக் கொண்டு வருகிறது. தமிழ் இலக்கியத் துறையில் பிரபலஸ்தர்களாக விளங்கும் எழுத்தாளர்களின் கதை கட்டுரைகளும், மேல் நாட்டு அறிஞர்களின் கட்டுரைகளும் மலரில் இடம்பெறுகின்றன.

ஸ்ரீமான்கள் ராஜாஜி, அவினாசிலிங்கம் செட்டியார், எஸ். வையாபுரிப் பிள்ளை, மஞ்சேரி எஸ். ஈஸ்வரன், சுரபி, மராத்தி எழுத்தாளர் மாமா. வரேர்கர், பொ. திரிகூடசுந்தரம், மூ. அருணாசலம், வ. வெ. சு. ஐயர், தி. நா. சுப்பிரமணியன், 'லக்ஷ்மி', ஆர். ராமநாதன் முதலியவர்களோடு மற்றும் பல அறிஞர்களும் தீட்டிய எழுத்தோவியங்கள் மலரை அலங்கரிக்கின்றன. அத்துடன் ஒரிஸ்ஸா மாகாணத்திலுள்ள கோனராக் ஆலயத்தின் அழகான சிற்பங்களை விளக்கும் சித்திரங்களும் கட்டுரையும் வெளியாகின்றன. வாசக நேயர்கள் தங்களுக்குத் தவறாமல் பொங்கல் மலர் கிடைப்பதற்கு உடனே மலரின் விலையையும், தபால் கட்டணத்தையும் சேர்த்து, அதாவது ஒன்றே முக்கால் ரூபாயை, சக்தி காரியாலயம், ராயப்பேட்டை, சென்னை 14-க்கு அனுப்பிப் பெயரைப் பதிவுசெய்து கொள்ளவும்.

ஆசிரியர், சக்தி

*

### காதலுக்குச் சலுகை

தென் அமெரிக்காவில் வெனிஸுவியா என்று ஒரு குடியரசு இருக்கிறது. அங்கே காதல் கடிதங்களுக்கு, வழக்கம்போல ஒட்டும் தபால் ஸ்டாம்புகளில் பாதி ஒட்டினால் போதும். ஆனால், காதல் கடிதங்கள் என்று தெரிவதற்காக, அந்தக் கடிதங்களை பிரத்தியேகமாக உள்ள சிவப்புக் கவர்களில் வைத்து அனுப்ப வேண்டும்.

—லைஃப்

# கன்ட்ரோல் போகவேண்டுமா?

ஆர் ராமநாதன்

வாழ்க்கைக்கு இன்றியமையாத சாமான்கள் போதிய அளவு கிடைக்காததற்குக் காரணம் கன்ட்ரோல் முறைதான் என்று சொல்லுகிறார்கள் பலர். கன்ட்ரோல் நீங்கினால் நாடு செழிக்கும் என்று பேசுகிறவர்களும் இருக்கிறார்கள். இந்தக் கூட்டத்திற்குத் தலைமை தாங்குகிறார்கள் பெரிய முதலாளிகளும், தேர்ந்த கள்ள மார்க்கெட்காரர்களும். கன்ட்ரோல் நீங்கினால் வாழ்க்கை செழிக்குமா?

இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லுமுன் கன்ட்ரோல் முறை ஏன் அமலுக்கு வந்தது என்னும் கேள்விக்கு விடை கண்டுபிடிக்க வேண்டும்.

இரண்டாவது உலக மகா யுத்தம் ஆரம்பமான பிறகு வாழ்க்கைக்குத் தேவையான சாமான்கள் போதிய அளவு கிடைக்கவில்லை. தேவையும் சப்ளையும் முட்டி மோதியதால், சாமான்களுக்குப் பஞ்சம் ஏற்பட்டது. எனவே இருக்கும் சாமான்கள் எல்லோருக்கும் கிடைக்க, வழி செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டது. விநியோகத்தை ஒரு திட்டத்திற்கு உட்படுத்தினால்தான் சாமான்கள் எல்லோருக்கும் கிடைக்கும். தேவைக்குத் தகுந்த சப்ளை இல்லாததால் தான் கன்ட்ரோல் முறை அனுஷ்டானத்திற்கு வந்தது. தேவைக்கு மிஞ்சின சாமான்கள் நாட்டில் இருந்தால், ரேஷன் முறை இருக்கவேண்டிய அவசியம் இராது. ஆனால், இன்று தேவைக்குப் போதிய சாமான்கள் நாட்டில் இருக்கிறதா?

மனிதன் உயிர் வாழ இன்றியமையாத உணவை எடுத்துக் கொள்வோம். அரிசி நமது நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு நமது நாட்டில் விளையவில்லை. இந்த வருடம் 45 லட்சம் டன்கள் துண்டு விழுவதாக சர்க்கார் அறிக்கை கூறுகிறது. இதை எவ்வாறு சமாளிப்பது என்பதுதான் பிரச்னை; உணவின்றித் தவிக்கும் மக்களுக்கு எவ்வாறு உணவளிப்பது என்பதுதான் பிரச்னை.

கன்ட்ரோல் நீங்கினால் நினைத்த விலைக்கு உணவுப் பொருள்களை விற்கலாம் என்று கள்ள மார்க்கெட்காரர்களும், இருக்கும் வர்க்கத்தைச் சேர்ந்தவர்களும் நினைக்கிறார்கள். கன்ட்ரோல் நீங்கினால் மக்கள் துயரம் தீரும் என்று காந்திஜி சொன்னபிறகு இவர்கள் கட்சி பலம் பெற்றுவிட்டது. சர்க்காரும் கன்ட்ரோலை நீக்க முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது. உண்மையில் இதன் விளைவு மிகப் பயங்கரமானதாக இருக்கும்.

சென்ற வருடம், இருக்கும் வர்க்கத்தின் நிர்ப்பந்தத்தால் ட்ரூமன் கன்ட்ரோலை நீக்கினார். அதன் விளைவு என்ன? ஒரு வருடத்தில் சாமான்களின் விலை 91 சதவிகிதம் அமெரிக்காவில் உயர்ந்தது. சென்ற வருடம் கன்ட்ரோல் நீங்க வேண்டும் என்னும் உத்தரவில் கையெழுத்

---

கன்ட்ரோல் போக வேண்டுமா, கூடாதா என்பது பற்றி இன்று பெரிய விவாதமாக இருக்கிறது. கட்டுரையாளர் கன்ட்ரோலின் லாப நஷ்டங்களை ஆராய்கிறார்.

திட்ட அதே ட்ரூமன் இந்த வருடம் மீண்டும் கன்ட்ரோல் முறையை அமலுக்குக் கொண்டு வரவேண்டும் என்று பேச ஆரம்பித்திருக்கிறார். இது நமக்கு ஒரு படிப்பினையாக இருக்க வேண்டும்.

கன்ட்ரோல் நீங்கினால் நிலைமை அபிவிருத்தி அடையாது, ஆனால் நிலைமை மிக மோசமாகும். கன்ட்ரோல் நீங்கினால் சாமான்களின் விலை பன்மடங்கு அதிகரிக்கும். மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்கள் நாட்டில் இல்லை என்பது இருக்கும் வர்க்கத்திற்கு நன்றாகத் தெரியும். எனவே அவர்கள் உணவுப் பொருள்களின் விலையைப் பன்மடங்கு உயர்த்துவார்கள். அந்த விலை கொடுத்து உணவுப் பொருள்கள் வாங்கும் சக்தி ஏழைகளுக்கு இல்லை. எனவே, ஏழைகள் இதனால் பெரிதும் கஷ்டப்படுவார்கள். பட்டினியும் மரணமும் நாட்டில் நிரந்தர இடம் பெறும்.

கன்ட்ரோல் கள்ளமார்க்கெட்டுக்கும், லஞ்சத்திற்கும் காரணம் என்றும், கன்ட்ரோல் நீங்கினால் கள்ளமார்க்கெட் செத்துவிடும் என்றும் சிலர் கூறுகிறார்கள். கன்ட்ரோல் நீங்கினால், திருட்டுத்தனமாகச் சாமான்களை விற்கும் முறை ஒழியலாம். ஆனால் பழைய முறைக்குப் பதிலாக புதிய முறை தலைதூக்கும். கன்ட்ரோல் நீங்கினதும் சாமான்களின் விலை விஷம் ஏறுவதைப் போல் ஏறும். இதை எந்தப் பெயரிட்டு வேண்டுமானாலும் அழைத்துக் கொள்ளுங்கள்!

எனவே, கன்ட்ரோலை நீக்கினால் ஜனங்களின் கஷ்டம் தீராது. அப்படியானால், ஜனங்கள் கஷ்டம் தீர வழி என்ன? கன்ட்ரோல் முறையை உடனே சர்க்கார் இறுக்க வேண்டும்; கன்ட்ரோல் முறையை முறையாக அமலுக்குக் கொண்டு வர வேண்டும். கன்ட்ரோல் முறையை அனுஷ்டானத்திற்குக் கொண்டு வரும் பொறுப்பைத் தேச நலத்தில் கருத்துள்ளவர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

2. கள்ள மார்க்கெட்டை வேரறுக்க வேண்டும். கள்ள மார்க்கெட்டை ஒழிக்க ஜனங்களின் ஒத்துழைப்பை சர்க்கார் நாடவேண்டும். கள்ள மார்க்கெட்காரர்களைக் கடுமையாகத் தண்டிக்கவேண்டும்.

3. உற்பத்தியாகும் தானியம் ஜனங்களுக்குக் கிடைக்கவேண்டும். இதற்கு முற்போக்கான விநியோக முறைகளைச் சர்க்கார் மேற்கொள்ள வேண்டும்.

இந்த முறைகளை மேற்கொள்வதன் மூலம்தான் சர்க்கார் நெருக்கடியைச் சமாளிக்க முடியும். இந்த வழியை மேற்கொள்ளாமல் கன்ட்ரோலை நீக்குவது தேசத்தை அழிவு என்னும் அதல பாதாளத்திற்கு அழைத்துச் செல்வதாகும். ஏகாதிபத்தியம் இதைச் செய்யலாம்; ஆனால், ஜனங்களின் சர்க்கார் இதைச் செய்ய முடியாது—செய்யவும் கூடாது.

*

முதல் குழந்தை

கணவன், அவனுடைய மனைவியின் முதல் குழந்தை

—பானின்

*இது, தீ விபத்துக்கள் சம்பந்தமாக சில ருசிகரமான தகவல்கள் அடங்கிய கட்டுரை. ஜான்புல்லி லிருந்து.*

# தீ விபத்துக்கள்

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * *

பிரிட்டனில் ஒவ்வொரு வருஷமும் தீ விபத்தால் சுமார் ஆயிரம் பேர் சாகிறார்கள். தீ அணைக்கும் படையைப் பலதடவை, எந்த விபத்துமே இல்லாமல் கூப்பிடுவார்கள். மான்செஸ்டரில், மூன்று அழைப்புகளில் ஒன்று பொய்யாகவும், லண்டனில் எழு அழைப்புகளில் ஒன்று பொய்யாகவும் இருக்கும். லண்டனில் தமாஷுக்காக முப்பது அல்லது நாற்பது தடவைகளும், கிறிஸ்துமஸ் சமயமானால் நூறு தடவைகளுங்கூடக் கூப்பிடுவார்கள் இப்படி விளையாட்டுத்தனமாகக் கூப்பிட்டு, தீ அணைக்கும் எஞ்ஜினை உபயோகப்படுத்தியதில், கென்ட்டில் மூன்று குழந்தைகளும், பயர்மேன் ஒருவனும் செத்துப் போயிருக்கிறார்கள். இப்படி விளையாட்டுக்காகச் செய்பவர்களைக் கண்டுபிடிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. விளையாட்டுக்காக அழைப்பவர்களிருக்கும் இடத்திலும், தீயணைக்கும் படை நிலையத்திலும் அதிக ஒலி தரும் மணிகளை அடிக்கச் செய்து, அதற்குள்ளாக எங்கிருந்து அழைக்கிறார்கள் என்று கண்டு பிடித்துக் கொண்டு உடனே படையினர் அந்த இடத்திற்கு விரைந்து சென்று, அந்த ஆளைக் கையும் களவுமாகப் பிடித்துக் கொள்ளுவார்கள். இப்படி வேடிக்கை பண்ணுகிறவர்களைப் போட்டோ பிடித்துக் கொள்ள, டெலிபோனிலேயே காமிராக்களும் உண்டு. இந்த முறையில் நூற்றுக்கு ஒருவர் வீதந்தான் பிடிபடுகிறார்கள்.

1935-ம் வருஷத்தில் லண்டனில் தீ வைப்பதையே தங்கள் தொழிலாகக் கொண்டிருந்த ஒரு கொள்ளைக்காரக் கூட்டத்தை, லண்டன் இன்ஷுரன்ஸ் கம்பெனிகள் கண்டு பிடித்தன. லண்டனில் 1666-ம் வருஷம் ஏற்பட்ட விபத்து மூன்று நாட்கள் நீடித்தது. அந்த மூன்றே நாளில் நானூறு வீதிகள் நாசமாயின, பதின்மூவாயிரம் வீடுகள் தவிடு பொடியாயின. செயின்ட் பால் கோயில் உட்பட எண்பத்தாறு மாதா கோயில்களும், ஐம்பத்திரண்டு பெரிய கட்டடங்களும், நான்கு சிறைச்சாலைகளும் தரை மட்டமாயின. பொருள் நஷ்டம் சுமார் பத்து லட்சம் பவுன்களுக்கு மேலாகும். ஆனால் நல்ல காலமாக ஆறே பேர்தான் செத்தார்கள். தற்காலத் தலைநகரங்களிலெல்லாம், தீ விபத்துக்களால் அதிகமாகப் பாதிக்கப்பட்ட நகரம் இஸ்டான்புல்தான். 1880-க்கும் 1930-க்கும் இடையில், ஒவ்வொரு வருஷத்திலும் பெரிய தீ விபத்து நடந்தே வந்திருக்கிறது.

*




மேலே: அமெரிக்க ஐக்கிய நாட்டிலுள்ள நியூயார்க் நகரின் தோற்றம்.

கீழே இருக்கும் படம்: நியூ டெல்ஹியிலுள்ள அசம்ப்ளி கட்டிடம்.

உங்கள் வெஸ்ட் எண்ட் கடிகாரத்தில்.

நியூ டெல்ஹியில் உங்கள் காலைச் சிற்றுண்டியை முடித்துக்கொள்ளும் பொழுது அமெரிக்காவிலுள்ள உங்கள் நண்பர் அன்றைய முதல்நாள் மாலை பிராட்வே சினிமா காக்ஷியினின்றும் வெளியே வந்து கொண்டிருப்பார்.

தேசம்தோறும் காலம்மாறும், ஆனால் "வெஸ்ட் எண்ட்" கடிகாரங்களின் நம்பகமான நீடித்த உழைப்பு மாருது. தொழில் நிபுணர்கள் பரம்பரை, "வெஸ்ட் எண்ட்" கடிகாரங்களுக்கு நீடித்த உழைப்பிற்கு மட்டுமின்றி அவற்றின் அழகான தோற்றத்திற்கும் உறுதிக்கும் முதன்மை ஸ்தானம் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் போதிய அளவு இறக்குமதியில்லை, ஆயினும் கூடியமட்டிலும் ஸ்டாக்குள்ளவரை வாடிக்கைக்காரர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கிறோம்.

வெஸ்ட் எண்ட் வாட்ச் கம்பெனி

பாம்பே — கல்கத்தா



'மாட்ச் லெஸ்'
(நியூ ஷேப்)
நிக்கல் சில்வர்
ரூ. 64.

*West End*
**WATCH CO.**
**BOMBAY & CALCUTTA**




கண்ணைக் கவரும் அழகான
பட்டுப் புடவைகள்
ப்ரொகேட்கள், ப்ளவுஸ்கள்
விவாகத்திற்குகந்த
உயரிய உடைகள் எல்லா
வகைகளுக்கும் பெயர்
பெற்ற இடம்

★

**கேவல்ராம்ஸ்**
**ஒயிட் ஷாப்**
9-13, ராட்டன் பஜார்
சென்னை
போன்: 2776
தந்தி: "Longstand"

**KEWALRAM'S**

கிளைகள்:

சாரிங்கிராஸ், ஊட்டி.
இங்ஸ்வே, செகந்திராபாத்.
கேவல் ஸன்ஸ், லாகூர்.

# சோழர்களின் அழியாக் கலைகள்

வி. க. சோமசுந்தரன்

நாம் இன்று பல சிற்ப சாஸ்திரிகளைப் பார்க்கிறோம். இவர்களில் பெரும்பான்மையோரது சிற்பங்களில் ஜீவன் இல்லை. உயிர்த்துடிப்பு நிறைந்த சிலைகளைச் செய்த நம் பண்டைய சிற்பிகள் அழிந்து போனாலும் அவர்கள், என்றும் அழியாத, உயிருள்ள சிலைகளைத் தங்கள் ஞாபகார்த்தப் பொக்கிஷமாக வைத்துச் சென்றிருக்கிறார்கள். அவை, கலைஞர்களுக்கு ஒரு விருந்தாக இன்று திகழ்கின்றன.

புதுக்கோட்டை சமஸ்தானத்தின் ஒரு மூலையிலே, மறைந்து போன பல்லவ, சோழ மன்னர்களின் நாகரிகமும் ஜைன, சைவ சமயத்தார்களின் நாகரிகமும் இன்று சிதைந்து கிடக்கின்றன. கி.பி. ஆறாம் நூற்றாண்டிலிருந்து பதினொன்றாம் நூற்றாண்டு வரை கட்டப்பட்ட ஆலயங்களும், அவற்றில் காணபபடும் சித்திரம், சிற்பங்களும் மூலைக்கு ஒன்றாகச் சிதறிக் கிடக்கின்றன. சிதறிக் கிடக்கும் அந்தக் கலைகள், கலையிலே ஆர்வம் கொண்டவர்களின் மனத்தைக் கொள்ளை கொள்ளுகின்றன.

புதுக்கோட்டையிலிருந்து 26-வது மைலில் கொடும்பாளூர் என்று ஒரு சிறிய கிராமம் உள்ளது. அதில் மூலைக்கு ஒன்றாகச் சில வீடுகள் தென்படுகின்றன. அந்த வீடுகளை விரல் விட்டு எண்ணிவிடலாம்; அந்த ஊருக்குக்



கோவில்

---

புதுக்கோட்டை சமஸ்தானத்திலே ஒரு குக்கிராமத்தில், உலகின் கண்களில் படாமல் உள்ள சிற்பச் செல்வங்களைப் பற்றி இக்கட்டுரை கூறுகிறது; இம்மாதிரி மறைந்து கிடக்கும் அற்புதங்களை வெளிக்குக் கொணரவேண்டியதன் அவசியத்தையும், இக்கட்டுரையும் படங்களும் உணர்த்துகின்றன.



விமானம்

கிழக்கே நான்கு ஏக்கர் சுற்றளவுள்ள வயலுக்குள்ளே கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் சோழ மன்னர்களால் கட்டப்பட்ட ஆலயம் ஒன்று அழிந்து கிடக்கிறது. கோவில்கள் எல்லாம் கிழக்கு முகமாகக் கட்டப்பட்டிருப்பதையே நாம் காண்கிறோம். ஆனால் இந்தக் கோவில் மேற்கு முகமாகக் கட்டப்பட்



வியாழவரி

டுள்ளது. இதற்கு மூவர் கோவில் என்று பெயர். இரண்டு கோவில்கள் எழிலோடு விளங்குகின்றன. இயற்கை இதை முழுதும் அழிக்கவில்லை. ஒரு கோவில் இயற்கைக்கு இரையாகி விட்டது. அதிலிருந்து விழுந்த விக்கிரகங்களை எல்லாம் எடுத்து அழிந்து கிடக்கும் ஆலயத்தின் மேல் கொலு வைத்திருக்கிறார்கள். அதில் ஒரு விக்கிரகத்தையாவது முழு உருவத்தோடு பார்க்க முடியாது. கலா ரசிகனது கண்ணுக்கு அங்கஹீனமான ஒவ்வொரு விக்கிரகமும் வெட்கித் தலைகுனிவது போன்றிருக்கிறது. இந்த மூளி விக்கிரகங்களைச் சிருஷ்டி கர்த்தா கண்டால் விக்கினம் உண்டு பண்ணிய இயற்கைத் தேவியை இகழ்ந்து சபிப்பான். அந்த விக்கிரகங்களிலே கலை லீலை புரிகிறது. அழகை உருக்கி வார்த்ததுபோன்றிருக்கிறது ஒவ்வொரு விக்கிரகத்தின் சாயலும்.



கங்காதரமூர்த்தி

கோவிலைச் சுற்றிச் சிறு சிறு அஸ்திவாரங்கள் காணப்படுகின்றன. அவற்றைப்பற்றிய வரலாறுகளை அறிய முடியாதவாறு காலதேவி அவற்றைச் சின்னபின்னப்படுத்திவிட்டாள். இன்னும் பதினைந்து அஸ்திவாரங்களின் அடையாளங்கள் எஞ்சியுள்ளன. கோவிலுக்கு முன்னால் தூபஸ்தம்பம் நட்டிருந்த இடத்தை ஒரு கல்லால் மூடி வைத்திருக்கிறார்கள். ஸ்தம்பம் காலச்சுழலில் மறைந்து போய் விட்டது. அதுமறைந்த இடம்

### சிற்பம் சொல்லுவது

சிற்பம், தலைமுறை தலைமுறையாக அச்சு யந்திரம்போல உதவி செய்துகொண் டிருக்கிறது. எந்தக் காலத்தில் அந்தச் சிற்பம் நிர்மாணிக்கப் பட்டதோ அந்தக் காலத்தில் சமூகம் இருந்தநிலையை, சரித்திரமாக அந்தச் சிற்பம் எடுத்துரைக்கிறது.—இங்கிலாந்திலுள்ள வெஸ்ட் மின்ஸ்டர் அப்பே என்ற கட்டிடம் இரும்புக் கையால் அடக்கி யாண்ட கொடுங்கோன்மையையும், மட்டுக்கு மீறிய அதிகார மமதையின் கோழைத்தனத்தையும் தெரிவிக்கிறது.

—லேடி மார்கன்



உமா

போன்றிருக்கிறது. இதன் உயரம் பூமி மட்டத்திற்கு மேல் 32 அடி; நீளம் 37 அடி; அகலம் 16 அடி. பூமி மட்டத்திலிருந்து எட்டடி உயரம்வரை சுவர் உள்ளது. அதற்கு மேல் தான் கோபுரம் ஆரம்பமாகிறது. கோபுரத்தின் ஒவ்வொரு தட்டிலும் சிற்ப வேலைப்பாடு சோபிக்கிறது. கல்தச்சனின் தெய்விகப் புலமை, செதுக்கப்பட்ட ஒவ்வொரு விக்கிரகத்தின் சாயலிலும் பிரதிபலிக்கிறது.

முதலாவதாக விமானத்தின் வடக்குப் பாகத்தில் உள்ள வியாழவரிக்கு மேலே ஒன்பதாம் நூற்றாண்டில் செதுக்கப்பட்ட கல்வெட்டு காணப்படுகிறது. அது பல்லவ கிரந்தத்திலே எழுதப்பட்ட சம்ஸ்கிருத சுலோகமாகும். அதில் விக்ரம கேசரி என்னும் மன்னனால், அவன் மனைவி கற்றளி, வரகுண என்பவர்

மட்டும் இன்று காணப்படுகிறது.

இங்கே, கல்லும் சுண்ணாம்பும் சேர்த்து விகார உணர்ச்சிகளை உண்டு பண்ணும்படி செய்யப்பட்ட சிலைகள் கிடையாது. இந்த மூவர் கோவிலின் லக்ஷணமே அலாதியானது. கல்லையும் சுண்ணாம்பையும் பூசாமல் சிற்பிகள் கருங்கல்லைத் துண்டுபடுத்தி ஒட்டிய கோவில் இந்த மூவர் கோவில். இது பார்வைக்கு ஒரு கோவில் போலில்லை. சிற்பங்கள் பல நிறைந்த விமானங்கள்

**பனைச் சிற்பம்**

சிற்பம், பக்தியின் வேலைக்காரி. அழகான கோவில் என்பது கல்லுருவம் பெற்ற ஒரு தோத்திரப் பாடல். அந்தக் கோவிலின் கோபுரமுனை ஸ்வர்க்கத்திற்குச் செல்லும் வழியைக் காண்பிக்கும் விரல்.

—ஸ்காப்

சிற்பம் என்பது உறைந்து இறுகிய சங்கீதந்தான்.

—எமர்ஸன்

களின் ஞாபகார்த்தமாகக் கட்டப்பட்ட தென்றும், விக்ரம கேசரி என்பவன் மல்லிகார்ச்சுனன் என்ற காலமுக சைவனின் சிஷ்யன் என்றும் பொறிக்கப்பட் டிருக்கிறது.

கோவிலின் அஷ்டானத்திலுள்ள வியாழவரி கலைக்கு மெருகு பூசுவது போலிருக்கிறது. ஒன்பதாம் நூற்றுண்டிலே செதுக்கிய சிற்பிக்கு இன்றும் மங்காப் புகழைத் தேடிக்கொடுத்துக்கொண் டிருக்கிறது அந்த வியாழவரி. சிற்பி உளியால் செதுக்கிய ஒவ்வொரு கோடும் சாகாவரம் பெற்றது போல் ஜீவகளையோடு விளங்குகிறது.

கோவிலின் வலதுபுறச் சுவரிலே தேவகோஷ்டத்திற்குக் கீழே பூமி மட்டத்திற்கு நாலடி உயரத்தில் ஒரு மாடக் குழிக்குள் கங்காதர மூர்த்தியின் விக்கிரகம் உள்ளது; பின்புறம் ரிஷபம் நிற்கிறது.



உமையொருபாகன் (சந்திரசேகர மூர்த்தி)

மூர்த்தி ஒரு கரத்தால் கங்கையைத் தாங்குவது போலச் சித்திரிக்கப்பட் டிருக்கிறது.

இந்த விக்கிரகம் ஒரு கற்சிலை போலில்லை; உயிருள்ள ஜீவனைப் போலவே காட்சியளிக்கிறது.

உமையொரு பாகனின் விக்கிரகம் கோவிலின் பின்புறச் சாளரக் கல்லிலே செதுக்கப்பட்டுள்ளது. அந்த விக்கிரகத்தின் கலையழகை வர்ணித்து முடியாது.

**கொல்லிப்பாவை**

திருச்சிறப்பள்ளி ஜில்லாவிலுள்ள கொல்லி மலையில் தேவலோகத்தவர்களால் ஒரு மோகினி உருவம் செய்துவைக்கப் பட்டதாம். கொல்லிப்பாவை எனப்படும் அதன் அழகைப் பாராட்டும் முறையில் ஒரு ரசமான கதை சொல்லப்படுகிறது. அதாவது அந்தப் பாவையைப் பார்த்தவர்கள் அழகு மயக்கத்தில் உயிரையே விட்டு விடுவார்களாம். அதனல், அந்தப் பாவையைச் சுற்றிலும் எலும்புக்கூடுகளாகக்கிடக்குமாம்.

தேவ கோஷ்டம் சிற்பியின் கலைப் புலமையை வெளியிடுகிறது. சிறு கருங் கல்லிலே தாமரைப் பூக்களைச் சலாகையால் தோண்டி மெருகுகொடுத்திருக்கிறான் சிற்பி. அந்தப் பூக்களின் இதழ்களோ, கொடிகளின் விளிம்புகளோ கொஞ்சங்கூட அழியாமல் உள்ளன.



துவாரபாலகர்

ஆலயங்களுக்கு முன்னால் துவார பாலகர் விக்கிரகங்கள் நிற்பதைப்பார்த்திருக்கிறோம்; ஆனால், இந்தத் துவார பாலகர் விக்கிரகம் வேறு விதமானது. இது பழைய சோழ மன்னர்களின் வீர பராக்கிரமத்தை வெளியிடுகிறது. யார் கோவிலைக் கட்டுகிறார்களோ அவர்களுடைய உருவங்களையே அந்தக் கோவிலுக்குப் பாதுகாவலர்களாக நிறுத்தி வைப்பது சோழர் கால ஐதீகம். இதை இந்தத் துவார பாலகர் விக்கிரகம் காட்டுகிறது.

இந்தச் சிறிய சமஸ்தானம் கி. பி. ஆறாம் நூற்றாண்டிலிருந்து பதினொன்றாம் நூற்றாண்டுவரை சைவர்களுக்கும் சமணர்களுக்கும் கலாபீடமாக விளங்கியிருக்கிறது. பத்தாவது நூற்றாண்டில் வேளிர் வம்சத்தினருக்கும் பல்லவர்களுக்கும் ஏற்பட்ட யுத்தத்தில் கொடும்பாளூர் நகரம் அழிக்கப்பட்டுவிட்டது; அதில் எஞ்சியுள்ளவைதான் சோழர்களின் இந்த அழியாத சிற்பங்கள்.

*

### தனிச் சிறை!

எகிப்தில் பத்திரிகைக்காரர்களுக்கு ஒரு புது கௌரவத்தை அளிக்கப் போகிறார்கள். அதாவது அவர்களுக்கென்று தனியாக ஒரு சிறைக்கூடம் கட்ட ஏற்பாடாகிறது. பத்திரிகைச் சட்டங்களை மீறும் பத்திரிகைக்காரர்களை அடைத்து வைப்பதற்காக, ஜெயில் நிர்வாக இலாகாவின் அபிப்பிராயப்படி அரசாங்கக் கட்டிட இலாகாவின் கொத்தர்கள் ஒரு புது ஜெயிலைக் கட்டத் திட்டம் தயாரித்திருக்கிறார்கள். இதைக் கட்டி முடிக்க 19,000 எகிப்தியப் பவுன்கள் செலவாகுமாம்.

—ஒர்ல்டீ'ஸ் பிரஸ் நியூஸ்

# பாதாளப் பயணம்



**பார் லாகர்க்விஸ்ட்**

‘லிப்ட்’டின் (Lift) கதவைத் திறந்து, பட்டுக் கம்பளியும் பவுடரும் அணிந்த அந்தப் பெண் ஜீவனை அன்போடு அரவணைத்துக்கொண்டு உள்ளே சென்றான், ஜான்ஸன். மெத்தையிடப்பட்ட இடத்தில் இருவரும் நெருங்கி உட்கார்ந்தனர். உடனே, அந்த லிப்டும் இறங்க ஆரம்பித்தது. அந்த இளம் யுவதி ஒயின் ஈரம்பட்ட தனது அதரங்களைக் குவித்தாள்; அவர்கள் முத்தினார்கள். தாரகை நிறைந்த வானமே மணி முகடாய் அமைந்த மொட்டை மாடியில் அவர்கள் உணவருந்தினார்கள். இப்போது அவர்களிருவரும் இன்பானுபவத்தை நாடி, கீழே போய்க்கொண்டிருந்தார்கள்.

“என் அன்பே! அங்கே இருந்தது எவ்வளவு சுகமாயிருந்தது? உங்களோடு அங்கே இருந்தது, நாமிருவரும் நட்சத்திரங்களோடு நட்சத்திரமாயிருப்பதுபோலல்லவா இருந்தது? காதல் என்பது என்ன என்று இப்போதுதான் புரிந்துகொள்ள முடியும். நிஜமாகவே நீங்கள் என்னைக் காதலிக்கிறீர்கள் - இல்லையா?”

அவனுடைய முத்தம் அவளுக்குப் பதிலளித்தது; லிப்டும் இறங்கியது.

“நீ வந்து சேர்ந்ததே பெரிசு. நீ வந்திராவிட்டால் எனக்குப் பைத்தியம் பிடித்திருக்கும்.”

“வாஸ்தவந்தான். ஆனால், அவரை விட்டு விட்டு வருவது எவ்வளவு கஷ்டமென்பதை எண்ணிப் பாருங்கள். நான் கிளம்பியவுடனேயே, ‘எங்கே போகிறாய்?’ என்று கேட்டார். நானும், ‘நான் எங்கேயும் போவேன். என்னை நீர் கட்டுப்படுத்த முடியாது’ என்று சொல்லிவிட்டேன். பிறகு நான் உடை உடுத்திக்கொள்ளும் போதெல்லாம்

பதித்துரோக மிழைத்தவனும் பெண்களை ஏமாற்றிக் கெடுக்கும் ஒரு தூர்த்தனும் சுகித்திருக்க விரும்புகையில், அவர்களை நரகமே வழிவிட்டுத் தன்னகத்தே இழுத்துக் கொள்ளுகிறது. நரகத்திற்குப் போயும் கூட அவர்களுடைய நீசத்தனம் ஒழியவில்லை; அவர்களுக்கு இடைஞ்சல்களும், தடங்கல்களும் ஏற்படுவதும் நிற்கவில்லை. இழிந்துபட்ட சேர்க்கையின் சூழ்நிலைகளை அபாரமாக விவரிக்கும் இக்கதையை எழுதியவர், ஸ்வீடன் தேசத்து எழுத்தாளர். தமிழாக்கியவர் ஸ்ரீ ரகுநாதன்.



என்னை வெறித்துப் பார்த்துக்கொண்டே யிருந்தார். இதைத்தான் நான் உடுத்திக்கொண்டேன். பாருங்கள். இது எனக்கு நன்ருயிருக்கிறதா? உங்களுக்கு எது பிடித்திருக்கிறது? பழுப்பு வண்ணந்தானே!''

"என் கண்ணே! உனக்கு எல்லாமே நன்ருய்த்தானிருக்கிறது. இத்தனை அழகுடன் உன்னை நான் என்றுமே பார்த்ததில்லை'' என்று சொல்லிக் கொண்டே, அவளுடைய ஆடையைப் பற்றினன். அவர்கள் மூத்தினர்கள். விடுபட வெகுநேரம் பிடித்தது; லிப்டும் இறங்கிக்கொண்டு வந்தது.

"நான் புறப்பட்டவுடனே, அவர் என் கரத்தைப் பற்றி நெரியாய் நெரித்தார். அந்த வேதனை இன்னுங்கூட இருக்கிறது. வாய் திறந்து ஒரு வார்த்தை பேசட்டுமே! அவர் எப்படிப்பட்ட மூரட்டு ஆத்மா என்பது உங்களுக்குத் தெரியாது. 'சரி. நான் போய் வருகிறேன்' என்றேன். அதற்கும் பதிலில்லை. அவருடைய போக்கே அர்த்தமற்றது; ஒத்து வாராதது. என்னல்



அவர் போக்கைத் தாங்க முடியாது.''

''சுத்த அப்பாவி!''

''என்னவோ, நான் கொஞ்ச நேரம் வெளியே போய் சந்தோஷமாயிருப்பதுகூட அவருக்குப் பொறுக்கவில்லை. உலகத்திலேயே இவரைப்போல வைராக்கியம் படைத்தவரை நான் கண்டதே இல்லை. எதையும் அவரால் சகஜமாய்க் கொள்ள முடியாது. அவருக்கு எல்லாமே குடி முழுகிப் போகிற மாதிரிதான்.''

''இதைக் கட்டிக் கொண்டா நீ மாரடித்தாய்?''

''ஆமாம், ஒரே பேரெழவுதான். இத்தனை கஷ்டமும் பட்டேன் என்று யாருக்கேனும் தெரியுமா? உங்களைச் சந்திக்கும் வரையிலும் எனக்குக் காதல் என்பதே இன்னதென்று தெரியாது.''

''காதலீ!'' என்று சொல்லிக் கொண்டே, அவளை இறுகத் தழுவி அணைத்தான். லிப்ட் இறங்கிக்கொண்டே யிருந்தது!

அணைப்பி லிருந்து விடுபட்டு, திணறிய மூச்சைக் சுதாரித்துக் கொண்டு அவள் சொன்னாள்: ''யோசித்துப் பாருங்கள். சொப்பனமும் சொர்க்கமுமாக உங்களோடு அங்கே, தாரகை ஒளியில் இருந்தது எவ்வளவு ஆனந்தமாயிருந்தது? அதை என்னால் மறக்கவே முடியாது. இந்த விஷயங்களி லெல்லாம் ஆர்தர் வெறும் உதவாக்கரை. எல்லாவற்றிலும் அவர் கருர் பேர்வழி. மருந்துக்கேனும் அவரிடம் கவிதா ரசனை உண்டா? புரிந்து கொள்ளக்கூடப் புத்தி கிடையாது.''

''இதை சகிக்க முடியாதே!''

''பின்னே, இல்லையா? ஆனால் அதைப்பற்றி யெல்லாம் இப்போ என் நினைக்கணும்? இப்போ நாம் சந்தோஷமாயிருக்கத் தானே போகிறோம்! உண்மையிலேயே, நீங்கள் என்னைக் காதலிக்கிறீர்கள்; இல்லையா?''

''நானா?'' என்று பதிலளித்துவிட்டு, அவளை அவன் இறுக அணைத்து, மூச்சைத் திணற அடித்தான். அந்த லிப்ட் கீழே இறங்கிக் கொண்டே யிருந்தது. அவன் அவள்மேல் சாய்ந்தான்.



அவளை ஆரத் தழுவினான். அவள் முகம் சிவந்தது.

"நாமிருவரும் என்றைக்குமில்லாதபடி இன்று சுகிக்கலாமா?—நீ!..." என்று ரகசியம் பேசினான் அவன். அவள் குவிந்த கண்களோடு அவனை இழுத்து அணைத்துப் புரண்டாள். அந்த லிப்ட் இறங்கியது. இறங்கிக் கொண்டே யிருந்தது!

ஜான்ஸன் நிமிர்ந்து உட்கார்ந்தான். அவன் முகம் வெளுத்தது: "இந்த லிப்டுக்கு என்ன கேடு வந்தது? நாமும் எவ்வளவோ நேரமாயிருந்து பேசிக் கொண்டிருக்கிறோம். இது நிற்கவே இல்லையே!"

"ஆமாம், பொழுது போவதே தெரியவில்லை."

"வாஸ்தவம், நாம் யுகக் கணக்காகவல்லவா இருக்கிறோம்? இதெல்லாம் என்ன?"

அவன் அளிவழியே பார்த்தான். வெளியில் ஒரே இருட்டு. லிப்ட் மட்டும் ஒரேயடியாக, கீழே இறங்கி இறங்கிப் போய்க் கொண்டே யிருந்தது.

"அட கடவுளே! முடிவற்ற கெடுபள்ளத்தில் போவதுபோலல்லவா இருக்கிறது! நாம் இப்படியே போய்க்கொண்டே யிருக்க வேண்டியதுதானா?" அவர்கள் கீழே பார்க்க முயன்றனர். ஒரே மையிருட்டு. அவர்கள் அந்த இருளில் கீழே—அதற்கும் கீழே சென்றுகொண்டே யிருந்தனர்.

"இது பாதாளத்துக் கல்லவா போய்க்கொண் டிருக்கிறது!" என்றான் ஜான்ஸன்.

"ஐயோ!" என்று அந்த யுவதி முனகினாள். "எனக்குப் பயமா யிருக்கே. பொத்தானை அமுக்கி நிறுத்துங்களேன்" என்று அவன் கைகளை இறுகப் பற்றினாள் அவள்.

ஜான்ஸன் பொத்தானை பலங் கொண்ட மட்டும் அழுத்தினான். பயனில்லை. லிப்ட் கீழே இறங்கியது, இறங்கியது. கீழே - அதற்கும் கீழே - கீழே......

"பயமா யிருக்கிறதே! நாம் என்ன செய்வது?" - அவள் கதறினாள்.

"வாஸ்தவம்தான். இப்போ நாம் என்னத்தைச் சாதிக்க முடியும்? எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும்போ லிருக்கிறது" என்றான் ஜான்ஸன்.

அந்த யுவதி பீதி யடைந்தாள். கண்ணீர் பெருக்கினாள்.

"என் அன்பே! இந்தா, அழாதே. அமைதியா யிரு. ஒன்றும் நடந்துவிடாது. நாமிருவரும் நெருங்கித்தானே இருக்கிறோம். என்ன நடக்கிறதென்றுதான் பார்ப்போமே. எங்கேனும் இது நின்றுதானே ஆகவேண்டும்?"

அவர்கள் காத்திருந்தனர்.

"நாம் சந்தோஷமா யிருக்கணும்னு புறப்பட்ட வேளையிலா இப்படி நடக்கிறது, என்பதை யோசித்துப் பார்த்தால்......?"

"வயித்தெரிச்சல்தான்!"

"நீங்கள் என்னை நிசமாகவே காதலிக்கிறீர்களா?"

"அடி என் சிங்காரக் குட்டி!" என்று சொல்லிக் கொண்டே, அவன் அவளை அணைத்துப் பிணைந்தான்.

கடைசியில் அந்த லிப்ட் திடீரென நின்றது. எங்கும் ஒரே ஒளிமயம் கண்களை உறுத்திற்று. அவர்கள் பாதாளம் சேர்ந்துவிட்டார்கள். பாதாளக் கபாடத்தை ஒரு பைசாசம் திறந்தது.

"வர்ங்க" என்று வணங்கி வரவேற்றது பைசாசம். திருப்

பிடித்த ஆணியில் தொங்கும் துணியைப்போல, கழுத்திலிருந்து மயிரடர்ந்த ஒரு நீல அங்கி தொங்கிற்று. பைசாசத்தைக் கண்ட ஜான்ஸனும் அந்த யுவதியும் பதுங்கிப் பயந்து வெளிவந்தனர்.

“அட கடவுளே! நாம் எங்கிருக்கிறோம்?’

அந்தப் பைசாசத்தின் முன் நடுநடுங்கிப்போய் இருவரும் கதறினர்.

அந்தப் பிசாசோ ரத்தினச் சுருக்கமாக அவர்களுக்கு சந்தேக நிவர்த்தி செய்தது.

“ஆனால் நீங்க நினைக்கிறபடி பாதாளம் அப்படி ஒண்ணும் மோசமில்லே. இங்கே நீங்க ஆனந்தமாப் பொழுதைக் கழிக்கலாம். எல்லாம் இன்னைக்கி ஒரு ராத்திரிப் பொழுது மட்டுந்தானே!”

“ஆமா ஆமா. இன்றைக்கு மட்டுந்தான். ரொம்பநாள் இருப்பதாய் உத்தேசமில்லே” என்று படபடத்து முந்திக்கொண்டான் ஜான்ஸன். அந்த யுவதி நடுநடுங்கிப்போய் அவனைத் தொத்தி அணைத்தாள். அங்குள்ள நெருப்பின் ஒளி பச்சையும் மஞ்சளுமாய்த் தகதகத்தது; கண்களைப் பறிக்கும் அத்தனை காந்தி. ஏதோ எரிந்து கருகும் நாற்றமும் புலனாயிற்று. அந்த நாற்றத்தை ஓரளவு உணர்ந்தவுடன் அவர்கள் இருவரும் வீடுகள் நிறைந்த சந்தை வீதியொன்றில் நிற்பதை உணர்ந்தார்கள். அந்த இருளிலும் அவ்வீடுகளின் ஒளிமயமான வாசல்கள் தெளிவாகத் தெரிந்தன. ஜன்னல் கதவுகள் மூடிக் கிடந்தன எனினும், அங்குள்ள தொண்டுகளின் மூலம் அந்தப் பிரகாசமான ஒளிப் பிழம்பைக் காண முடிந்தது.

“நீங்கள் இருவரும் மனமொத்த காதலர்களா?” என்று அந்தப் பிசாசு கேட்டது.

“ஆமாம். அப்படித்தான்” என்று அந்த யுவதி சொல்லிவிட்டு, ஜான்ஸனைக் காதல் ததும்ப, கடைக்கண்ணால் நோக்கினாள்.

“அப்படியானால் — இதுதான் வழி. என்னோடு வாருங்க” என்று அழைத்தது பிசாசு.

அவர்கள் இருவரும் அந்தச் சந்தை வீதியை விட்டு, இருளடைந்த தெருவொன்றில் நடந்தார்கள். எண்ணெய் மக்கும், அழுக்கும் அடைந்த அந்தத் தெருவின் தலைவாசலில், உடைந்துபோன பாடாவதி விளக்கு ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது. “இதோ—இங்கேதான்” என்று சொல்லிவிட்டு, கதவைத் திறந்துவிட்டு, சாதுரியமாகப் பின் தங்கியது பிசாசு.

அவர்கள் உள்ளே சென்றனர். தாடி வளர்ந்த, வாயின்மேல் சாயம் பூசிய பெட்டைப் பிசாசு ஒன்று தொப்பைச் சரீரத்துடன் எதிர் வந்து அதிதிகளை வரவேற்றது. நல்ல கொழுத்த பிசாசு அது. இறைக்க இறைக்க சுவாசித்துக் கொண்டு, தன்னுடைய அன்பு ததும்பும் முண்டக் கண்களால் பார்த்து, புன்னகை புரிந்தது. அதனுடைய தலைக் கொம்புகளில் தலைமயிரைப் பின்னி முடிந்து அவற்றை நீல நாடா கொண்டு கட்டியிருந்தது.

“ஜான்ஸனும், யுவதியுந்தானே? நீங்களிருவரும் அந்த எட்டாம் நம்பர் அறைக்குப் போங்க” என்று சொல்லி ஒரு பெரிய சாவியைக் கொடுத்தது. அவர்கள் எண்ணெய் மக்கடைந்த படிகளில் ஏறினார்கள். அது வழுக்கிற்று. அவர்கள் இன்னும்

இரண்டு கட்டு மேலே செல்ல வேண்டியிருந்தது.

அந்த அறை சிறியது; மிகவும் பழைய அறை. மத்தியில் கிடந்த மேஜைமீது ஒரு அழுக்கடைந்த பழந்துணி விரிப்பு; சுவரோரம் படுக்கையின் கலையாத விரிப்பு. அவர்களுக்கு எல்லாம் பிடித்துப் போயிற்று. இருவரும் தங்கள் கோட்டுகளைக் கழற்றி விட்டு, முத்தமிட்டுக் கொண்டார்கள்.

அந்த அறையின் இன்னொரு வாசல் வழியாக ஒரு மனிதன் சந்தடியின்றி அமைதியாக நுழைந்தான். அவன் ஒரு சப்ளையர் போல உடையணிந்திருந்தான். எனினும் ஆடைகள் சுத்தமாயிருந்தன. அவனுடைய அங்கியின் முன் புறம் பிரகாசமாக இருந்தது. முடுக்கி விட்ட சூத்திரப் பாவை போலச் சந்தடியின்றி அவன் வந்தான். நிலை குத்தி நின்ற கண்கள்; இறுகிய பார்வை; முகத்தில் சுருக்கங்கள்; நெற்றிப் பொருத்தில் குண்டுக் காயம். அந்த அறையை அவன் ஒருவாறு சுத்தம் செய்தான். படுக்கையறைப் பாத்திரங்களை ஒழுங்காக எடுத்து வைத்தான்.

அவர்கள் முதலில் அவனைக் கவனிக்க வில்லை. ஆனால் அவன் வெளியில் செல்லும் போது மட்டும், "எங்களுக்குக் கொஞ்சம் ஒபின் வேண்டும். அரைபாட்டில் 'மதிரா' கொண்டுவா" என்று சொன்னான் ஜான்ஸன். அவன் அதை ஏற்றுத் தலைவணங்கி மறைந்தான்.

அவன் போனதும், அவள் ஜான்ஸனின் மடியில் உட்கார்ந்து கொண்டாள். ஒரே பரமானந்தம்!

"இப்படிப்பட்ட இடத்திலே நாமிருவரும் ஏகாந்தமாக இருப்பது எவ்வளவு ஆனந்தமாயிருக்கிறது! யோசித்துப் பாருங்கள். கவிதை நிரம்பிய இந்த அனுப்



வத்தை நான் மறக்கவே முடியாது...'' என்று அவள் ஆரம்பித்தாள்.

'' அடி என் கற்கண்டே !'' என்று கூறிக்கொண்டே அவளை முத்தினன்.

அந்த மனிதன் மீண்டும் அமைதியாக உள்ளே வந்தான். யந்திரம் போல, மேஜை மீது கோப்பைகளை வைத்து, அவற்றில் மதுவை வார்த்தான். விளக்கொளி அவன் முகத்தில் அடித்தது. சவக்களையையும், குண்டுக் காயத்தையும் தவிர வேறு ஒன்றும் இல்லை.

அந்த யுவதி துள்ளி விழுந்து கூச்சலிட்டாள்:

'' ஆர்தர்! நீங்களா?—ஆர்தர்! ஆ கடவுளே! ஆர்தர் இறந்து விட்டார்!

'' தற்கொலை !''

அந்த மனிதன் அசையவில்லை. அவன் பார்வை மட்டும் நிலைகுத்தி நின்றது. முகத்தில் வேதனை இல்லை. விகாரமாக இருந்தது.

''ஆர்தர்! என்ன காரியம் செய்துவிட்டீர்? இதை எப்படித் துணிந்து செய்தீர்? இப்படி ஏதாவது நேருமென்று தெரிந்திருந்தால் வீட்டிலேயே இருந்து தொலைந்திருப்பேனே. நீங்கள் ஒரு வார்தகை கூடச் சொல்லவில்லையே? நீங்கள் சொல்லாவிட்டால் எனக்கென்ன தெரியும்? ஆ—கடவுளே !......''

அவள் பாதாதிகேசம் நடுநடுங்கினள். அந்த மனிதனை அந்நியன் போலப் பார்த்தான். குழிந்து பூப்படர்ந்த அவன் கண்கள் எல்லாவற்றையும் ஊடுருவுவது போல் தோன்றின. அவனுடைய வெளுத்த முகம் விளக்கொளியில் துலாம்பரமாகத் தெரிந்தது. அந்தக் குண்டுக் காயத்தில் ரத்தத்தையே காணும். வெறும் ஓட்டை!

'' இது பயங்கரமானது. நான் இங்கே இருக்க முடியாது. இங்கிருந்து உடனே போய்த்தானக வேண்டும். இதை என்னல் தாங்க முடியாது!''

களைந்து வைத்த ஆடைகளை வாரிச்சுருட்டினள். தொப்பியையும் அங்கியையும் பற்றியெடுத்துக்கொண்டு வெளியே ஓடினள். ஜான்ஸனும் பின் தொடர்ந்தான். இருவரும் படிவழியே இறங்கினர். அந்த யுவதி எச்சில் தொட்டிக்கும் சிகரெட் படிக்கத்துக்கும் இடையில் உட்கார்ந்து விட்டாள். கீழ் வீட்டில் அந்தக் கிழட்டுப் பெட்டைப் பிசாசு தன் கொம்புகளைச் சிலுப்பிக் கொண்டு சிரித்தது.

தெருவீதிக்கு வந்து படபடப்பு நின்ற பின்தான் அவள் தன் உடைகளை உடுத்திக் கொள்ள முடிந்தது. உடையைத் தூசி தட்டினள்; பவுடரும் பூசிக் கொண்டாள். ஜான்ஸன் அவள் இடையில் கை கொடுத்து அணைத்து, அவளுடைய கன்னங்களில் வழிந்தோட நின்ற கண்ணீர்த் துளிகளைத் தன் அன்பார்ந்த முத்தத்தால் துடைத்தான். மீண்டும் அவர்கள் சந்தை வெளிக்கு வந்தனர்.

அந்தப் பெரிய பிசாசு அங்கு உலாத்திக்கொண்டிருந்தது. அவர்கள் அதை மீண்டும் சந்தித்தனர்.

'' ஓ! அதுக்குள்ளே வந்துட்டீங்களா? நல்லா, சுகமா இருந்திருப்பீங்க!'' என்றது பிசாசு.

'' அதெல்லாம் கிடையாது; ரொம்ப மோசம்'' என்றுள் அந்த யுவதி,

"அப்படிச் சொல்லாதிங்க. இதையெல்லாம் மோசமாகவே நீங்க கருதப்பிடாது. அந்தக் காலத்திலே நீங்க வந்திருந்தாத் தெரியும். இப்பத்தான் நரகமே மாறிப் போச்சே. இந்தக் காலத்திலே, நரகத்தைப் பற்றிப் புகார் சொல்லவே இடமில்லையே? எல்லாத்தையும் இயற்கைக்கு விரோதமில்லாமெ, ஏற்பாடு பண்ணிருக்கோம். அவாளவாள் இஷ்டப்படி அவாளவாளே அனுபவிச்சிக்கலாமே!"

"ஆமா, இங்கே எல்லாமே மானுஷிகமாத்தான் இருக்கு. வாஸ்தவந்தான்" என்றான் ஜான்ஸன்.

"அது மட்டுமா? இங்கே நாங்க எல்லாத்தையும் நவநாகரிகமாப் பண்ணி, நவீன முறையிலே அமைச்சிருக்கோம். நாங்களும் சமுதாய வளர்ச்சியை ஒட்டிப் போகணும் பாருங்க. இப்போதெல்லாம் இங்கே ஆத்ம வேதனைதான் நரக தண்டனை!" என்று சொல்லிற்று, பிசாசு.

"கடவுள் நல்லாயிருக்கட்டும்!" என்றாள் யுவதி.

"நமஸ்காரம். சரி, போயிட்டு, திரும்ப எப்ப வருவீங்க?" என்று வணங்கி, செலவு கூறிவிட்டு, பாதாளக் கதவைச் சாத்திற்று, பிசாசு.

அவர்கள் மேலேறினர்.

"அப்பா! இப்போதுதான் மனசு குளிர்ந்தது" என்று இருவரும் வந்து லிப்டில் அமர்ந்தனர்.

"நீங்கள் மட்டும் இல்லாவிட்டால், என்னால் சமாளித்திருக்கவே முடியாது" என்று அவள் சொன்னாள்.

அவளை அவன் இழுத்தான்; முத்தமிட்டான்.

"நினைத்துப் பாருங்கள். அவர் எப்படித் தற்கொலை செய்து கொண்டார்? அவருடைய நினைவுகளே அலாதி. விஷயத்தை நேரடியாக ஏற்றுக் கொள்ளும் சுபாவமே கிடையாது. எல்லாம் அவருக்கு ஜீவமரணப் பிரச்னைதான்" என்றாள் அந்த யுவதி.

"வெறும் முட்டாள்தனம்!" என்று சொன்னான் ஜான்ஸன்.

"என்னிடம் ஏதாவது அவர் சொல்லியிருந்தால், நான் வீட்டிலாவது தங்கியிருக்கலாம். வேண்டுமென்றால், நாமிருவரும் இன்னொரு நாள் கூடச் சந்தித்திருக்கலாம்" என்று சலித்துக் கொண்டாள் அவள்.

"ஆமா, அதுவும் சரிதான். அப்படியும் செய்திருக்கலாம்"

"ஆனால், இப்போது அதை நினைத்து என்ன புண்ணியம்? எல்லாம்தான் தீர்ந்துபோச்சே!" என்று காதோடு காதாய்ச் சொல்லிவிட்டு, அவனுடைய கழுத்தைக் கரங்களால் வளைத்தாள் அந்த யுவதி.

"என் கட்டிக் கரும்பே! அதுவும் சரிதான். எல்லாம்தான் தீர்ந்துபோச்சே" என்று பதிலுக்கு ஆமோதித்துவிட்டு, அவளை இறுகத் தழுவி அணைத்தான்.

லிப்ட் மேலே கிளம்பியது.

✲

பக்கத்து வீட்டுக்காரன் ஒரு முகம் பார்க்கும் கண்ணாடி.

—ஆங்கிலப் பழமொழி

# ஹைதராபாத் அரசியல்

- - ரபி அஹமத் - -

ஒரு கோடி எழுபது லட்சம் ஜனத் தொகையும், 82,698 சதுர மைல் பரப்பும் கொண்ட ஹைதராபாத் சமஸ்தானம், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தால் இந்தியாவில் நிறுவப்பட்ட குடியேற்ற ஆட்சிப் பிரதேசத்தின் கேந்திர ஸ்தானமாக விளங்குகிறது. முகலாய அரசாங்கத்திற்கு உட்பட்ட ஒரு மாகாணமாக விளங்கிய இந்தச் சமஸ்தானம், முகலாய சாம்ராஜ்யம் சீர்கெட ஆரம்பித்ததும், தனித்து விளங்க ஆரம்பித்தது. அவுரங்கசீப் இறந்ததும், நாடெங்கும் அராஜகம் தாண்டவமாடியது. தட்சிணத்தில் சுபேதாராக இருந்த அஸீப் ஜா சர்வாதிகார மன்னனாக ஆனான். அஸீப் ஜாஹீ என்ற வம்சமும் ஏற்பட்டது. அஸீப் ஜாவின் நேரடியான வழித் தோன்றல்தான், இப்போதைய ஹைதராபாத் நிஜாம்.

1857-ல் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் கூட்டு முன்னணியில் பிரிட்டிஷ் ஆதிக்கத்தை எதிர்த்த போது, ஹைதராபாத் நிஜாம், அந்த ஒற்றுமையைச் சீர்குலைத்தார்; கிளர்ச்சியை அடக்குவதில் பிரிட்டிஷாருக்கு நிஜாம் உதவி புரிந்தார். இதற்கு முன்பே, திப்பு சுல்தான் பிரிட்டிஷாரை எதிர்த்த போது, நிஜாம் பிரிட்டிஷ் சர்க்காருக்கு உதவிசெய்து அதன்மூலம், திப்பு சுல்தானுக்கும் துரோகம் செய்தார். 1839-ல் முபரிஸுத் தௌலா ஏராளமான முஸ்லிம் வாலிபர்களுடன் பிரிட்டிஷாரை எதிர்த்தபோது, நிஜாம் ஈவிரக்கமின்றி அவர்களை நசுக்கினார். 1857-ல் ஏராளமான முஸ்லிம்கள் பிரிட்டிஷ் ரெஸிடெண்டின் காரியாலயத்தைத் தாக்கிய போது, நிஜாம் இந்தக் 'கலகக்காரர்'களை அடக்கினார்.

பிரிட்டிஷாருக்குப் புரிந்த இந்தச் சேவைகளுக்குக் கைமாறாக, "பிரிட்டிஷ் அரசாங்கத்தின் விசுவாசமிக்க நண்பர்" என்ற பட்டத்தை நிஜாம் பெற்றார். இன்று, "சுதந்திர ஹைதராபாத்" என்பது, இந்திய யூனியனுக்கும் இந்திய மக்களுக்கும் எதிராகச் செய்யப்படும் ஒரு சூழ்ச்சியே யாகும்.

"ஆஸாத் ஹைதராபாத்" என்றால், அதற்கு இந்தியாவில் பிரிட்டிஷாரின் ராணுவ, பொருளாதாரத் தளம் என்றே அர்த்தம்.

ஆந்திரம், மகாராஷ்டிரம், கர்னாடகம் ஆகியவற்றின் சிற்சில பகுதிகளை அடக்கிக்கொண்டிருக்கும் ஹைதராபாத் சமஸ்தானம், பல்வேறு இனங்களுக்கு ஒரு சிறையாகவே விளங்குகிறது. சாகுபடிக்குத் தகுதியான பிரதேசத்தில் 42 சத விகிதம், ஹிந்துக்களையும் முஸ்லிம்களையும் உள்ளிட்ட 1100 மிராசுதார்களுக்குச் சொந்தமாக இருக்கிறது.

---

இந்தியாவில் இன்று அதிகாரத் திமிருடன் வணங்காமுடி மன்னனாகத் தர்பார் நடத்துகிறவர் ஹைதராபாத் நிஜாம்தான். அவராலும் அவருடைய நிழலில் நடமாடும் பண முதலைகளாலும் அங்கே நடக்கும் அலங்கோலங்களை விவரிக்கும் இக் கட்டுரை ஸ்வதந்திராவிலிருந்து எடுக்கப்பட்டது.

---

ஹைதராபாத் நிஜாம்தான் மிகப் பெரிய மிராசுதார். இவர் தம்முடைய ஜாகீர்களிலிருந்து பெறுகிற வருமானம் இரண்டரைக் கோடி ரூபாயாகும். இதைத் தவிர, சமஸ்தானத்திலிருந்து வருஷா வருஷம் 75 லட்சம் ரூபாய் பெறுகிறார்.

ஹைதராபாத்தின் மொத்த ஜனத் தொகையில் 85 சதவிகிதத்தினர் விவசாயிகளாகவும், உழவர்களாகவும், சொந்த நிலமில்லாத தொழிலாளர்களாகவும் இருக்கிறார்கள். இவர்கள் பல ஹிந்து, முஸ்லிம் மிராசுதார்களால் நசுக்கப்பட்டு வருகிறார்கள். கிராமவாசிகளில் 60 சத விகிதத்தினர் சொந்த நிலம் இல்லாதவர்களே.

ஜனத் தொகையில் பெரும் பாலரான ஹிந்து முஸ்லிம்கள், வறுமையிலும், துன்பத்திலும், அறியாமையிலும், வேலை யில்லாத் திண்டாட்டத்திலும் கஷ்டப்படுகிறார்கள். 22½ லட்சம் முஸ்லிம்கள் ஹைதராபாத் சமஸ்தானத்தில் இருக்கிறார்கள். இவர்களில் 95 சத விகிதத்தினர் கீழ்க்கண்ட விதத்தில் தங்கள் ஜீவனத்தை நடத்துகிறார்கள்.

தொழிற் சாலையில் வேலை செய்பவர்களின் மாதவருமானம் 15 ரூபாய்.

குமாஸ்தாக்களின் வருமானம் மாதம் 30 ரூபாயிலிருந்து 60 ரூபாய்வரை.

உபாத்தியாயர்களின் மாத வருமானம் 5 ரூபாயிலிருந்து 80 ரூபாய்வரை.

ரிக்ஷா இழுப்பவர்களின் ஒரு நாள் வருமானம் 1 ரூபாய்.

டோங்காக்காரர்களின் ஒரு நாள் வருமானம் 1 ரூபாய்.

வீட்டு வேலைக்காரர்களின் மாத வருமானம் 10 ரூபாயிலிருந்து 15 ரூபாய்வரை.

போலிஸ்காரர்களின் மாத வருமானம் 20 ரூபாயிலிருந்து 30 ரூபாய்வரை.

அதிக வேலை நேரம், குறைந்த சம்பளம், வறுமை, கஷ்டம், அறியாமை—இவற்றிலே முஸ்லிம் பொதுமக்கள் சிக்கித் துயருறுகிறார்கள். பாமர முஸ்லிம்களின் வாழ்க்கைத் தரத்தையும், மிராசுதார்களும், முதலாளிகளும், பெரிய உத்தியோகஸ்தர்களுமான முஸ்லிம்களின் வாழ்க்கைத் தரத்தையும் ஒப்பிட்டுப் பாருங்கள். லட்சக் கணக்கான முஸ்லிம்களின் உழைப்பைச் சுரண்டி விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு முஸ்லிம் கூட்டம் கொழுத்து வருகிறது!

லட்சக் கணக்கான ஹிந்து, முஸ்லிம் மக்களை அடக்கி ஆண்டு, சுரண்டும் அடிப்படையிலேயே சமஸ்தானத்தின் அரசியல், சமூக, பொருளாதார அமைப்பு அமைந்திருக்கிறது. பாமர முஸ்லிம்களின் சமூக, பொருளாதார நிலைமைகளை மனத்தில் வைத்துக் கொண்டு, இந்தச் "சுதந்திர ஹைதராபாத்" பாமர முஸ்லிம்களுக்காக என்ன செய்யப் போகிறது என்பதையும் பார்ப்போம். சமஸ்தானத்தின் தற்போதைய சமூக, அரசியல், பொருளாதார அமைப்பை இப்படியே வைத்திருப்பதன் மூலம், பொது மக்களை—ஹிந்து, முஸ்லிம் ஆகிய இருவகுப்பினரையும்—வறுமைக்குள்ளாக்கிச் சுரண்டுவதை நீடிக்கச் செய்வதற்கே இந்தச் "சுதந்திர ஹைதராபாத்" கோஷம் கிளப்பப் பட்டிருக்கிறது.

மஜ்லிஸ் - இத்தேகாத் - உல் - முஸ்லிமீன் என்ற ஸ்தாபனம் முஸ்லிம் ஜாகீர்தார்களையும் முதலாளிகளையும் கொண்டதாகும். வகுப்புவாதத்தையும், வகுப்புத்



# ரெக்ஸோனுவினல் சரும ஆரோக்கியமேற்படுகிறது ... சரும ஆரோக்கியமே அழகு

அழகான மேனியின இரகசியம் சரும சுகமே. உங்கள் சருமம் ஆரோககிய முடையதாக இருக்காவிட்டால் அழகு ஏறபடாது. கேடில் எனும் மருந்து சேர்ந்ததும், விரைவில் நுரையைத் தருகின்றதுமான ரெக்ஸோனுவின் உதவியை பயன படுத்திககொள்ளுங்கள். இந்த, ஆன்டிஸெப்டிககும் குணமளித்துப் போஷிக்கும் தன்மையுடையதுமான தைலங்கள் சேர்ந்த விசேஷ மருந்தை, ரேகஸோனுவின நுரை சருமத்தின் அடிப்பாகத்திற்கு கொண்டு சேர்த்து, மலினங்களை அகற்றி சருமத்திற்கு சுகத்துடன் வனப்பையுமளிக்கிறது. மேனி அழகிற்கு சரும சுகமே அடிப்படை என்பதற்கும், ரெக்ஸோனுவின் மருந்து கலந்த நுரை சௌந்தர்யமேற்பட உதவுகிறது என்பதற்கும் சந்தேகமே கிடையாது.

**ஆடவருக்கு ரெக்ஸோனு:** ரெக்ஸோனு பெண்களுக்காகமட்டும் வழங்கப்படும் சோப்பெனக் கருதாதீர்கள். அது ஆடவருக்கும் மிக அவசியமான சோப். ரெக்ஸோனுவிலிருக்கும் கேடில் ஆன்டிஸெப்டிக்கும், குணமளிக்கும் தன்மை வாய்ந்ததுமாதலால் சருமத்தைப் பாதுகாக்கிறது. சரும சுகத்தினலேற்படும் செழித்த ஆரோக்கியம் ஆடவருக்கு தனிப் பெருமையைக கொடுக்கும்.

**குழந்தைகளுக்கு ரெக்ஸோனு:** ரெக்ஸோனுவின் மிருதுவான நுரை குழந்தையின் இளம் சருமத்தைத் தேற்றுகிறது. கேடில் மருந்து சிறு அவையவங்களை எரிசசல் அரிப்பு முதலானவைகளிலிருநது காப்பாற்றுகிறது. குழந்தைகளுக்கு மிக உத்தமமான சோப்பே உகந்ததாகும்.

★ ரெக்ஸோனுவிலுள்ள கேடில் சுகமளித்துப் போஷிக்கும தைலங்கள் சேர்ந்த விசேஷ மருந்து. அது சரும ஆரோககியத்திற்கு மிகவும் அவசியமானது.




RP. 30-50 TM

REXONA PROPRIETARY LIMITED



மிகவும்
ருசிகரமானது
இது
நல்லது !
Cadbury's
BOURN-VITA
THE IDEAL
FOOD DRINK
MADE BY CADBURYS
SPECIALISTS IN FOOD
DRINKS FOR 100 YEARS
முக்கியமாக
குழந்தைகளுக்கு
போர்ன்-வீடாவிலுள்ள கால்ஷியமும் விடமின்களும, வளரும் குழந்தைகளுக்கு வலுவான எலும்புகளும், கெட்டியாண சதையும் வளர உதவுகின்றன. பெரியவர்களுக்கு நிம்மதியான ஆழ்ந்த உறக்க மளித்து ஜீவ சக்தி ததும்பச் செய்கின்றன.
காட்பரீஸ்
போர்ன்-வீடா
கால்ஷியம், விடமின்கள் நிறைந்தது.
சப்ளைகள் கிடைக்காவிட்டால் எழுதவும்:
காட்பரி-ப்ரை(எக்ஸ்போர்ட்) லிட், (Dept 14) | தபால் பெட்டி 1417-பம்பாய்.

துவேஷத்தையும், கிளப்பி விடுவதன் மூலம், இது, மத உணர்ச்சிகளையும், அரசியல் பிற்போக்கையும் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு வருகிறது. ஹைதராபாத் ஓர் "இஸ்லாமிய நாடு" என்றும், முஸ்லிம்கள் "ஆளும் வகுப்பினர்" என்றும் கூறி பாமர முஸ்லிம்களை ஏமாற்றி வருகிறது இந்த ஸ்தாபனம்.

இன்று, சமஸ்தானக் காங்கிரஸ், அகில ஹைதராபாத் தொழிற் சங்கக் காங்கிரஸ், அகில ஹைதராபாத் மாணவர்கள் சங்கம், ஆந்திர மஹா சபை (விவசாயிகள் ஸ்தாபனம்), கம்யூனிஸ்டுக் கட்சி ஆகியவை, சமஸ்தானத்தில் பொறுப்பு வாய்ந்த ஜனநாயக அரசாங்கம் ஒன்றை அமைக்கப் போராடிக்கொண்டு வருகின்றன.

ஜனநாயக சக்திகளின் இந்தப் போராட்டத்தை வகுப்புப் பூசலாக மாற்றிவிட நிஜாம் முயன்று வருகிறார். பக்கத்து மாகாணங்களிலிருந்து, ஒன்றும் அறியாத ஏழை முஸ்லிம் மக்களை ஹைதராபாத்துக்குள் குடியேற்றுவது, இந்தத் திசையில் செய்யப்படும் ஒரு முயற்சியே. இந்தப் பாமர முஸ்லிம்கள், நிஜாமின் யதேச்சாதிகார ஆட்சியைக் காப்பாற்றுவதற்காக, கஷ்டத்தில் மூழ்கடிக்கப்படப் போகிறார்கள். போலீஸிலும், ராணுவத்திலும் இவர்களை நியமித்து, சுதந்திரத்துக்காக நடக்கும் நியாயமான மக்களின் போராட்டத்தைத் தப்பாக்கிப் பிரயோகம் செய்து நசுக்கவே உபயோகப் படுத்தப் போகிறார்கள்.

சமஸ்தானத்தில் வசிக்கும் முஸ்லிம்களின் நலனுக்கும் முன்னேற்றத்துக்கும் இதுவரை ஒன்றுமே செய்திராத நிஜாம், பக்கத்து மாகாண முஸ்லிம்களின் நலனுக்காகப் பாடுபடுவார் என்பதற்கு என்ன அறிகுறி இருக்கிறது?

முஸ்லிம்களின் நலனும் ஹிந்துக்களின் நலனும் ஒன்றுக இருக்கும்போது, இரு வகுப்பினரும் பொருளாதார ரீதியிலும் சமூக ரீதியிலும் அடக்கிச் சுரண்டப்பட்டு வரும்போது, அவர்கள் ஏன் ஒன்றுபடக் கூடாது?

ஹிந்து சகோதரர்களுடன் ஒன்று சேர்ந்து, ஜனநாயக அரசாங்கத்துக்கும், நிலச்சுவான்தாரி முறை ஒழிப்புக்கும், அடிப்படைக் கைத் தொழில்களைத் தேசிய மயமாக்குவதற்கும், சிறுபான்மையினரின் சமூக, பொருளாதார, கலைப் பாதுகாப்புக்கும் போராடுவதில்தான், ஹைதராபாத் முஸ்லிம்களின் விமோசனம் அடங்கியிருக்கிறது.

பாகிஸ்தானை எதிர்நோக்கும் பெரியதொரு பிசகை முஸ்லிம்கள் செய்வார்களேயானல், அவர்களைச் சந்தேகப் பார்வையுடனேயே பார்ப்பார்கள்.

முஸ்லிம்கள் பாகிஸ்தானையே எதிர்நோக்கிக் கொண்டிருப்பார்களானல், அவர்களைச் சந்தேகாஸ்பதமான நபர்களாகக் கருத நேரிடுவதுடன், இந்திய யூனியனிடத்தில் அவர்களுக்கு உண்மையில் விஸ்வாச மிருக்கிறது என்று நம்புவதற்கும் இடமிராது. பாகிஸ்தானிடத்தில் அவர்கள் பக்தி காட்டுவதினல் அவர்களுக்கு மற்ருேர் அபாயமும் வந்து சேரும். அதாவது அவர்கள் ஐந்தாம் படையினர் என்று கருதப்படுவார்கள்; அத்தோடு நாடெங்கும் முஸ்லிம்களுக்கு விரோதமாக துவேஷத்தை வளர்த்து வரும் ஹிந்து வகுப்பு வாதிகளுக்கு அது ஒரு நல்ல சந்தர்ப்பத்தை அளிக்கும்.


உண்மையான நல்ல பட்டை உணருங்கள்.
உண்மையான நல்ல பட்டு எப்படி உணர்ச்சிக்கு இருக்கும் என்பதை அறிய ஆடம்பரமும் மனோகரமுமான மைசூர் சில்க் அணிவதன்மூலம் தெரிந்து கொள்ளலாம். அது சாதாரண பட்டுக்களைவிட அதிக நாள் உழைக்கும்.
மைசூர் சில்க்
மைசூர் கவர்ன்மெண்ட் தயாரிப்பு.
கவர்ன்மெண்ட் சில்க் வீவிங் பாக்டரி, மைசூர்.


சைபால்
CIBOL
சைபால்
for RING WORM
SOUTH INDIAN M
முகப்பரு, சேத்துப் புண், சிரங்கு, வேனல் கட்டி, தீப்பட்ட புண், கரப்பான் முதலிய வைகளுக்குக் கை கண்ட மருந்து
தயாரிப்பவர்கள்:
தி சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி, மதுரை

# ★ குழந்தைகளுக்கு ஆஸ்த்மா ★

வைத்தியர்

ஆஸ்த்மா வயது முதிர்ந்தவர்களுக்குத்தான் வரும் என்று கருதப்படுகிறது. இருந்தாலும் அக்கொடிய நோய் சிறுகுழந்தைகளையும்கூடத் தாக்கி, அவர்களையும் பெரியவர்களுக்குத் தொந்தரவு செய்வது போல் வாழ்க்கை முழுவதும் வாட்டி வதைக்கிறது. குழந்தைகளுக்கு இந்த நோய் வந்தால் தடுக்க ஒரே வழிதான் இப்பொழுது கையாளப் படுகிறது. உள் நாக்கு வளர்வதைத் தடுக்க, அதை 'ஆப்ரேஷன்' மூலம் நீக்கி விடுவதுதான் அந்தச் சிகிச்சை. இந்தச் சிகிச்சை முறை தற்காலிகமாகக் குணப்படுத்தினாலும், உள் நாக்கு வளர வளர இந்த வியாதி மீண்டும் பாதிக்கத் தொடங்குகிறது. ரேடியத்தின் உதவி கொண்டு இந்த வியாதியைத் தடுக்கலாம் என்று சமீப காலத்தில் கண்டுபிடித்திருக்கிறார்கள். ரேடியத்தின் மூலம் சிகிச்சை பெற்ற 25 பையன்களிலும் 9 பெண்களிலும் பாதிக்கு மேற்பட்டவர் வியாதி குணமடைந்து வீடு திரும்பினர். சிகிச்சை பெற்ற 34 குழந்தைகளில் 15 குழந்தைகள் பரிபூரணமாகக் குணமடைந்தனர். 5 குழந்தைகள் பூரணமாகக் குணமடையா விட்டாலும், இருமல் எப்பொழுதாவது வருகிறதே யொழிய முன்போல் வியாதி கடுமையாக இல்லை. மூன்று குழந்தைகள் மெல்ல மெல்ல குணமடைந்தார்கள். மூன்றில் இரண்டு பங்கு நோயாளிகள் குணமடைந்ததே ஒரு பெரிய வெற்றி என்றுதான் சொல்ல வேண்டும்.

'க்ரோயி-பர்னம்' என்கிற ஒரு புதிய கருவியின் துணை கொண்டுதான் இந்தச்சிகிச்சை செய்கிறார்கள். ஒரு நீண்ட கம்பி முனையில் ஒரு சிறு குழாய் இருக்கிறது. முனையில் உள்ள இந்தச் சிறு அறை போன்ற குழாயில்தான் ரேடியத்தை வைத்திருக்கிறார்கள். இந்தக்கம்பியை வாய்க்குள் செலுத்தி ரேடியம் இருக்கும் குழாயை அடி நாக்குப் பக்கத்தில் இருக்கும்படிப் பிடித்துக் கொள்ளுகிறார்கள். இம்மாதிரி இரண்டு அல்லது மூன்று நிமிஷங்கள் வைத்திருக்கிறார்கள். மிக நீண்ட நேர சிகிச்சை என்றால் 8 நிமிஷத்துக்கு மேற்படாது. அடி நாக்கின் தேவையில்லாத வளர்ச்சியைக் குறைக்க, நான்கு முறைகள், சிலருக்கு அதிகப்படியாகப் போனால் ஆறு முறைகள் இம்மாதிரி சிகிச்சை செய்தால் போதும். இந்தச் சிகிச்சையினால் இரண்டு நன்மைகள் விளைகின்றன என்று இதைக் கையாண்ட டாக்டர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். ஒன்று, தீங்கு விளைவிக்கக் கூடிய, தேவையில்லாத அடி நாக்கு வளர்ச்சியைக் குறைக்கிறது. மற்றொன்று மூக்கு ஒழுகாமலும் நாசித் துவாரங்களில் பாக்டீரியா என்னும் சிறிய அணுக்கள் அதிகமாகத் தோன்றாமலும் செய்கிறது. இந்தப் புது முறை சிகிச்சையினால் அதிகப்பணம் செலவழியாது; ஆஸ்பத்திரி வசதிகள் இல்லாவிட்டாலும் பரவாயில்லை.

---

ஆஸ்த்மா என்று சொல்லப்படும் இளைப்பு நோய் சிறு குழந்தைகளையும்கூடப் பிடித்துவிடுகிறது என்னும் செய்தி அதிசயமாக இருக்கும். ஆனால் அது உண்மை, அதற்குச் சுலபமாகச் சிகிச்சை செய்யும் புது முறையை இக்கட்டுரை விளக்குகிறது.

நேர்த்திக்கும்
உறுதிக்கும்

# சாரதி

கைத்தறி நெசவுகள்

ஏ. ஆர். பி. சாரதி
தபால் பெட்டி நெ. 45
மதுரை

## உங்கள் குழந்தைக்கு புத்துயிர் அளியுங்கள்



ஜம்மியின் லிவர்க்யூர் ஒன்று தான் சிகிச்சைக்கு உள்படாது என்று கைவிடப்பட்ட குழந்தைகளின் பலவிதமான கட்டி வியாதிகளையும் குணப்படுத்தக் கூடியது. டாக்டர்களின் முழு நம்பிக்கைக்குப்பாத்திரமாக வுள்ளது.

## ஜம்மியின் லிவர்க்யூர்

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டிகளுக்கு அற்புதமருந்து.

ஜம்மி வெங்கடரமணய்யா அன் ஸன்ஸ்
மைலாபூர், மதராஸ் (போன் நெ. 8139),
தெப்பகுளம் திருச்சினுப்பள்ளி. பெரிய தெரு கும்பகோணம். பெங்களூர்,
பம்பாய் 4. (போன் நெ. 41593) மற்றும்: லக்னே, கல்கத்தா.

ADARTS J. 237 Tamil

# கொள்கையும் குடித்தனமும்

**ரா. கி. ரங்கராஜன்**

*விவசாயிகள் போராட்டத்துக்கும் தொழிலாளர்கள் போராட்டத்துக்கும் ஆதரவு காட்டிப் பத்திரிகை ஆசிரியர் எழுதி வந்தாலும், மேற்படி உழைப்பாளிகள் ஸ்தாபனத்தில் ஆசிரியர் தாமும் ஒரு பகுதியாக இருந்து வந்தாலொழிய, ஒரு நாளில்லா விட்டால் ஒரு நாள்; அவர் தம் கொள்கையைக் கைநழுவ விடவேண்டி ஏற்படும். அப்படிச் செய்வதற்கு நல்ல காரணம்கூட இருக்க முடியும் அதனால் ஆசிரியன் தன் வாழ்வில் இப்படி முரண்பாடுகளுக்கு இடமின்றித் தன்னைத் தயார்படுத்திக் கொண்டு கொள்கைப் போராட்டத்தில் இறங்கவேண்டும் என மறைமுகமாக வற்புறுத்துகிறது இந்தக் கதை.*

தமிழ் நாட்டில் பத்திரிகை படிக்கும் பழக்கமுள்ள 'சர்வ பேருக்கும்' 'உழவன்' பத்திரிகையின் ஆசிரியர் ராமகிருஷ்ணனைத் தெரிந்திருக்கும். 'அந்தக் காலத்திலேயே' தமிழர்களுக்குத் தேசிய உணர்ச்சி ஊட்டிய இரண்டு மூன்று சக்திகளுடன், ஆசிரியர் ராமகிருஷ்ணனின் எழுத்தையும் சேர்த்துச் சொல்லுவார்கள் விஷயம் தெரிந்தவர்கள். பத்திரிகை உலகத்தின் 'ஜடாயு' அவர்; பத்தாம் பசலிக் கொள்கைக்காரர்களின் ஜன்ம சத்துரு; விவசாயிகளும் பாட்டாளி மக்களும் அவரைத் தங்கள் தெய்வமென்றே மதித்தனர். உழைப்பவனுக்கே உலகம் சொந்தம் என்பது ராமகிருஷ்ணனின் அசைக்க முடியாத சித்தாந்தம். அந்த அடிப்படையில் அவர் நிகழ்த்திய சண்டமாருத விவாதங்கள் எத்தனையோ! எவ்வளவோ தாக்குதல்கள், எத்தனையோ அடிதடிகள்! அத்தனைக்கும் சளைக்காமல், வளைந்து கொடுத்துவிடாமல் எழுதினார். உலகமே லட்சியம் இல்லை, அவருடைய பேனாவுக்கு முன்பு.

எழுத்திலே இருந்த வேகம், அவருடைய பேச்சிலேயும் இருந்ததுதான் பெரிய ஆச்சரியம். அவருடைய எழுத்தைப் படித்தறியாத பாமர மக்களுக்கு, அவருடைய வாக்குவன்மை ஜீவ சக்தியாக இருந்தது. கனல்தெறிக்கும் அந்தப் பேச்சு, பாமர மக்களின் உடைந்த நெஞ்சங்களுக்கும், களைத்த கைகளுக்கும், உலர்ந்த கண்களுக்கும், ஒட்டிய கன்னங்களுக்கும் புதுத் தெம்பை அளித்தன. சோர்ந்து கிடந்த நரம்புகளில் முறுக்கேற்றி புரட்சி யுகத்தை, புதுச் சகாப்தத்தைத் தொடங்கி வைக்க முயன்றன அவருடைய எழுத்தும் பேச்சும்.

'உழவன்' பத்திரிகையின் சொந்தக்காரர் ரங்கசாமி நாயுடுவுக்கு, பதினாயிரக் கணக்கில் பத்திரிகையை அச்சடித்து, லட்சக் கணக்கில் பொருள் சேர்க்கும் 'வித்தை' தெரியாது. இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்பு, ஒரு நோக்கமும் இல்லாமல்

நடத்தி வந்த 'உழவன்' பத்திரிகையை இப்போதுதான்—அதுவும் தம்முடைய ஆப்த நண்பரான ராமகிருஷ்ணனுக்காகவே—ஜீரணோத்தாரணம் செய்திருந்தார். பத்திரிகை இன்னும் பூரண வளர்ச்சி யடையவில்லை. ராமகிருஷ்ணன் 'பூர்வாசிரம'த்தில் தம்முடைய வணங்காமுடி சுபாவத்தினால் பத்திரிகை முதலாளிகள் பலரை விரோதித்துக்கொண்டிருந்தது, பத்திரிகையின் முன்னேற்றத்துக்குப் பெரிதும் தடையாயிருந்தது. அத்துடன், ஆசிரியர் ராமகிருஷ்ணனின் கருத்து பலருக்குக் கசப்பாயிருந்தது. 'பரம்பரை பரம்பரையாக வந்த என் நிலத்தை கேவலம் என் பண்ணையாளிடம் விட்டுவிடுவதாமே! நல்ல நியாயம்!' என்று ஒவ்வொரு மிராசுதாரும் உறுமினார். "மதமே வேண்டாமாமே! உழைப்பே சுவர்க்கமாமே! என்ன அக்கிரமம்! இவனுக்கு ரௌரவாதி நரகம்தான்!" என்று சாபம் கொடுத்தார்கள் சநாதனிகள். பத்திரிகையை நசுக்கி, ஆசிரியர் ராமகிருஷ்ணனையும், சொந்தக்காரர் ரங்கசாமி நாயுடுவையும் 'கூண்டோடு கைலாசம்' அனுப்பிவிடக்கூட முயற்சிகள் நடந்தன. 'நித்திய கண்டம், பூரணாயுசு' என்கிற ரீதியில் பத்திரிகை நடைபெற்று வந்தது.

இத்தகைய நிலையில் ஆசிரியர் ராமகிருஷ்ணனின் வருமானமும், 'கைக்கும் வாய்க்கு'மாக இருந்ததில் வியப்பொன்றுமில்லை. துவேஷமும், அசூயையும், பணத்தாசையும், அதிகார வெறியும் நிறைந்து மலிந்து கிடக்கும் உலகத்தில் தர்மத்துக்கும் நியாயத்துக்கும் உள்ள ஸ்தானத்துக்கு எடுத்துக்காட்டாக விளங்கினார் அவர். எங்கேயோ கண்காணாத ஊரிலே அவருடைய பெண்டாட்டியையும், மூன்று குழந்தைகளையும் விட்டு வைத்திருந்தார். 'அவளிடமிருந்து எப்போதாவது கடிதம் வரும். தான் சௌக்கியமாயிருப்பதாயும் தன்னைப் பற்றிக் கவலைப்பட வேண்டாமென்றும் எழுதியிருப்பாள். அந்த நிமிஷத்தில்தான் அவருக்கு மனைவி மக்களின் நினைவு வரும். 'போகிறது! நம்மைப் பணம் அனுப்பச் சொல்லாமல், எங்கேயாவது சௌக்கியமாக இருந்தால் சரிதான்!' என்று தமக்குத்தாமே சொல்லிக் கொள்ளுவார். மறு நிமிஷத்திலேயே அவர்கள் எல்லோரையும் மறந்துவிட்டு, தம்முடைய 'உலக'த்திலே லயித்துவிடுவார்.

ரங்கசாமி நாயுடுவோ ஒண்டிக்கட்டை. ராமகிருஷ்ணனுக்கு அவருடனேயே சாப்பாடு, ஜாகை எல்லாம் வைத்துக்கொள்ள இது சௌகரியமாயிருந்தது. காலத்தை ஒட்டி எழுதாமல், தம் எழுத்தை ஒட்டிக் காலத்தைக் கொண்டுவரும் முயற்சியில் மிகத் தீவிரமாக ஈடுபட்டு, பிசாசுபோல உழைத்தார்.

சமீப காலமாக ராமகிருஷ்ணனுக்குத் தொந்திரவுக்கு மேல் தொந்திரவாக ஏற்பட்டு வந்தன. இன்ன விதத்தில், இந்த ரூபத்தில்தான் அவை இருக்கும் என்பது கிடையாது. அந்தத் தொந்திரவுகளுள் அவருக்கு அதிக வேதனையும் சிரமமும் தந்தது, அவர் பிறந்த ஜில்லாவில் விவசாயிகளுக்கும் மிராசுதார்களுக்கும் இருந்து வந்த தகராறுதான். தற்சமயம் அது மிகப் பெரிய போராட்டமாக மாறியிருந்தது. உழைப்பவனைச் சுரண்டிக் கொழுத்திருந்த

மிராசுதார்கள், யானை தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக் கொள்ளுவது போல, அந்த உழைப்பாளிகளையே அடக்கி நசுக்க ஆரம்பித்திருந்தார்கள். கட்டாந்தரைக்கும் பஞ்சணைக்கும், கூழுக்கும் பிராந்திக்கும், உழைப்புக்கும் உல்லாசத்திற்கும் போராட்டம் ஏற்பட்டிருந்தது. ஏழை விவசாயிகளுக்கு வழிகாட்டி நடத்தி, அவர்களுடைய போராட்டத்துக்குப் பக்க பலமாயிருந்து, அவர்களுக்கு ஊக்கம் அளித்தவை ஆசிரியர் ராமகிருஷ்ணனும், 'உழவன்' பத்திரிகையும் தான். ஆனால், பண பலத்துக்கு முன்னே நியாயத்துக்கு இடமில்லாமற் போயிற்று. விவசாயிகளை அடக்கி, தங்கள் ஏகபோக ஆட்சியை அதிகார வர்க்கத்தின் துணைகொண்டு உறுதிப்படுத்திக்கொண்டார்கள் மிராசுதார்கள். ஆயினும் ஆசிரியர் ராமகிருஷ்ணன், தம் கொள்கைகளும் நியாயமும் நசுக்கப்படுவதை விரும்பவில்லை. எழுதினார்; வெறிபிடித்தவர் போல எழுதினார்; விவசாயிகளின் கட்சியில் எவ்வளவு நியாயம் இருக்கிறதென்பதைப் பளிச்சென்று எடுத்துக் காட்டி எழுதினார்; அவர்களுக்குள்ள உரிமைகளை, அவர்களே மறந்துவிட்ட உரிமைகளை, அவர்களுக்குத் தெரியப்படுத்தினார்.

மறுபடியும் விவசாயிகளின் போராட்டம் புதியவேகத்துடன் தொடங்கிற்று. முந்திய தடவையைக் காட்டிலும் பன்மடங்கு அதிக பலம் கொண்டு நடந்தது இந்தப் போராட்டம். மேல் கோர்ட்டுக்கு, பகிரங்கமான விசாரணைக்கு, விஷயம் வந்தது. பொது மக்களின் கவனமும், பெரும்பாலோரின் ஆதரவும்கூட விவசாயிகள் பக்கம் திரும்பிற்று. விவசாயிகள், தங்கள் கட்சிக்கு ஆசிரியர் ராமகிருஷ்ணனின் கட்டுரைகளையே ஆதாரங்களாகக் காட்டினர். ஒவ்வொரு கட்டுரையும், ஒவ்வொரு கூற்றும், ஒவ்வொரு சொல்லும் அவர்களுடைய ஜீவாதாரமான உரிமைகளை ஆணித்தரமாக நிலைநாட்டிற்று. அவர்களுடைய கட்சிக்கு உதறிவிட முடியாத சாட்சிகளாயிற்று. விவசாயிகள் கட்சி வென்றது; தர்மம் ஜயித்தது.

ஆசிரியர் ராமகிருஷ்ணன் அன்றுதான் நிம்மதியடைந்தார். தாம் கண்ட கனவுகளில் ஒரு பகுதி நிறைவேறிய திருப்தி அவருக்கு ஏற்பட்டது. பாராட்டுரைகள் வந்து குவிந்தன; கிஸான் தலைவர்கள் பலர் நேரில் வந்து தங்கள் நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துவிட்டுப் போனார்கள். ஏழைக் குடியானவர்கள் பலர் தங்களுக்குத் தெரிந்த பாஷையில் எதையோ கிறுக்கி அனுப்பிவைத்தார்கள். "நீங்க எங்களுக்குத் தெய்வம் மாதிரி... உங்களை ஆண்டவன் காப்பாத்தணும்........" என்று உள்ளத்தின் உவகையை விண்டு சொல்ல முடியாமல், தத்தளித்துத் தடுமாறி வந்த கடிதங்கள் எவ்வளவோ!

ஆசிரியர் ராமகிருஷ்ணனுக்குக் கொஞ்சம் கர்வம்கூட ஏற்பட்டது! 'நாமாகக் கொண்டு இதைச் சாதித்தோம்!' என்று எண்ணிப் பூரிப்படைந்தார். பாவம்! மனுஷ உணர்ச்சி அத்தனையும் செத்துப்போய், பேய் போல உலாவிவந்த அவருடைய மனம் அன்றுதான் ஏதோ ஒரு விசித்திர ஆனந்தத்தை அனுப



வித்தது. அடுத்த 'உழவன்' இதழில் இதைப்பற்றியே தலையங்கம் எழுத எண்ணினர். பாதி எழுதும் போது அவரையும் அறியாமல் தூக்கம் கண்ணைச் சுற்றியது. ஒரு வாரமாக அளவு கடந்த சிரமம் அலைச்சலும் அதிகம். பேனவை மூடாமல் திறந்தபடியே வைத்துவிட்டு, அப்படியே சற்றுக் கண்ணயர்ந்தார். மேஜைமேல் பாதி எழுதப்பட்டிருந்த தலையங்கம் கிடந்தது:

"இந்தப் போராட்டம் தென்னிந்தியாவில் நடந்தவற்றுள் மிகப் பெரியது. நியாயம் இன்றும் சாகவில்லை என்பதை இந்தப் போராட்டத்தின் வெற்றி நிரூபித்துவிட்டது. ஆமாம்; உழைப்பவனுக்குத்தானே நிலம் சொந்தம்? உழைத்தவன் இருக்க, பார்த்திருந்தவனுக்கு எங்கே விருந்து பாத்தியதை வருகிறது? தங்க மணிகளைப்போல நெல் மணிகளைக் கொண்டுவந்த பாட்டாளி ஓட்டைக் குடிலிலே ஒண்டிக் கிடக்கும்போது, பாட்டன் இவன் பேருக்கு எழுதி வைத்தான் என்பதைத் தவிர வேறு எந்த உரிமையும் அற்ற மிராசுதாரனுக்குச் சுகபோகங்கள் கிட்டுவது எந்த நியாயத்தில் சேர்ந்தது?..."

ஆசிரியர் ராமகிருஷ்ணன் கண்ணை விழித்தபோது தலையங்கம் எழுதி வைத்திருந்த காகிதத்துக்கு மேலே தபால் கவர் ஒன்று வைக்கப்பட்டிருந்ததைக் கண்டார். 'அவ'ளிடமிருந்து வந்திருந்தது அந்தக் கவர். முகத்திலோ, மனத்திலோ கொஞ்சமும் மாறுதல் இல்லாமல், சாவதானமாகக் கவரை உடைத்தார் ராமகிருஷ்ணன். வழக்கத்துக்கு மீறிய ஏதோ ஒன்று கடிதத்தினூடே புகுந்திருந்தது; தட்டுத்தடுமாறியிருந்த 'அவ'ளுடைய எழுத்துக்கள் விவரிக்க இயலாத ஒரு வேதனையை சோகபாவத்தை—வெளிக் காட்டின......

"நீங்களே நினைத்துப் பாருங்கள்; வருஷம் ஐந்தாகிறது: நீங்கள் பட்டணத்திலேயே இருக்கிறீர்கள். இந்தப் பக்கம் எட்டிப் பார்ப்பதேயில்லை. நான் மூன்று குழந்தைகளை வைத்துக்கொண்டு இங்கே எப்படிக் காலக்ஷேபம் செய்வேனென்று என்றைக்காவது எண்ணிப் பார்த்தீர்களா? உங்களுடைய உலகமெல்லாம் குடியானவர்கள், தொழிலாளர்களுக் குள்ளேயே அடங்கியது தானே? ஆமாம்; நீங்கள் எந்தக் குடியானவர்களுக்காகப் பரிந்து

பேசுகிறீர்களோ அவர்களுக்குக் குழந்தை, குட்டி ஒன்றுமே கிடையாது என்று எண்ணினீர்களா? அவர்களுக்குக் குடும்பம் இருக்கிறது; அந்தக் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காகத் தான் அவர்கள் சண்டை போடுகிருர்கள். தங்களுடைய ஒரு சாண் வயிற்றைமட்டும் நிரப்பிக் கொள்ளுவதற்காக அல்ல.

"அடுத்த வீட்டுக்காரரையும் அவருடைய குடும்பத்தையும் கை தூக்கி விடுவதில் முனைந்த நீங்கள் அந்த அக்கரையில் நூற்றில் ஒரு பங்கை உங்கள் சொந்தக் குடும்பத்தாரிடம் காட்டினீர்களா? ஒரு கடிதத்திலாவது நான் எப்படி வயிறு வளர்க்கிறேன் என்று நீங்கள் கேட்டது உண்டா? நானும் இதுவரை சொல்ல வேண்டாமென்றுதான் இருந்தேன். ஆனல், இப்போது அந்தக் காலக்ஷேபத்தின் வாயில் மண் விழுந்துவிடும் நிலை ஏற்பட்டுவிட்டதால், நான் அதை உங்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது. என் அப்பா காலமாகும்போது மஞ்சக்காணியாக இந்தப் பக்கத்தில் எனக்குக் கொஞ்சம் நிலம் வைத்துவிட்டுப் போனர். ரொம்ப நாளாக, அப்பா காலத்திலிருந்தே, ஒரு குடியானவன் அதைக் குத்தகை எடுத்து, வருஷத்துக்கு ஐம்பது கலம் அளக்கிருன். சாப்பாட்டுக்குப் போக மிஞ்சியதை விற்று, கிடைத்ததைக் கொண்டு குடும்பத்தை நடத்தினேன். மற்றப்படி எனக்கு ரொம்பப் பழக்கமுள்ளவர்கள் வீட்டில் சுற்று வேலைகள் செய்து......என்னல் சொல்லத் தாளவில்லை. நீங்களே ஊகித்துக் கொள்ளுங்கள்.

"இந்த வருஷம் அந்த வருமானமும் கிட்டாதுபோல் இருக்கிறது. இந்த வருஷம் இந்தப் பக்கத்தில் விளைச்சலே இல்லை. வாஸ்தவம்தான். அதற்காக நான் என்ன செய்வேன்? இருபது கலம்தான் என் நிலத்தில் விளைந்ததாம். "உங்களுக்கு வருஷத்துக்கு ஐம்பது கலம் அளிப்பதாகக் குத்தகைச் சீட்டில் இருப்பது உண்மைதான், அம்மா! ஆனல், நான் என்ன பண்ணட்டும்? இந்த வருஷம் இருபது கலம்தான் விளைந்தது. அதனல், உங்களுக்குப் பத்துக்கலம் அளிக்கிறேன்; நான் ஒரு பத்துக்கலம் எடுத்துக் கொள்ளுகிறேன்" என்று குத்தகைக்காரன் அடாவடி அடிக்கிருன். அவனுக்கும் குழந்தை குட்டி இருக்கிறதாம்! அவனும் பிழைக்க வேண்டுமாம்! இந்த அநியாயத்தை நான் யாரிடம் சொல்லுவேன்?......"

கடிதம் முடியா விட்டாலும் ஆசிரியர் ராமகிருஷ்ணனல் மேலே வாசிக்க முடியவில்லை. எத்தனையோ வருஷங்களாக அவருடைய இதய ஆழத்தில் அமுங்கி மறைந்து கிடந்த வாத்சல்யம்—மனைவி மக்கள் மேலிருந்த அன்பு—ஊற்று நீர்போல 'மறுபடியும் பெருக்கெடுத்தது. அவருடைய குடும்பத்தின் பரிதாபகரமான ஸ்திதி அவருடைய கண்களிலே ரத்தம் வடியச் செய்தது. 'அவள்' 'வயிறு வளர்த்த' அந்தச் சோகக் கதை அவருடைய உள்ளத்தைக் கரைத்தது. குத்தகைக்காரன் அவளுக்கு இழைக்க முயலும் 'அக்கிரமம்'......

அகஸ்மாத்தாக, மேஜைமேலிருந்த காகிதத்தின் மீது அவர் பார்வை படிந்தது. "உழைப்பவனுக்குத்தானே நிலம் சொந்தம்?" என்று கேள்வி போட்டது அந்தத் தலையங்கம்—அவரே எழுதிய தலையங்கம்!

ஒரு கணம் அவர் மனம் தயங் கித் திகைத்தது. ஆனால் மறு கணமே "எப்படியாம்?" என்று அவர் தம்மையும் அறியாமல் உரக்கக் கத்தினர்.

தலையங்கம் சுக்கு நூறாகக் கிழிக்கப்பட்டுக்குப்பைக் கூடை யில் போய் விழுந்தது.

* * *

'உழவன்' காரியாலயத்தைச் சேர்ந்த இரண்டு குமாஸ்தாக் கள் பேசிக் கொண்டிருந்தார் கள்.

"ஆமாம், அதென்ன எடிடர் அப்படித் திடீரென்று லீவு எடுத் துக்கொண்டு ஊருக்குப் போனார்?"

"அவர் மனைவியிடமிருந்து கடிதம் வந்ததாம். குடும்ப சம் ரட்சணத்துக்காகக் கொஞ்ச நஞ்சம் கிடைத்துவந்த நெல்லை யும் தரமாட்டேன் என்று இந்த வருஷம் குத்தகைக் காரன் தக ராறு செய்கிறானும். அவர்மனைவி, குழந்தைகள் சாப்பாட்டுக்கு ரொம்பக் கஷ்டப்படுகிறார் களாம். அதனால், ஊருக்குப் போய், பழைய குத்தகைக்காரனை நீக்கிவிட்டு, வேறு யாராவது புதிய குடியானவன் பேருக்குக் குத்தகைச் சீட்டை மாற்றிவிடப் போகிறேன் என்று சொல்லி விட்டுப் போனார்......"

முதல்வர் விஷமத்தனமாகக் கண்ணைச் சிமிட்டிக் கொண்டே கேட்டார்: "அப்போது, இத்தனை நாளாகப் பேசியும் எழுதியும் வந்ததெல்லாம்?......"

* * *

ராமகிருஷ்ணன் சொன்ன படியே செய்துவிட்டுத்தான் திரும்பினார். எந்த ராமகிருஷ் ணன் ஆயிரம் ஆயிரம் ஏழை விவசாயிகளின் கஷ்டங்களை நினைத்து உள்ளம் உருகி, கண்ணீ ரிலே தோய்த்த பேனாவினால் எழு தினாரோ, மேடைகளிலே எறிப் பொறிபறக்கப் பேசினாரோ, அந்தராமகிருஷ்ணன் தம் ஊரிலே தம் 'சொந்த' நிலத்திலே, ஓர் ஏழை விவசாயியின் வயிற்றிலே மண்ணைப் போட்டுவிட்டு, தம் 'உரிமை'யை நிலைநாட்டிவிட்டுத் திரும்பினார்; உழுபவனைவிட, 'பாட்டன் எழுதி வைத்தான்' என்பதைத் தவிர வேறு உரிமை யற்ற நிலச் சுவான்தாரனுக்குத்தான் பாத்தியதை அதிகம் என்ற 'நியாய'த்தை அழுத்தந் திருத்தமாக ஸ்தாபித்துவிட்டுத் தான் திரும்பினார்.

### நீண்ட கதை!

பற்பல நாடுகளையும் சேர்ந்த பலர் ஓரிடத்தில் கூடியிருந்தார்கள். அவர்கள் தங்களுக்குள்ளேயே ஒரு கதைப் போட்டியை ஏற்படுத்தினர் கள். அதன்படி யார் மிகவும் நீண்ட கதையைச் சொல்லுகிறார்களோ அவர்களுக்கு முதல் பரிசு. பரிசுத் தொகை ரூபாய் நூறு. எல்லோரும் ஆளுக்கொரு கதையைச் சொன்னார்கள். ஒவ்வொருவரும் பெரிய பெரிய கதையாதச் சொல்லிக்கொண்டு வரவே, எல்லோருக்கும் கேட்டுக் கொண்டே இருக்கப் பொறுமையில்லாமல் போய்விட்டது. ஓர் அமெரிக் கரைத் தவிர எல்லோரும் கதை சொல்லிவிட்டார்கள். அமெரிக்கரின் முறை வந்தது. அவர், "ஒரு காலத்தில் அமெரிக்காவில் ஒருவர் இருந் தார்........." என்று ஆரம்பித்தார். உடனே அவருக்கு முதல் பரிசைக் கொடுத்துவிட்டார்கள்!

—இந்தியன் பீப்பிள்



"இதோ இவர் தான் ஆனந்த் மிஸ்ரா..."
இப்போதுதான் ஆபீஸிலிருந்து வீடுதிரும்புகிறார். நல்ல டீ ஒரு கோப்பை சாப்பிட விழைகிறார். ஆனால் பாவம், அது கிடைக்காது. ஏனெனில் கெட்டிலில் காய்ந்து கொண்டிருக்கும் வெந்நீர் நாள் பூராவும் காய்ந்து கொண்டேயிருந்தது. நல்ல தேயிலை பானத்துக்கு புதிதாகக் கொதித்த நீரே தேவை.
ஐந்து சுலபமான விதிகள்!
1. எப்போதும் புதிதாக எடுத்த தண்ணீரை புதிதாக கொதிக்கவைத்தே உபயோகிக்கவும். 2. பாத்திரத்தை உபயோகிக்குமுன்பாக கொஞ்சம் சூடாக்கவும். 3. நல்ல தேயிலையை நபர் ஒன்றுக்கு ஒரு தேக்கரண்டி வீதமும் பாத்திரத்துக்கு ஒரு கரண்டியுமாகப் போடவும். 4. கொதி நீரில் தேயிலை சமார் 3 முதல் 5 நிமிஷங்களுக்கு ஊறட்டும். 5. கோப்பையில் கஷாயம் எடுத்துக்கொண்டு பால் சேர்த்துக் கொள்க. பாலில் அல்ல.
"தேயிலைப்பானம் - சில யோசனைகள்" எனும் இலவச புத்தகம் ஆங்கிலம், வங்காளி, ஹிந்தி, உருது, தமிழ்பாஷைகளில் கிடைக்கும். விண்ணப்பிக்கு மிடம்: கமிஷனர், இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டு, 101, நேதாஜி சுபாஷ் ரோட், த. பெ. நெ. 2172, கல்கத்தா.
கோடிக்கணக்கான மக்கள் சோர்வை யகற்றி புத்துணர்ச்சிபெற தேயிலை பானம் அருந்துகின்றனர். ஆனால் தேயிலை பானம் அருந்தும் பலருக்கு நல்ல டீ எப்படி செய்வதென்பது தெரியாதது வருந்தத்தக்கது. நல்ல டீ தயாரிக்க செலவு ஏதும் அதிகமில்லை. ஐந்து சுலபமான முறைகளைக் கடைப்பிடிப்பதே போதுமானது. உங்கள் பணத்திற்கு முழு மதிப்பு பெறவும் உங்கள் டீ நறுமணம் மிகுந்ததாயிருக்கவும் இம்முறைகளை உங்கள் மனதில் பதியவைத்து வீட்டிலும் சரிவர அனுசரிப்பது நலம்.
டீ
டீ போன்றது வேறெதுவுமில்லை.
இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது.


லிப்டன்ஸ்
என்றால்
முதல்தரமான
டீ
JAKOOJA BRAND FINEST DUST TEA
LIPTON'S
FINEST DUST TEA
PACKED BY LIPTON
JAKOOJA

LTR. 132 W.T.M.

# செக்கஸ்லோவேகியா

அ. சிங்காரவேலு

செக்கஸ்லோவேகியா என்பது ஐரோப்பாக் கண்டத்தில் கம்பீரமாக வீற்றிருக்கும் ஒரு சின்ன அழகிய பிரதேசம். ஐரோப்பாக் கண்டத்தின் சரித்திரப் பரம்பரையிலே அதி முக்கிய ஸ்தானங்களை வகித்து வருவது.

முதலாம் உலக யுத்தத்தின் இறுதியிலே ஐரோப்பாக் கண்டம் சிதறத் தலைப்பட்டது. ஆஸ்திரிய-ஹங்கேரியச் சாம்ராஜ்யம் கூறுபோடப்பட்டது. அப்படிக் கூறுபோடப்பட்ட நாடுகள் தான் ஆஸ்திரியா, ஹங்கேரி, செக்கஸ்லோவேகியா, யூகோஸ்லேவியா ஆகிய நான்கு நாடுகளும்.

1918 முதல் தனி நாடாக விளங்கிவந்த இந்தச்செக்கஸ்லோவேகியாவின் தலைவிதி 1939-ல் மாறலாயிற்று. இரண்டாவது உலக மகாயுத்தம் அதன் கதியை புரட்டிப் போட்டுவிட்டது.

செக்கஸ்லோவேகியாவில் அப்பொழுதிருந்த ஜனத் தொகையில் செக் ஜாதியினர் 7705000 செக் ஜாதியினரும் 20 லக்ஷம் ஸ்லோவேகியரும், 37½ லக்ஷம் ஜெர்மானியரும் இன்னும் மிகச் சிறுபான்மையான இதர இனத்தவர்களும் அங்கே இருந்தார்கள். செக்கஸ்லோவேகியாவைப் பொறுத்த வரையில், உலகத்திலேயே (ஆனால் நம்மை ஹதராபாத் நீங்கலாக) வேறு எந்த ஒரு நாட்டிலும் இல்லாத அளவு அங்கே மைனரிட்டியினர் அதிகமான சலுகைகளுடன் வாழ்ந்து வந்தார்கள். எப்படி?

1. 1935-ல் நடந்த பொதுத் தேர்தலில் 300 ஸ்தானங்களில் 72 ஸ்தானங்களை ஜெர்மானியர் கைப்பற்றினர். அதாவது 24% விகிதம்.
2. ஜெர்மானியர் அங்கே மைனரிட்டியினர். அவர்களில் 90 சதவிகிதம் குழந்தைகள் பள்ளிகளில் படித்தார்கள். பள்ளிக்கூடங்களில் ஜெர்மன் பாஷையில் போதிக்கப்பட்டது.
3. ராணுவத்திலும், சர்க்கார் உத்தியோகங்களிலும் 20 சதவிகிதம் உத்தியோகங்களை ஜெர்மானியர் வகித்தனர்.
4. நியாயஸ்தலம், பொதுக் காரியாலயங்கள் ஆகியவைகளில் மைனரிட்டி மொழி தான் வழங்கப்பட்டது.

இன்று உலகத்தில் உணவுக்கும் உடைக்கும் பஞ்சமின்றி, கலகம் கலவரங்களுமின்றி உள்ள ஒரு சில நாடுகளில் செக்கஸ்லோவேகியாவும் ஒன்று. ஆகவே அந்நாட்டைப் பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்ளுவதில் நமக்குப் பல நன்மைகள் உண்டு.

மைனரிட்டிகளின் மொத்த பலமே 25% தான். ஜெர்மானியர்கள் மட்டும் மொத்த ஜனத்தொகையில் 22%.

விஷயம் இப்படியிருக்க அங்கே மைனரிட்டியினர் ரொம்பவும் கொடுமைப் படுத்தப் படுவதாக ஹிட்லர் பொய் சொன்னான். வாழ்ந்து, சுரண்டிய அந்தச் செக்நாட்டின் மீது படை யெடுத்தான். செக் மக்களையும், அறிஞர்களையும் சித்திரவதை செய்தான். அடிமைப்படுத்தினான்.

1939 மார்ச்சில் செக் நாடு பாஸிஸத்திற்கு அடிமைப்பட்டது. பல சொல்லொணாத் துயரங்களுக்கும், கொடுமைகளுக்கும் ஆளாகிய செக்கஸ்லோவேகிய மக்கள் தங்கள் ஜன்ம நாட்டிலிருந்து பாஸிஸ்டுகளை விரட்டியடிக்க சபதம் எடுத்தனர். உடல், பொருள், ஆவி அனைத்தையும் பணயம் வைத்து செஞ்சேனையின் உதவியைக் கொண்டு ஹிட்லர் பைசாசங்களை அழித்து நிர்மூலம் செய்தனர்.

வீர வேள்வியி லிறங்கி, வீரச் சமர் புரிந்து அந்த ஆறு வருட காலத்திற்குப் பின் செக்கஸ்லோவேகிய மக்கள் தங்கள் சுதந்திரத்தை நிலைநாட்டினர். 1945 மே மாதம் 26-ம் நாள், சுதந்திர சகாப்தத்தின் முதல் முழுத் தேர்தல் செக் நாட்டில் நடைபெற்றது. மொத்தம் 300 ஸ்தானங்களில் 114 ஸ்தானங்களைக் கம்யூனிஸ்டுகள் கைப்பற்றினர்! மொத்தம் கிடைத்த ஓட்டுக்களிலே 37% ஓட்டுக்களை கம்யூனிஸ்டுகள் பெற்றனர்.

பினேஷின் தேசிய சமதர்ம கட்சியினர் (The National socialist party) 55 ஸ்தானங்களைக் கைப்பற்றினர்.

பாப்புலர் பார்ட்டி எனப்படும் கத்தோலிக்கர் கட்சிக்கு 36 ஸ்தானங்கள் கிடைத்தன.

செக்கஸ்லோவேகியாவின் பூரண நம்பிக்கைக்குப் பாத்திரமான செல்வாக்கு நிரம்பப் பெற்ற கட்சி கம்யூனிஸ்டுக் கட்சி ஒன்றுதான். கம்யூனிஸ்டுக் கட்சிதான் பலம் பொருந்திய பெரிய கட்சியாக விளங்கி, செயலாற்றி வருகின்றது.

செக்கஸ்லோவேகியாவின் குடியரசுத் தலைவரான பினேஷ் என்பவர் கம்யூனிஸ்டு கட்சியிடம் நம்பிக்கை கொண்டவர். கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைவரான கிளிமெண்ட் காட்வால்ட் என்பவரை அழைத்து, அவர் தலைமையில் புதிய மந்திரி சபை அமைத்தார்.

கடந்த இரண்டோர் ஆண்டுகளுக்குள், இந்த மிகக் குறுகிய காலத்திற்குள்ளே, செக் நாடு உலகம் பிரமித்துப் போகும்படியான பல அரிய சாதனைகளை செய்து முடித்துவிட்டது.

அங்குள்ள தொழிற்சாலைகளில் 100-க்கு 75 சதவிகிதம் அதாவது முக்கால்வாசித் தொழிற் சாலைகளை தேசீய மயமாக்கிவிட்டது.

சென்ற ஏப்ரல் மாதத்தில் "விலை குறைப்புச் சட்டம்" (Price Reduction Bill) ஒன்று அமுலுக்குக் கொண்டுவந்து பால், வெண்ணெய், முட்டை, கோதுமை, துணி, ஆகிய அநேக ஏராளமான பொருள்களின் விலைகளை 10-20% குறைத்து விட்டது.

கள்ளமார்க்கட் செய்பவர்கள் மீது கடுந் தண்டனை விதிக்கக் கூடுமாதலால், கள்ள மார்க்கெட் என்பது அங்கே தலை காட்டவே முடியவில்லை.

நிலப்பிரபுத்துவத்தை ஒழித்து 25,00,000 ஏக்கரா நிலங்களை 110,000 குடும்பங்களுக்குப் பிரித்துக் கொடுத்துவிட்டது.

இன்னும் சுருங்கச் சொல்ல வேண்டுமானல், மக்களை சரிநிகர் சமானமாக வாழ்வாங்கு வாழச் செய்யவேண்டிய காரியங்கள் அத்தனையையும் பெருமிதமாகச் செய்திருக்கின்றது.

எனவே இன்றைய உலகின் பொருளாதார, கலாசார நாகரிக துறைகளிலே ருஷ்யாவுடன் தோள்தட்டி உலகின் இரண்டாவது நாடாகத் திகழும்படி முன்னேறிச்சென்றுகொண்டிருக்கின்றது.

இப்படி சமாதானத் துறையிலே, வாழ்வுப் பாதையை நோக்கிச் செல்லும் இந்த செக்கஸ்லோவேகியா ஐரோப்பாக் கண்டத்தின் விஸ்தீரணத்திலே சுமார் 12-ல் ஒரு பாகத்தை எல்லை கோலுகின்றது. வடக்கில் புதிய போலந்தும், தெற்கில் ஆஸ்திரியாவும், ஹங்கேரியும், கிழக்கில் சோவியத் யூனியனும், மேற்கில் ஜெர்மனியும் சூழ்ந்து நிற்கின்றன. ஐரோப்பாவின் ஜனத் தொகையிலே 8-ல் ஒரு பாகத்தினர், ஆனல் கல்வி யறிவுடைய, நாகரிகம் படைத்த புதிய மனிதர்கள் இங்கே வாழ்கின்ருர்கள்.

அதன் பரப்பு சுமார் 54,000 சதுர மைல் ஆகும். அல்லது அஸ்ஸாம் நாட்டின் விஸ்தீரணத்திற்குச் சற்றேறக்குறைய சமமானது.

இயற்கையைப் பார்க்குமிடத்து அதனை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கவேண்டியிருக்கின்றது:

1. பொஹிமியப் பீடபூமி;
2. மொரேவியப் பள்ளத்தாக்கு;
3. ஸ்லோவேகியா.

பொஹிமியப் பீடபூமி மலைகளால் சூழப்பட்டு வட மேற்கில் ஜெர்மனி பக்கமாகச் சரிந்துள்ளது. இப்பீடபூமியில் எல்ப் என்றது நதியும், அதன் உபநதி மால்டாவும் பாய்கின்றன. எல்ப் நதி வடக்கிலுள்ள ஓர் இடை வழியின் மூலம் பாய்ந்து ஜெர்மனி மூலமாக ஓடுகிறது.

மொரேவியப் பள்ளத்தாக்கு என்பது தேசத்தின் மத்தியிலே இருக்கின்றது. வடக்கில் ஓடர் நதி மொரேவிய இடைவழி மூலமாகச் சென்று ஸிலீஷியா, ஜெர்மனி வழியாக ஓடுகின்றது. தெற்கில் மார்ச் நதி ஓடி டான்யூப் நதியுடன் கலக்கின்றது.

ஸ்லோவேகியாவின் கிழக்குப் பாகம் மலை நாட்டுப் பிரதேசம்.

முக்கிய நகரங்கள்:

பிரகா எனப்படும் பிரேகு தான் செக்கஸ்லோவேகியாவின் தலைநகரம். சுமார் 10 லக்ஷம் மக்களுக்கு மேல் இங்கே வசிக்கின்ருர்கள். சர்க்கார் காரியாலயங்களும், குடியரசுத் தலைவரின் வீடும் இங்கே இருக்கின்றன. பிரேகு முக்கிய ஒரு பெரிய வியாபார ஸ்தலமாக இருப்பது மட்டுமன்றி நாகரிகமான ஓர் அழகிய நகராயும் விளங்குகின்றது.

ஏற்கெனவே இருந்த பழைய தலை நகரம் ஓலமுக் (Olomouc) என்பது. மொரேவியாவின் மத்தியில் உள்ளது. சுமார் 66,000 மக்கள் அங்கே வசிக்கின்ருர்கள்.

மொரேவியாவில் உள்ள இரண்டாவது பெரிய நகரம் ஒஸ்ட்ரவா எனப்படுவது. அதிலே பல பெரிய தொழிற்சாலைகள் இருக்கின்றன. மொத்தம்

175,000 ஜனங்கள் அங்கே இருக்கின்றார்கள்.

பில்ஸென் என்ற நகரில் சுமார் 122,000 மக்கள் இருக்கின்றார்கள். முக்கிய துறைமுகப் பட்டணங்களான உஸ்டி, லெபம் ஆகிய இரு நகரங்களில் மட்டும் சுமார் 63,000 மக்கள் வசிக்கின்றார்கள்.

விளை பொருள்கள் :

செக்கஸ்லோவேகியாவின் மொத்தப் பரப்பில் மூன்றில் ஒரு பாகம் அடர்ந்த காடுகள். சாகுபடிக்கு லாயக்குள்ள நிலம் கொஞ்சம். எனினும் காடு வெட்டி நிலந்திருத்தி, புதிய யந்திர சாதனங்களைக் கொண்டு ஆழ உழுது, அதிகம் உற்பத்தி செய்கின்றார்கள்.

விளை பொருள்களில் முக்கியம் குறிப்பிடத் தக்கவை கரும்பு, கோதுமை, சோளம், பார்லி, ஓட்ஸ்; ரை, பீட்கிழங்கு, உருளைக்கிழங்கு, புகையிலை, சணல் ஆகியவைகளாகும்.

செக்கஸ்லோவேகியாவின் விவசாயத்தில் மற்றும் குறிப்பிடத் தக்க ஓர் அம்சம் அவர்கள் விவசாயத்தின் ஒரு முக்கியப் பகுதியாகக் கருதி நல்ல பழச் செடிகளைப் பயிரிட்டு வருவது தான். ஆப்பிள், திராக்ஷ, 'செரி' என்று சொல்லப்படும் ஒரு வகை ருசியான பழம் ஆகியவைகள் அதிகம் உறபத்தியாகின்றன.

தொழில் :

சில வருடங்களுக்கு முன் வரை, செக்கஸ்லோவேகியா உலக உற்பத்தியில் 8-வது ஸ்தானம் வகித்து வந்தது. உலகத்திலேயே மிகப் பெரிய செருப்புக் கம்பெனியான "பாட்டா ஷூ பாக்டரி" என்பது அங்கேதான் ஸ்லின் என்ற நகரில் இருக்கின்றது. மற்றும் பெரிய பெரிய யந்திர உற்பத்திச்சாலைகளும், கரும்பாலைகளும், கண்ணாடி உற்பத்திச் சாலைகளும், காகிதத் தொழிற்சாலைகளும், ரசாயனப் பொருட் சாலைகளும் ஏராளமாக இருக்கின்றன.

உலோகப் பொருள் :

முக்கியமாக நிலக்கரி, இரும்பு, ஆகியவைகளும் ரசாயனப் பொருள்களும் ஏராளமாகக் கிடைக்கின்றன.

மொரேவியா, ஸிலேஷியா ஆகிய இடங்களில் நிலக்கரிச் சுரங்கங்கள் அதிகம் இருக்கின்றன.

மற்றும் அப்பிரகம், சிவப்புக் கல், கண்ணாடி, சலவைக்கல், ஆபரணங்களுக்கு உபயோகப் படுத்தப்படும பலவிதக் கற்கள் அதிகம் கிடைக்கின்றன.

ஏற்றுமதி :

செக்கஸ்லோவேகியாவிலிருந்து பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களில் முக்கியமானவை சர்க்கரை, இறைச்சி, பீர், நிலக்கரி, கண்ணாடி, காகிதம், இரும்புச் சாமான்கள், பீங்கான் சாமான்கள், ஆபரணக் கறகள், செருப்பு, கையுறை, மரம் ஆகியவைகளாகும்.

இறக்குமதி :

பிற நாடுகளிலிருந்து பருத்தி, பட்டு, தோல், தேயிலை, காப்பி, கோக்கோ, புகையிலை, ஏலம், கிராம்பு, மற்றும் யந்திர சாமான்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன.

விலங்குகள் :

காடுகள் அதிகமானதால் கரடி, முயல், மான், குள்ளநரி ஆகிய அநேக மிருகங்கள் அதிகம் இருக்கின்றன. செக்கஸ்லோவேகிய மக்கள் காட்டு மிருகங்

கலியாண விசேஷங்களுக்கும்,
திருவிழா விசேஷ நாட்களிலும் அணியத் தகுந்த

எங்கள்

## "போட்டோ மார்க்"

## சேலைகள்



கெட்டியான சாயத்திற்கும்
உறுதியான உழைப்பிற்கும்
கியாரண்டி தரக்கூடியது

*தயாரிப்பவர்கள் :*

## ஸ்ரீ சாரதா அண் கோ.,

நடேசர் சன்னதி, பழனி.

ஏஜண்டுகள் :

1. ஸ்ரீ முருகன் அண் கோ, மால் 2-வது தெரு, மதுரை
2. M/s பால முருகன் கம்பெனி, மால் 5, ஹனுமார் கோவில் தெரு, மதுரை
3. M/s R. M. H. S. மூர்த்தி கம்பெனி. லக்ஷ்மிபுரம் குறுக்குத் தெரு, மதுரை
4. ஸ்ரீ பால முருகன் அண் கோ. 166, தெற்கு மாசி வீதி, மதுரை
5. M/s M. S. T சுப்பய்யர் அண் சன்ஸ். 119 சந்தை ரோடு, நாகல்நகர், திண்டுக்கல்
6. கஸ்தூரி ரெங்கய்யர், நாகையர் அண் கோ. ஸௌராஷ்ட்ர தெரு, வத்தலகுண்டு
7. N.S. குப்புசாமி, N. A. K. சுப்பய்யர் ஜவுளி வியாபாரம், தென்கரை, பெரியகுளம்
8. ஸ்ரீ சுப்ரமணியம் கம்பெனி, சேலம் அண்டு N. A. Dt.
9. M/S ராஜா அண்டு கோ. மதராஸ் அண்டு ஆந்திரா Dt.
10. M. R சுப்பையா செட்டியார், ஜவுளி வியாபாரம், முத்துசுவாமி பிள்ளை வீதி பொள்ளாச்சி

(N. B.) *40, 60, 80 நெ. ஜவுளி தினுசுகளுக்கும்,*
*பிரிண்டெட் வாயல் சேலை தினுசுகளுக்கும்,*

## சரஸ்வதி வீவிங் கம்பெனி

நாகல் நகர், திண்டுக்கல். — 32, லக்ஷ்மிபுரம் 3-வது தெரு, மதுரை.



# தற்கால கட்டிட நிர்மாணம்

## தொழிலாளர் வீடு அமைப்பு

இன்று இந்தியா தேசமானது அமோகமாக தொழில் அபிவிருத்தி துறையில் ஈடுபட்டிருக்கிறது. இது விஷயத்தில் மிகவும் முக்ய பிரச்னையானது தொழிலாளிகளின் சுகவாழ்க்கை. அதிலும் அவர்களின் குடியிருப்பு வசதி. இவைகளில் அதிகாரிகள் தங்கள் காலத்தை செலுத்திகொண்டிருக்கிறார்கள் என்பதைக்காண திருப்திகரமாயிருக்கிறது. சந்தோஷகரமானதும், சுகாதாரத்துடனும் நன்கு அமைக்கப்பட்ட, வாழ்க்கை வசதிகள் தொழிலாளர்களின் திரேகாரோக்யத்தையும் அவர்களின் திறத்தையும் அதிகரிக்கும். இதன்பிரதிபலனாக அதிக உற்பத்தி ஏற்படும்.

நீடித்த உழைப்பு, சிக்கனம் அமையக்கூடிய தன்மை, தீபயமின்மை, பரிசுத்தம் இத்தன்மைகளை ஸ்வபாவத்திலேயே கொண்ட கான்கிரீட்—தொழிலாளர் வீடுகள்—சிற்றுண்டி சாலைகள்—அனுதைபோஷணை சாலைகள்—பள்ளிக்கூடங்கள் — ஆஸ்பத்ரிகள் — நிற்கும் நீர்நிலைகள்—இவைகள் கட்டுவதற்கு ஏற்றசாதனம்.

சிமெண்ட் கான்கிரீட்டின் முழுபலன்களையும் உபயோகப்படுத்திக்கொள்ளும் முறையில் தி கான்கிரீட் அஸோஸியேஷன் ஆப் இந்தியாவின் (199, மவுன்டு ரோட்டு, மதருஸ்) பரிபோஷிக நிபுணர்களின் இலவசபோதனை எப்பொழுதும் கிடைக்கும்.

"தொழிலாளர் வீடு அமைப்பு" என்னும் ஓர் கட்டுரையின் பிரதி, இலவசமாக அனுப்பப்படும்.

**தி ஸிமெண்ட் மார்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்.**

CMI. 147 Tamil.

களை வேட்டையாடுவதில் மிகவும் பிரியம் உள்ளவர்களாக இருக்கின்றனர். நெடுந்தூரம் வரையிலுங்கூட சென்று மான் வேட்டை, முயல் வேட்டை ஆடி வருகின்றனர்கள். மாமிச உணவுக்கு மட்டுமின்றி, வேட்டையாடுவதை ஓர் உல்லாசப் பொழுது போக்காக நினைக்கின்றனர்கள்.

**இன்றையத் தேவை:**

செக்கஸ்லோவேகியாவின் இன்றைய முக்கியத்தேவை மனித சக்தி ஒன்றுதான். வேலைக்குப் போதிய ஆட்கள் கிடைக்காத படித் தவியாய்த் தவிக்கின்றனர்கள். செக்கஸ்லோவேகியாவின் தொழில் மந்திரி பி. லாஸ்மன் என்பவர் வெளியிடும் தகவல்படி: வருட ஆரம்பத்தில் 944,606 பேர் தொழிற்சாலைகளில் வேலை பார்த்தார்கள். ஆனால் ஆறு மாத காலத்திற்குள், அதாவது ஜூன் மாத இறுதிக்குள் 983,100 பேர் வழிகள் வேலைக்கு வேண்டி ஏற்பட்டது. ஆள் பஞ்சத்திற்கு 40,000 யுத்தக் கைதிகள் பயன்படுகிறார்கள். இருப்பினும் தொழிலபிவிருத்தியின் இரண்டாண்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குச் சுமார் 239 ஆயிரம் புதுத் தொழிலாளர்கள் வேலைக்கு வேண்டுமென்கிறார். ஆள் தேவையைப் பூர்த்திசெய்ய வேண்டி யூகோஸ்லேவிய சர்க்காருக்கு வேண்டுகோள் விடுத்து 3000 யூகோஸ்லேவிய இளைஞர்களை வரவழைத்து இருக்கின்றனர். இந்த இளங்காளைகள் செக் நாட்டிற்கு உதவுவதோடுகூடப் புதிய தொழில்களைக் கற்றும் வருகின்றனர்கள்.

இன்று நம் நாட்டில் ஆள் குறைப்புத் திட்டத்தை உருவாக்குகின்றனர்கள் என்பது அறிந்த வாசகர்கள் செக்கஸ்லோவேகியாவைப் பார்த்துப் பிரமித்துப் போகலாம். செக்கஸ்லோவேகிய நாடு செழிப்புப் பாதையில், முன்னேறத் தக்க நல்ல திட்டங்களை வகுத்து நாட்டின் நலனைப் பேணிக் காக்கின்றது. மக்களை வாழ்வாங்கு வாழச் செய்யும் நோக்கம் படைத்த கம்யூனிஸ்டுகளின் கைகளில் ஆட்சி மன்றம் இயங்குகின்றது! எனவே தான் வேலையில்லையென்பதும் இல்லை; கல்வி இல்லை என்பதும் இல்லை; பஞ்சம் என்பதும் இல்லை; பட்டினி என்பதும் இல்லை.

*

## அதிகமானது ஏன்?

ஒரு பெரிய இலக்கிய அறிஞர் பலமான ஆராய்ச்சி செய்து கீழ்க்கண்ட ஓர் அதிசயமான உண்மையைக் கண்டுபிடித்திருக்கிறார். அது என்ன தெரியுமா?

பத்து வருஷங்களுக்கு முன்னால் கணக்கெடுக்கும்போது பத்திலிருந்து பதினைந்து வயதுக் குட்பட்டவர்கள் என்று பதிவு செய்யப்பட்ட பெண்களின் தொகைக்குச் சமமாகத்தானே, பத்து வருஷங்களுக்குப் பிறகு கணக்கெடுக்கும்போது இருபது வயதிலிருந்து இருபத்தைந்து வயதுக்குட்பட்டவர்களின் தொகை இருக்க வேண்டும்? ஆனால், இப்போது 20-லிருந்து 25-வயதுக்குட்பட்டவர்களின் தொகை மிகவும் அதிகமாக இருந்ததாம். ஏன்? எந்தப் பெண்தான் தன் வயதை 25-க்கு அதிகமாகக் கூட்டிச் சொல்லுவாள்?

—தி ரோஸ்

உங்களுக்குத்தெரியாமலிருக்கலாம்.

ஆனால் இந்தியா, பாகிஸ்தான்

முழுவதுமுள்ள 100-க்கு மேற்பட்ட

விமான நிலையங்களிலும் பர்மா-ஷெல்

ஏவியேஷன் சர்வீஸ் கிடைக்கப்-

பெறலாம்

**பர்மா-ஷெல்**

**ஏவியேஷன் சர்வீஸ்**

விமான கம்பெனிகளால்

SHELL

நம்பப்படும் சர்வீஸ்

பர்மா-ஷெல் ஆயில் ஸ்டோரேஜ் அன்டு டிஸ்டிரிபியூடிங்
கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்.

(இங்கிலாந்தில் ஸ்தாபிக்கப்பெற்றது) ஏஜன்டுகள்,

3TM

# நாம் ஏன் கனவு காண்கிறோம்?

ச. மூ. பிள்ளை

கனவு காண்பதின் ரகசியம் நம்மில் பலருக்குத் தெரியாது. அதை மேலெழுந்த வாரியாகச் சுருக்கிச் சொல்லுகிறது இந்தச் சிறு கட்டுரை.

நம்முடைய மூளையில் அநேக பாகங்களுண்டு. அவைகளில் சில பாகங்கள் சுறுசுறுப்பாய் விழித்திருந்து வேலை செய்யும் பொழுது மற்ற சில பாகங்கள் நித்திரை செய்து கொண்டிருக்கும். நாம் கனவு காண்கிறபொழுது இந்தச் சம்பவந்தான் நேரிடுகிறது.

விசேஷமாக மூளையின் உயர்ந்த பாகங்கள், கனவு காண்கிற பொழுது நித்திரை செய்து கொண்டிருக்கும். சில பாகங்கள் விழித்துக்கொண்டிருக்கும். அவைகள் எல்லாம் பெரும் பாகமும், விசேஷமாக அதன் உயர்ந்த பாகம் கனவு நினைவில் அமர்ந்து உறங்கிக்கொண்டிருக்கும். ஆயினும், சில பாகங்கள் மனதினுடைய உயர்ந்த சக்திகளினால் ஆளப்படாமல், கழிந்த காலத்து அநுபவ விஷயங்களை ஆதாரமாகக் கொண்டு கிரியை செய்கின்றன. இவ்வாறு கிரியை செய்வதற்கு எடுத்துக் கொள்ளும் இறந்தகால விஷயங்களுள் பெரும்பான்மையும் சமீபத்தில் நடந்தவைகளாயிருக்கும். ஒரு வேளை ஆழ்ந்த நித்திரை செய்யும் பொழுது மாத்திரம் கனவு காண்பதில்லை. நம்மில் அநேகர் காண்கிற கனவுகளை விழித்தெழுந்ததும் மறந்து விடுகிறோம் என்று நிச்சயமாய்த் தோன்றுகிறது.

ஒரு கனவு மங்கித் தெளிவின்றி மறக்கக் கூடியதாயிருப்பதற்கேற்ப மூளையின் பாகங்களும் விழித்திருக்கும். நீண்டதும் தெளிவானதும் மறக்கக் கூடாததுமான முழுக்கனவுகள் காண்கிற பெழுது மூளையின் எல்லாப் பாகங்களும் விழித்திருந்ததென்று சொல்லலாம். கனவுகள் குறையக் குறைய அவ்வளவும் நல்லதே. அப்படிக் கொஞ்ச கனவுகள் காண்பதினால் நம்முடைய நித்திரை பூரணமாயும் ஆழ்ந்ததுமாயும் இருந்தது என்றுதான் சொல்ல வேண்டும். அப்படி நாம் கனவு கண்டாலும் அநேகமாய் ஞாபகத்தில் வராத கனவுகள் மிகவும் நல்லது.

அநேகமாய்க் கெட்ட கனவுகள் என்று சொல்லப்படுவது மாயக் கனவுகள்தான். அம்மாதிரியான கனவுகள் உண்மை போலத் தோன்றி மிகவும் பயத்தைக் கொடுக்கிறதாயிருக்கும். அம்மாதிரியான கனவு நேரிடும்போது உடனே அதற்குத் தகுந்த சிகிச்சை செய்ய முயலவேண்டும். சில மனிதர்களுக்கு இருதய நோயினால் அம்மாதிரியான கனவுகள் ஏற்படுகிறது. அப்பொழுது ரத்த ஓட்டம் மூளைக்குச் செல்லாமல் நிற்கிறது. அக்கனவுகள் உண்டாவதற்கு வயிறுதான் காரணம்.

வயிற்றில் சில கோளாறுகள் ஏற்படும் பொழுது அவ்வாறான கனவுகள் ஏற்படுகின்றன.

இவை யனைத்திற்கும் பெரிதும் காரணமா யிருப்பவை அஜீரணமே. மாயக் கனவுகள் காண்கிற ஒவ்வொருவரும் படுக்கைக்குப் போகுமுன் தான் உண்கிற உணவைப் பற்றி மிகவும் எச்சரிக்கையா யிருக்க வேண்டும். இவர்கள் படுக்கைக்குப் போகுமுன் மூன்று மணி நேரத்திற்கு முன்னமேயே கொஞ்சமாய்ச் சாப்பிட வேண்டும். மாயக் கனவுகள் வருத்தத்திற்கு இடமா யிருப்பதோடு, இரவெல்லாம் நித்திரை யின்மையினால் மறுநாள் விழித்திருந்து உழைக்க வேண்டிய நேரங்களும் மிகவும் பாரமாய்த் தோன்றும். மாயக் கனவுக்கு ஆங்கிலத்தில் "நைட்மேர்" என்று சொல்லுவார்கள்.

சில சமயங்களில் நாம் கனவு காண்கிற பொழுது அசாத்தியமான வேலைகளைச் செய்துவிடுவதுபோல் காண்கிறோம். அவைகளைச் செய்கிற பொழுது நாம் அதிசயப்படுவதில்லை. அதற்குக் காரணம் என்னவெனில், நம்முடைய மூளையின் உயர்ந்த பாகங்களும், நியாயத்தோடும், நன்மை தீமை இதுவென்று பகுத்தறியத் தக்கதாக இருக்கும் மூளையின் பாகங்களும் கனவு காண்கிற பொழுது நித்திரையிலிருக்கிறதினாலே தமக்குரிய வேலையைச் செய்ய முடியவில்லை. நாம் விழித்திருக்கும் பொழுது அவை மனோராஜ்யத்திலும், ஆகாயக்கோட்டைகளிலும் செல்லுகின்றது. அநேக அதிசயமான காரியங்களைச் செய்கிறதைப் போலக் கற்பனை செய்துகொண் டிருக்கிறோம். ஆயினும், மூளையின் உயர்ந்த பாகமெல்லாம் வெகு சுறுசுறுப்பாய் வேலைசெய்கிறதினாலே இவைகள் எல்லாம் வெறும் கற்பனைகள் என்ற எண்ணம் உண்டாகிறது.

✲

## புதுமாதிரி நூல் நிலையம்

இங்கிலாந்தில் ஷெப்பீல்டிலுள்ள நூல் நிலையத் தலைமை அதிகாரி இப்போது ஆறு பெண்களுக்குக் கதை சொல்லும் முறை சம்பந்தமாகப் பயிற்சி யளித்து வருகிறார். எல்லோரும் இருபது வயது நிரம்பாத யுவதிகள்தான். அவர்கள் பயிற்சி முடிந்ததும், ஊரிலுள்ள ஆறு நூல் நிலையங்களில் வாரத்துக்கு ஒருமுறை சிறு குழந்தைகளுக்குக் கதை சொல்லுவார்கள். வீட்டில் சந்தர்ப்ப வசதி யில்லாமல் இருந்தாலும், பெற்றோர்கள் குழந்தைகளைக் கவனிக்க முடியாமல் வெளியே வேலைக்குப் போக நேரிட்டாலும், குழந்தைகளுக்கு அறிவு புகட்டும் வேலையை மேற்கொள்வதற்காகவே இந்த ஆறு பெண்களுக்கும் பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது. படிக்கும் நூல் நிலையத்துடன் புது மாதிரியாக இந்தக் கேட்கும் நூல் நிலையமும் தோன்றி யிருக்கிறது.

—இந்தியன் பிப்பிள்.

## சேமிப்பு

எதிர் காலத்துக்காக நீங்கள் சேமித்து வைக்கத் தொடங்கும் போது, ஒன்றிரண்டு இன்பகரமான நினைவுகளையும் சேமித்து வையுங்கள்.

—சேல்ஸ் மேக்கர்

# செழிப்பான கூந்தல்




ஸ்திரீகளின் எல்லா ஆபரணங்களையும் விடச் சிறந்ததென்று, எக்காலத்திலும், எந்நாட்டிலும், கலைஞர்களால் கற்பனை செய்யப்பட்டும், கவிஞர்களால் பாடப்பட்டும் வந்திருக்கிறது. மேகத்திலிருந்து எட்டிப் பார்க்கும் சந்திரனுக்குக் கரிய கூந்தல் அணிந்த முகத்தைக் கவிஞர்கள் ஒப்பிட்டிருக்கிறார்கள்.

# ஜாப்கோ ஹேர் குரோயர்

**செழிப்பான கூந்தலை விருத்தி செய்து முகமண்டலத்திற்கு அபார சோபையை அளிக்கிறது**

## ஜயபாரதம் கோ.,

மதருஸ்—பெங்களூர்—எர்ணாகுளம்

## பருத்தி நூல்களுக்கு பிரதான ஸ்தாபனம்

# மதுரை மில்ஸ் கம்பெனி லிமிடெட்

மதுரை — தூத்துக்குடி — அம்பாசமுத்திரம்

எங்களுடைய விசேஷமான நூல்கள்:

| | | |
|---|---|---|
| 5,00,000 நூற்கும் கதிர்கள் | ஒத்தை நூல், இரட்டை நூல், பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல், முறுக் கேற்றிய நூல். | நம்பர் 80 வரை நூல்கள் |

●

நாங்கள் சப்ளை செய்வது:

கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக் கேற்ற வார்ப்பு நூல்கள், கனத்த வெப்பிங், கான் வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக் கேற்ற மிருதுவான சன்ன நூல்கள்.

எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப்போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற் றது.

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை

●

தற்காலம் நூல் விநியோகம் கட்டுப்பாடு செய்யப் பட்டிருப்பதால், உங்கள் தேவைக்கு உங்கள் மாகா ணம் அல்லது ஸ்டேட்டில் உள்ள துணிக் கட்டுப்பாடு அதிகாரிக்கு விண்ணப்பித்துக் கொள்ளவும்.

## ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,

மானேஜர்கள்

மூன்றாவது முறையாகக் காங்கிரசின் தலைமைப் பதவியை ஏற்றுள்ள பாபு ராஜேந்திரப் பிரசாத்தின் வாழ்க்கையையும், வாழ்க்கையின் சிறப்பியல்புகளையும் கூறுகிறது கட்டுரை. பீஹார் மாகாணத்தில் உதித்த இந்தத் தவப் புதல்வனுடைய வாழ்க்கை, சரித்திரத்திலே காணப்படும் ஏதோ ஒரு மகானுடைய வாழ்க்கையைப்போலிருக்கிறது. பம்பாய் கிரானிகிளிலிருந்து.

# ராஜேந்திரப் பிரசாத்

ப்ளூடெரியேர் ஸோர்ஸ்

"செயலினால்தான் வாழ்க்கைக்கு மதிப்பு ஏற்படுகிறது; வருஷங்களினால் அல்ல" என்று ஒரு பழைய பழமொழி கூறுகிறது. இந்த வகையில் தங்கள் வாழ்க்கைப் போக்கை வகுத்துக்கொள்ள முன்வருபவர்கள் வெகு சிலரே இருப்பார்கள். ஆனால், டிசம்பர் 3-ம் தேதியன்று அறுபத்துமூன்று வயது நிரம்பப் பெறுகிற டாக்டர் ராஜேந்திரப் பிரசாத், தம் வாழ்க்கையை நியாயமான ஒரு சுய திருப்தியுடன் நோக்குவதற்குரிய பரிபூரணமான சந்தர்ப்பமும் இருக்கிறது.

டாக்டர் பிரசாத்தின் வாழ்க்கை, அவர் இந்திய சுதந்திரத்துக்காகத் தொடர்ந்து செய்த தியாகங்களும், நாட்டுக்காகச் செய்த சுயநலமற்ற சேவைகளும் நிறைந்ததாகத்தான் இருக்கிறது. கீதையை உண்மையாகப் பின்பற்றும் ஒருவரைப் போல, பலனை எதிர்பார்க்காமல் சேவை செய்தார். சுயநலமற்ற சேவையே அவருடைய வாழ்க்கையின் குறிக்கோள். மிகவும் எளிமையான சுபாவமுடைய அவர், எப்போதுமே ஆடம்பரமான கௌரவங்களை வெறுக்கிறார். ஆனால், அவருடைய அசாதாரணமான அறிவையும், மனப்பண்பையும் பாராட்டும் வகையில், அவரைக் கௌரவமான அந்தஸ்து தேடி வரும்போது, நாட்டுக்குச் செய்ய வேண்டிய கடமை என்று கருதி அதை அவர் ஏற்றுக் கொள்ளுகிறார்.

பீஹார் மாகாணத்தில் ஸாரான் ஜில்லாவைச் சேர்ந்த ஜிராபாத்தில் 1884-ம் வருஷம் ராஜேந்திரப் பிரசாத் பிறந்தார். வம்ச வழியாக வந்த பண்பட்ட மேதையும், சலியாத உழைப்பும், ஸ்தாபன ரீதியாக மக்களைத் திரட்டும் திறமையும் இளமையிலேயே அவரிடம் காணப்பட்டன. அவருடைய எளிய தோற்றம், ஆழ்ந்த மனிதத் தன்மையையும், அவருடைய உண்மையான இயல்பையும், உன்னதமான மற்றக் குணங்களையும் நாம் அறிந்து கொள்ள முடியாமல் செய்துவிடுகின்றது.

மாணவராக இருக்கும்போதே ராஜேந்திரர் வெற்றி வீரராக விளங்கினார். முதலில் அவர் ஒரு மூஸ்லிம் மத குருவிடம் பாடம் படித்தார். உருதுவும் பார்சியுமே அவர் முதலில் கற்றுக்கொண்ட மொழிகளாகும். இப்போது ராஜன் பாபுவுக்கு மொத்தம் ஏழு மொழிகளில் பாண்டித்தியம் உண்டு; அபாரமான ஞாபக

சக்தியும் உடையவர். சப்ரா என்ற ஊரிலிருந்த பள்ளிக்கூடத்தின் மூலமாக இவர் கல்கத்தா சர்வ கலாசாலைப்பிரவேசப் பரீட்சையில், கலந்துகொண்டார். கல்கத்தா கலாசாலையிலே வெற்றி பெற்றவர்களுள் முதன்மை ஸ்தானம் வகித்த இவர், வங்காளியாக இல்லாதிருப்பதைக் கண்டு பலருக்கு வியப்பு ஏற்பட்டது. கல்கத்தா மாகாணக் கல்லூரியில் படித்த காலம் முழுமையும், எல்லாப் பரீட்சைகளிலும் முதல் வகுப்பிலே முதன்மையாகத் தேறிக்கொண்டே வந்தார். ஆங்கிலத்தில் எம். ஏ. பட்டம் பெற்ற பிறகு, கிரீர்கல்லூரியில் ஆங்கில இலக்கியம், சரித்திரம், பொருளாதாரம் ஆகியவற்றிற்குப் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். ஒரு வருஷ காலம் கழித்து, கல்கத்தாவுக்குத் திரும்பி, வக்கீல் தொழில் நடத்தினர். இதிலேயும் அவருக்கு அமோகமான வெற்றி கிட்டியது.

ஹிந்துஸ்தான் ரெவ்யூ பத்திரிகை, இவர் என்றாவது ஒரு நாள் தம் சொந்த மாகாணத்தின் ஹைகோர்ட்டில் நீதிபதி ஸ்தானத்தையும், காங்கிரஸ் சிம்மாசனத்தையும் அலங்கரிக்கப் போகிருர் என்று எழுதியது. ஜோசியம் பலித்துவிட்டது! பாட்ன ஹைகோர்ட்டு நீதிபதி ஸ்தானத்துக்குப் பல தடவைகள் அவருக்கு அழைப்புகள் வந்தன; அதே போல இந்தியத் தேசியகாங்கிரசின் ராஷ்டிரபதிப் பதவியும் இரண்டு முறைகள் கிடைத் திருக்கின்றன.

மாணவராக இருக்கும்போதே பொதுஜனத் தொண்டில் அவர் மனம் ஈடுபட்டது. மாணவர் இயக்கத்தில் பங்கெடுத்துக் கொண்டதுடன், 1902-ம் வருஷம் பீஹாரிகள் கழகம் என்ற ஒரு ஸ்தாபனத்தையும் நிறுவினர். இதுவே பிற்பாடு பீஹாரி மாணவர்கள் மகாநாடாக ஆயிற்று. அவர் கல்லூரியில் வாசித்துக் கொண்டிருந்தபோது, வங்கப் பிரிவினையால் நாடு முழுவதும் கிளர்ச்சி ஏற்பட்டிருந்தது. அப்போது நடந்த நிகழ்ச்சிகளைக் கண்டு இளைஞரான ராஜேந்திரரின் உள்ளம் கொதித்தது, சுதேசி இயக்கமும், விதேசி பகிஷ்காரமும் இந்திய அரசியலுக்குப் புத்துணர்ச்சியையும், புதுச்சக்தியையும் அளித்திருந்தன.

புது யுகத்தின் இந்த வேகத்தை மாணவரான ராஜேந்திரர் நன்கு அறிந்துகொண்டார்; 1906-ல் தாதாபாய் நௌரோஜியின் தலைமையில் நடந்த காங்கிரஸ் கூட்டத்தில் முதல் தடவையாகத் தொண்டராகச் சேர்ந்துகொண்டார்.

இந்தப் பால்ய மேதை பணியாற்றுவதில் கொண்டுள்ள வேகத்தை நன்கு அறிந்த இந்தியாவின் பெருமகன் கோபால கிருஷ்ண கோகலே, இவரை இந்திய ஊழியர் சங்கத்தில் சேரும்படி அழைத்தார். இந்தப் பொன்னை சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ள ராஜேந்திரர் பெரிதும் விரும்பினர். ஆனல், அவருடைய குடும்பம் குறுக்கே நின்றது. குறிப்பாக, அவருக்குத் தகப்பனர் போலிருந்த, தமையனர் மஹேந்திரர்தாம் தடுத்துவிட்டார். தம்முடைய விருப்பத்துக்கு மாருக, தலைவர் கோகலேயின் அழைப்பை மறுக்கும்படியான நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகி, வக்கீல் தொழிலையே மேற்கொண்டு நடத்தி வந்தார் ராஜன் பாபு.

வக்கீல் தொழிலைக் கல்கத்தாவி லிருந்து பாட்ன ஹைகோர்ட்டுக்கு மாற்றிக்கொண்டார் ராஜேந்திரர். அங்கே, முதல்தரமான வக்கீல் என்று பெயர் வாங்கினர். 1915-ல் எம். எல். பட்டமும் பெற்றார். ஆனல், வக்கீல் தொழிலில் எவ்வளவு வேலைகள் இருந்தபோதிலும், சமூக, கல்வித் துறைகளில் எவ்வளவு முடியுமோ அவ்வளவு பங்கெடுத்துக்கொண்டார். பீஹார் மாகாணச் சங்கத்தின் காரியதரிசியாக இருந்தார். அப்போது இந்திய சர்க்காரின் கல்வி மந்திரியாக இருந்த சர் சங்கரன் நாயர் கொண்டுவந்த பாட்ன சர்வ கலாசாலை மசோதாவைத் திருத்தியதில் ராஜேந்திரருக்குப் பெரும் பங்கு உண்டு. 1917-ல் கலாசாலை ஸ்தாபிக்கப்பட்டதும், செனெட்டிலும், ஸிண்டிகேட்டிலும் அங்கத்தினரா யிருந்து, அந்தக் கலாசாலையின் அலுவல்களில் பெரிதும் பங்கெடுத்துக்கொண்டார். அப்போது, மலிவான கல்வி முறையைக் கொண்டுவரவும், தாய் மொழியிலேயே கல்வி கற்பிக்கச்செய்ய வேண்டுமென்றும் இவர் மிகவும் பாடுபட்டார்.

இந்தச் சமயத்தில் இந்திய அரசியல் நிலைமையில் பெரும் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டுக்கொண்டிருந்தன. தேச முழுவதையும் கொந்தளிக்கச் செய்துகொண்டிருந்த அந்த நிகழ்ச்சிகள், ராஜேந்திரர் போன்ற தேச பக்தர்களின் கவனத்தைக் கவர்ந்தன. அப்போதுதான் தென்னப்பிரிக்காவி லிருந்து திரும்பிய மகாத்மா காந்தி, இந்திய அரசியல் அரங்கத்தில் பிரவேசித்துக்கொண் டிருந்தார். 1917-ம் வருஷம் சாபாரானில் தம்முடைய முதலாவது,வெற்றிகரமான சத்தியாக்கிரகத் திட்டத்தைப் புகுத்தியிருந்தார். ராஜேந்திரர் மகாத்மாவுக்கு அப்போது உறுதுணையாக விளங்கினர். சாபரான் விவசாயிகளின் குறைகளை விசாரணை செய்ய நியமிக்கப்பட்டிருந்த கமிட்டியில் ராஜேந்திரர் புரிந்த சேவையைக் காந்திஜி தம்முடைய சுய சரித்திரத்திலே மிக உருக்கமாக வர்ணித்திருக்கிறர்.

இதுவே, ராஜேந்திரர் அரசியல் அரங்கத்தில் புகுந்ததற்கு முதல் படியாக அமைந்தது. முதன் முதலில் அஹிம்சைக் கொள்கையை ஏற்றுக்கொண்ட காங்கிரஸ் தலைவர்களுள் ராஜேந்திரரும் ஒருவர். இவர் அஹிம்சையைப் பூரணமாகப் புரிந்துகொண்டு, மனமார ஏற்றுக்கொண்டார். "தார்மீகமான போர்க்கருவி" என்று தாம் வர்ணித்திருக்கும் இந்த அஹிம்சைக் கொள்கையின் வழியே, இன்றுவரை இவர் ஊக்கத்துடனும் உறுதியுடனும் நடந்து வருகிறர்.

1919-ல் மகாத்மா காந்தியின் செல்வாக்கு, இந்திய அரசியலில் மிக அதிகமாகிவிட்டது. ரௌலட் சட்டக் கிளர்ச்சியும், ஜாலியன் வாலாபாக் படுகொலையும், கிலாபத் இயக்கமும் நாட்டை அல்லோல கல்லோலப் படுத்திக்கொண்டிருந்த காலம் அது. ராஜன்பாபு காந்திஜியையும் அவருடைய ஒத்துழையாமை இயக்கத்தையும் முழு மனத்துடன் ஆதரித்தார். ஒத்துழையாமை இயக்கத்தைக் காங்கிரஸ் அதிகார பூர்வமாக 1920-ல் ஏற்றுக்கொண்டது. ஆனல், அதற்கு முன்பே ராஜேந்திரப் பிரசாத், வருமானம் மிக்க தம் தொழிலை உதறி எறிந்துவிட்டு, சர்வ கலாசாலையில் இருந்த பதவிகளையும் ராஜினமா செய்துவிட்டார்.

பீஹாரில் ஒத்துழையாமை இயக்கம் அபரிமிதமான வெற்றியைக் கண்டது. போட்டியற்ற வகையில் ராஜேந்திரருக்கு, அம் மாகாணத்தைத் தலைமை தாங்கும் பாக்கியமும் கிட்டியது.

புரட்சிகரமான அரசியலில் மன ஈடுபாடு இருந்த போதிலும் ராஜேந்திரர் நிர்மாண வேலைகளின் அவசியத்தை மறக்கவேயில்லை. காங்கிரசின் அழைப்புக் கிணங்கிக் கல்லூரிகளையும் பள்ளிக்கூடங்களையும் விட்டு வெளியேறிய ஏராளமான மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்க வேறு வழிகளைக் காட்ட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஒரு தேசிய சர்வகலாசாலையை நிறுவ எண்ணித் திட்டமிட்டார் ராஜேந்திரர். அதன்படி, பீஹார் வித்தியா பீடம் நிறுவப்பட்டது. இந்த ஸ்தாபனத்தில் 650 கல்வி நிலையங்கள் சேர்ந்தன. மாணவர் தொகை மொத்தம் 62,000. இந்தப் பீஹார் வித்தியாபீடம், தேச ஊழியர்களுக்குப் பக்க பலமாக இருந்தது; அரசாங்கத்துக்கு ஒரு சவாலாகவும் விளங்கிற்று. எனவே, இறுதியில் அரசாங்கம் இந்த ஸ்தாபனத்தைச் சட்ட விரோதமானதென்று பிரகடனப்படுத்தியது.

இந்த மகத்தான பணியின் மூலம், ராஜேந்திரர் தம்முடைய நிர்வாக ஆற்றல்களை நன்கு வெளிப்படுத்தினர். இந்த ஆற்றல்கள் பொதுமக்களின் கவனத்தைக் கவராமல் போகவில்லை. 1912 முதல் அ. இ. காங்கிரஸ் கமிட்டியில் அங்கத்தினராக இருந்ததால், 1922-ம் வருஷம் காங்கிரசின் பொதுக் காரியதரிசிப் பதவியை வகிக்கும்படி இவருக்கு அழைப்பு வந்தது. 1922-ல் காங்கிரஸ் காரியக் கமிட்டியில் அங்கத்தினரா யிருந்துகொண்டு, விடுதலைப் போராட்டத்தில் பல்வேறு விதங்களில் கலந்து கொண்டு வந்திருக்கிறர். மற்றத் தலைவர்களைப் போல, ராஜேந்திரர் வெளி நாடுகளுக்கு அதிகம் போனது கிடையாது. 1928-ல் பர்மாவிலிருந்து லண்டன் பிரிவு கௌன்சிலுக்குச் சென்றிருந்த ஓர் அப்பீலுக்காக லண்டன் செல்லும் வாய்ப்புக் கிடைத்தது. அதைப் பயன்படுத்திக்கொண்டு, பற்பல ஐரோப்பிய நாடுகளுக்கும் சென்று, பல பிரபலஸ்தர்களைச் சந்தித்தார்.

ஆஸ்திரியாவில் கிராஸ் என்னுமிடத்தில், சாமாதானப் பிரியர்கள் கூட்டம் ஒன்றின் அழைப்பை ஏற்றுக்கொண்டு, போயிருந்தார். அஹிம்சையின் முக்கியத்துவத்தையும், அர்த்தத்தையும் எடுத்துச் சொல்லும் நோக்கத்துடன்தான் ராஜேந்திரர் சென்றிருந்தார். ஆனல், கூட்டம் குழப்பத்தில் முடிந்து; அதனல் ராஜன் பாபுவுக்குப் பலத்த காயமும் ஏற்பட்டது. ஆனல், இந்த நிகழ்ச்சி, ராஜன் பாபுவுக்கு அஹிம்சையின்மேல் உள்ள நம்பிக்கையைத்தான் பலப்படுத்திற்று!

இதற்குப் பிறகு ராஜன் பாபுவின் நிர்வாகத் திறமை வெளிப்படக்கூடிய வேறொரு பெரிய நிகழ்ச்சி நடந்தது. 1934 ஜனவரி மாதம் 15-ம் தேதி பீஹார் மாகாணத்தில் ஏற்பட்ட பூகம்பம் அந்த மாகாணத்தையே சின்னபின்னப் படுத்திவிட்டது. பீஹாரிகளின் துன்பம், கற்பனையிலும் காணமுடியாத அளவுக்குப் பெருகிற்று. அதே சமயத்தில், அவர்களுடைய தலைவர், உடல் நலம் குன்றிச் சிறையிலே அடைபட்டிருந்தார். ஆனல், அவர்

உடல்தான் குன்றி யிருந்ததே தவிர உள்ளம் குன்றவில்லை என்பது பிற்பாடு தெரிந்தது. பூகம்பம் ஏற்பட்ட இரண்டு நாட்களுக்குப் பிறகு, வைத்தியர்களின் யோசனைப்படி ராஜன் பாபு விடுதலை செய்யப்பட்டார். உடல் நலம் குன்றி யிருப்பதையோ அல்லது தம் எதிரே உள்ள வேலை எவ்வளவு பெரிது என்பதையோ லட்சியம் செய்யாமல் நிவாரண வேலையில் உடனேயே ஈடுபட்டார். உத்தியோகப் பற்றற்ற ஸ்தாபனமாகிய பீஹார் மத்திய நிவாரணக் கமிட்டிக்கு இவரே தந்தை. இவருடைய வேண்டுகோளுக்கிணங்க, இந்தியாவின் எல்லாப் பாகங்களிலிருந்தும், ஏராளமான பணமும், உணவுத் தானியங்களும், உடைகளும், மருந்து வகைகளும் வந்து குவிந்தன. பொது ஊழியர்கள் ராஜன் பாபுவுக்குப் பெருத்த உதவியாக நின்றார்கள். இவருடைய அபாரமான யோசனைகளின் கீழே, நிவாரணக் கமிட்டியின் சேவை பிரமாதமான வெற்றி அடைந்தது.

1935-ல் நடந்த காங்கிரஸ் பொன் விழாவுக்குப் பிறகு, ராஜன்பாபு ராஷ்டிரபதியானார். பூரண சுதந்திரத்துக்குக் குறைந்த எதையும் இந்தியா ஏற்காது என்றும், இந்தியாவின் சகல மக்களுக்கும் விடுதலையும், உலக நாடுகளுடன் சுதந்திரமான உறவுமே பூரண சுதந்திரம் என்பதற்கு அர்த்தம் என்றும் அவர் கூறினார். வகுப்பு ஒற்றுமையை ஏற்படுத்தி, அதன் மூலம் விடுதலைப் பாதையில் இருந்த பெரிய முட்டுக்கட்டையை அகற்றும் உத்தேசத்துடன், அவர் ஸ்ரீ ஜின்னாவுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தினர். ஆனால், ஸ்ரீ ஜின்னா, சமரசத்துக்காக ராஜன்பாபு செய்த முயற்சிகளை எல்லாம் முறியடித்துவிட்டார்.

1935-ம் வருஷத்திய இந்திய சர்க்காரின் சட்டம் அமுலுக்கு வந்ததும், ராஜேந்திரரை, அவருடைய மாகாணத்தின் பிரதம மந்திரியாக ஆக்குவதற்குப் பலர் முயன்றார்கள். ஆனால், எல்லாம் வீணாயின. ராஜேந்திரர் பின்னணியிலேயே இருக்க விரும்பியதுடன், தம் சகாக்களையெல்லாம் பொறுப்பு மிக்க பதவிகளில் அமர்த்திவிட விரும்பினர். காங்கிரஸ் மந்திரி சபைகள் சலியாத உழைப்பையும், ஒருமித்த நோக்கத்தையும் கொள்ள வேண்டுமென்று, தம்மால் ஆனதை யெல்லாம் செய்தார். இதற்கிடையே 1939-ல் சுபாஷ் போஸ் ராஷ்டிரபதிப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சந்தர்ப்பக் கோளாறினால் ராஜினமா செய்யும்படி வற்புறுத்தப்பட்டார். இதனால், காங்கிரசுக்குள்ளேயே நெருக்கடி ஏற்பட்டு உச்சத்தை அடைந்திருந்தது.

திரிபுரி சம்பவத்துக்குப் பிறகு, 'கடவுளின் சொந்தப் பிள்ளை' என்று அழைக்கப்பட்ட ராஜேந்திரரைத் தவிர, காங்கிரசை நடத்திச்செல்ல வேறு யாராலும் முடியாது என்ற நிலைமை ஏற்பட்டது. எனவே, இரண்டாம் முறையாகவும் ராஜேந்திரப் பிரசாத் ராஷ்டிரபதி ஆனர்.

இந்தியாவுக்கு உள்ளேயும் வெளியேயும் பெருத்த மாறுதல்கள் ஏற்பட்டு வந்தன. மறக்க முடியாத வருஷமாகிய அந்த 1942-ம் வந்தது. "இந்தியாவை விட்டு வெளியேறு!" என்ற பிரசித்திபெற்ற தீர்மானத்தை நிறை

வேற்றிய பம்பாய்க் காங்கிரசுக்கு, உடல் நலம் சரியில்லாததால் ராஜன்பாபு வரவில்லை. அதன் பலனாக, காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கத்தினர்களுள் இவர் ஒருவர்தான் அகமதுநகர் கோட்டையில் அடைபடாமல், தம் சொந்த மாகாணத்திலேயே கைதியாக்கப்பட்டார். சிறையை விட்டு வெளியே வந்ததும், இரு சமுதாயக் கொள்கையை ஆதார பூர்வமாகக் கண்டிக்கும், இந்தியா பிரிக்கப்பட்டால் என்ற புஸ்தகத்தை எழுதி வெளியிட்டார். அதிலே அவர் கொடுத்திருக்கும் அபிப்பிராயங்களில் பெரும்பாலானவை இப்போது உண்மையாகி வருகின்றன.

இடைக்கால சர்க்காரில் ராஜன்பாபு உணவு-விவசாய மந்திரியாக நியமிக்கப்பட்டார். சென்ற வருஷத்தில் அரசியல் நிர்ணய சபையின் தலைவராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். அ. நி. சபைக்குள்ளோ, வெளியிலோ அவருக்கு எவ்வித எதிர்ப்பும் ஏற்படவில்லை. அப்போது அவருக்கு அளிக்கப்பட்ட புகழுரைகளே, பொது மக்களிடையே அவருக்கு உள்ள பிராபல்யத்துக்கும், சிரமமும் பொறுப்பும் மிக்க அந்தவேலைக்கு அவரிடம் உள்ள அப்பழுக்குச் சொல்லமுடியாத யோக்கியதாம்சத்துக்கும் தக்க சான்றுகளாகும். இந்தியாவின் எதிர்காலத்தையே உருவாக்கும் பெரிய பணியை மேற்கொண்டிருக்கும் அந்த மகத்தான ஸ்தாபனத்தின் அலுவல்களைத் திறம்பட நடத்திச் செல்லுவதற்கு அவரைவிடத் தகுதியான வேறு யாரையும் பொறுக்கி யிருக்க முடியாது என்பதைப் பின்னல் நடந்த சம்பவங்கள் நிரூபித்துவிட்டன. பிற்பாடு, மத்தியப் பிரிவினைக் கௌன்ஸிலில் இந்தியாவின் பிரதிநிதியாகவும், சுதந்திர இந்தியாவின் மந்திரி சபையில் ஒருவராகவும் ஆனார். மிகக் கஷ்டமான உணவு—விவசாய இலாகாவை ஏற்றுக் கொண்டார். அந்தச் சிரமமான வேலையிலும் தம்மால் ஆனதை யெல்லாம் செய்தார் என்றால் மிகையாகாது.

ராஜன் பாபுவுக்குப் பெருமை தரும் இந்த அரிய சாதனைகளின் அடிப்படையில், அவருடைய ஆழ்ந்த, கண்ணியமான மனிதத்தன்மை நிலவுவதைப் பார்க்கலாம். "இந்திய அரசியலின் கண்ணிய புருஷர்" என்று இவரைச் சொல்லுவார்கள். "புத்தருடைய ஆத்ம சக்தியின் வழித்தோன்றல்; பீஹாரின் முடிசூடா மன்னர்; விடுதலையின் வழிகாட்டி; இந்திய லட்சியத்தின் சின்னம்" என்று ஸ்ரீமதி சரோஜினி தேவி இவரைக் குறிப்பிட்டிருக்கிறார்.

அவருடைய எளிமையான தோற்றத்துக்கு இதுவே சரியான வர்ணனை. மக்களின் துயரங்கள் அவருடைய உள்ளத்தில் ஆழப் பதிந்திருக்கின்றன. இதுதான் மனித அபிமானம் என்னும் சுபாவத்தை குறைவின்றிப் படைத்துள்ள இவரை ஒரு "நல்ல அண்டை வீட்டுக்காரர்" என்று அழைக்கும்படியான அளவுக்குக் கொண்டுவந்திருக்கிறது.

தாமே நியமித்துக் கொண்ட எளிமையான பழக்க வழக்கங்களுடனேயே ராஜன்பாபு வாழ்கிறார். அவருடைய தேவைகள் மிகக் கொஞ்சமானவை; எளிமையானவையும் கூட. எப்போதும் மூன்றாவது வகுப்பில் பிரயாணம்

செய்வதையே அவர் விரும்புகிறார். தம்முடைய நாட்டுக்கும் மக்களுக்கும் சேவை செய்வதைத் தவிர வேறு எந்த அபிலாஷையும் அவருக்குக் கிடையாது. அவருடைய தாராள சுபாவம் மிகவும் பிரசித்தி பெற்றது. அவர் செய்த தருமங்களுக்குக் கணக்கே கிடையாது. அவருடைய முரட்டுத்தனமான வெளித்தோற்றத்தினுள்ளே மிக மிக மென்மையான ஈரம் கசியும் நெஞ்சம் அடங்கிக் கிடக்கிறது.

ராஜன் பாபுவையும், அவருடைய தாராள சுபாவத்தையும் பற்றிப் பல கதைகள் வழங்குகின்றன. பாட்னா ஹைகோர்ட்டில் தாம் வகித்து வந்த நீதிபதிப் பதவியை விட்டுவிட்டு, ஒத்துழையாமை இயக்கத்தில் அவர் சேர்ந்த போது அவருடைய பாங்குக் கணக்கில் ரூபாய் பதினைந்தே தான் இருந்ததாம். அவருடைய ஒரு மாதச் சம்பாத்தியமே ஆயிரக் கணக்கில் இருக்கும்! ஆனால் அவருடைய சொந்த தேவைகளுக்காகச் செலவழிக்கப் படவில்லை அந்தப் பணம். எல்லாம் அவருடைய பொது, சமூக அலுவல்களிலேயே செலவழிந்திருந்தன! சமீபத்தில் இன்னொரு உருக்கமான சம்பவம் நடந்தது. அவர் 1945-ல் சிறையிலிருந்து விடுதலையாகி வெளியே வந்தார். தாம் சிறையில் இருந்த காலத்தில் பீஹார் மக்கள் எத்தனை சொல்லொணாக் கஷ்டங்களை அனுபவித்திருக்கிறார்கள் என்பதையும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் எவ்வளவு அட்டூழியங்களைச் செய்திருக்கிறது என்பதையும் நேரில் கண்டு அறிந்ததும், தம் அன்புக்குரிய பீஹாரி மக்களை நினைத்து விம்மி விம்மி அழுதார்! அவருடைய அடக்க ஒடுக்கமான சுபாவமும் மிகப் பிரபலமானது. அவர் இஷ்டப்படி மட்டும் சம்பவங்கள் நடந்திருக்குமென்றால், இன்று அவர் காங்கிரஸ் தலைவர்களின் முன்னணியில் நின்றிருக்கவே மாட்டார். அவர் டில்லியின் பிரம்மாண்டமான காரியங்களையும், மத்திய செக்ரடேரியட்டின் தஸ்தாவேஜுகளையும்விட, பீஹாரின் திறந்த வயல் வெளிகளையும், அங்கேயுள்ள அவருடைய சிறிய குடிசையையுமே அதிகமாக விரும்புவார். அவருள்ளே மறைந்து கிடக்கும் குணங்களும், திறமையுமே அவரை இந்த நிலைக்கு உயர்த்தியிருக்கின்றன.

பேசும்போது, அவர் முக சேஷ்டைகளோ மற்றப் பிரசங்கத் தோரணைகளோ இல்லாமல் தம் இருதயத்தைத் திறந்து காட்டுகிறார். அதன் மூலம் கேட்பவர்களின் உள்ளத்தையும் ஈர்த்து விடுகிறார். இதுவரை அவர் யாருடைய அதிருப்தியையும் விரோதத்தையும் சம்பாதித்துக் கொண்டது கிடையாது. தகராறு எழும்போது, எதிரியின் அபிப்பிராயத்துக்கு மிக அதிகமாகவே சலுகை காட்டுகிறார். அவருடைய, அனுசரணையான சுபாவம்தான், இந்திய தேசியக் காங்கிரசின் லட்சியங்களை உருவாக்கும் பொறுப்பு மீண்டும் ஒரு முறை அவருக்கு ஏற்படும்படி செய்திருக்கிறது போலும்!

✲

நாட்டுப் பற்றைக் காட்டிலும் வேறு எந்தப் பொருளிலும் அதிகப் பற்று இருக்க முடியாது.

—பிளேட்டோ

# பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ்

## கம்பெனி லிமிடெட்

( இந்தியாவில் ஸ்தாபிதம் 1933 )

●

தலைமை ஆபீஸ் : மதுரை

●

சிறந்த சேவை செய்து வருகிறது

## நெருப்பு, மோட்டார் விபத்து

முதலிய

சகலவித இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள்

---

மொத்த ஆஸ்திகள் ரூ. 62,00,000

---

கிளைகள் : பம்பாய், அகமதாபாத்,
கல்கத்தா, ராவல்பிண்டி.

●

பிரதம ஏஜெண்டுகள் :

**ஏ. & எப். ஹார்வி லிமிடெட்**

மதுரை Etc.

# வனஸ்பதி என்பது என்ன?

கம்பெனியார்

சில மாதங்களாக வனஸ்பதியைக் குறித்து அநேக கட்டுரைகள் பத்திரிகைகளில் வருகின்றன. அவை எல்லாம் வனஸ்பதி கெடுதல் செய்யக் கூடியது என்று வற்புறுத்துகின்றன. ஆனல் அக் கட்டுரைகளைத் தீர ஆராய்ந்து பார்த்தோமானல் அவை எல்லாம் தப்பெண்ணங்களை உண்டாக்கக் கூடியவையாகவும் பௌதிக சாஸ்திரத்திற்கு விரோதமானதாகவும் போதிய ஆதாரமற்ற செய்திகளைக் கொண்டதாகவும் இருக்கின்றன.

சக்தி மாசி மாத வெளியீட்டில் ப. வெ. வேங்கட சுப்பிரமணியன் அவர்கள் "எண்ணெய் நெய்யாகுமா?" என்னும் தலைப்பையுடைய கட்டுரையில் தப்பெண்ணங்களை உண்டாக்கக் கூடியதும், அபிப்பிராய பேதங்களை யுடையதுமான அம்சங்களைப் புகுத்தியிருக்கிருர். ஆதலால் சக்தி வாசகர்களுக்கு வனஸ்பதியின் உண்மையை எடுத்துக் கூறும் நோக்கத்துடன் இக் கட்டுரை எழுதப்படுகிறது.

பல ஆண்டுகளாக ஆயிரக் கணக்கான வீடுகளில் உபயோகப்படுத்தப்படும் வனஸ்பதி ஒருசாதாரண தாவர எண்ணெய். வனஸ்பதி தாவர எண்ணெயைக் காட்டிலும் சுத்தமானது. கொழுப்பு, அமிலம், எண்ணெயின் நிறம் முதலியன நீக்கப்பட்டது. இந்த எண்ணெய் கெட்டியாவதற்காகக் குறித்த பக்குவத்தில் இறுகச் செய்யப்படுகிறது. இந்த முறை வனஸ்பதி வெளியூர்களுக்கு அனுப்பும் போது உருகி ஒழுகாமலும் நம் நாட்டின் உஷ்ண நிலைமையிலும் கூட சுத்தம் செய்த எண்ணெயைக் காட்டிலும் நேர்த்தியாக இருக்கவும் செய்கிறது. இதன் பிறகு இது சுவையும் மணமும் இல்லாததாகச் செய்யப்படுகிறது. வேங்கட சுப்பிரமணியன் சொல்வதுபோல் எல்லா வனஸ்பதியும் பருத்திக் கொட்டை எண்ணெயிலிருந்து செய்யப்படுவதில்லை. சில வனஸ்பதிகளில் மாத்திரம் தான் பருத்திக்கொட்டை எண்ணெயின் சம்பந்தம் உண்டு.

வனஸ்பதியில் வைடமின்கள் அதில் வேண்டுமென்று கலந்தாலொழியக் கிடையாது. ஏனென்ருல் வனஸ்பதி உற்பத்தி செய்யப்படும் எண்ணெயில் வைடமின்கள் கிடையாது. ஆனல் நெய்யில் சிறிதளவு வைடமின்

இவ் வருஷம் மாசி மாத சக்தியில் வெளிவந்த ஒரு கட்டுரைக்கு மறுப்பாக இக் கட்டுரை வெளிவருகிறது. 'இந்திய வனஸ்பதி தயாரிப்பவர் சங்க'த்தினரால் எழுதப் பெற்றது.

கள் இருக்கின்றன. அவைக ளெல்லாம் சமையல் செய்யும் போது அழிக்கப்படுகின்றன. வனஸ்பதி நெய் அல்லது எண்ணெயின் முக்கிய குணம் நம் வாழ்க்கைக்கும் வளர்ச்சிக்கும் அத்தியாவசியமான கொழுப்புச் சத்தைக் கொடுப்பதே. பலவிதமான கொழுப்புக்களுக்கும் குணம் என்பது ஒன்று தான்.

வனஸ்பதியின் மேல் வேங்கட சுப்ரமணியன் சுமத்தும்வேருெரு குற்றச்சாட்டு என்ன வென்றுல் வனஸ்பதியில் நிக்கல் (Nickel) என்ற உலோகம் கலந்திருக்கிறது என்பதே. நிக்கல் கலப்பது ஏன்? இறுகச் செய்யும் முறையில் கெமிகல் சம்பந்தத்தைத் துரிதப்படுத்துவதற்காகவே சிறிதளவு நிக்கல் உபயோகப் படுத்தப்பட்டாலும் கெமிகல் சம்பந்தத்தில் அதன் வேலை முடிந்தவுடன் சுத்தப்படுத்தும் முறையினுல் நிக்கல் முழுவதும் அகற்றப்படுகிறது. ஆகையால் வனஸ்பதியில் நிக்கல் உலோகம் எஞ்சியிருப்பது கிடையாது.

மேலும், நிக்கல் உலோகம் அப்படி சிறிதளவு வனஸ்பதியில் இருந்தாலும்கூட அது கெடுதல் ஒன்றும் செய்யாது. ஐரோப்பாவில் இது சம்பந்தமாக நடந்த ஆராய்ச்சியின் மூலம் மனிதன் நிக்கல் உலோகத்தைக் குறிப்பிட்ட ஓர் அளவு உட்கொண்டால் கெடுதல் ஒன்றும் நேராதென்றும் அது கழிவுப் பதார்த்தங்களுடன் வெளியே தள்ளப்படுகிறது என்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நாம் தின்சரி உபயோகப் படுத்தும் வெங்காயம், காரட், தக்காளி முதலிய காய்களிலும் நாம் அடிக்கடி நிக்கல் சம்பந்தப்பட்ட பாத்திரத்தில் தயாரிக்கும் உணவுப் பொருள்களிலும் நிக்கல், வனஸ்பதியில் இருப்பதைவிட அதிக அளவில் இருக்கிறது என்பதை வனஸ்பதியில் நிக்கல் உலோகம் இருக்கிறது என்று குற்றம் சாட்டும் வேங்கட சுப்பிரமணியனும் பிறரும் அறிய வேண்டிய விஷயம்.

இந்தியாவின் மத்திய அரசாங்கத்தாரின் அறிக்கைப் பிரகாரம் வனஸ்பதியின் உச்சக் கொழுப்பு அமிலசத்து 0·25% ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எண்ணெயின் கொழுப்புச் சத்து, மூல காரணமான விதையையும், உற்பத்தியாகும் காலத்தையும் பொறுத்து 1 முதல் 6% வரை மாறுபடுகிறது. மிக அதிகமான இக்கொழுப்பு அமிலசத்துதான் கொழுப்புப் பதார்த்தத்தை எளிதில் ஜீரணிக்க முடியாததாகவும் காரலெடுக்கும் படியாகவும் செய்கிறது.

வனஸ்பதியின் உருகும் நிலை நம் உடல் உஷ்ண நிலையைவிட அதிகமாக இருப்பதாகவும், ஆகையினுல் எளிதில் ஜீரணமாகாது என்றும் வேங்கட சுப்பிரமணியன் எழுதியிருக்கிருர். ஆனுல் இந்திய அரசாகத்தார் வனஸ்பதியின் உருகு நிலை 37°c-ல் தான் இருக்கவேண்டு மென்று நிர்ணயித்திருக்கிருர்கள் இது சரீர உஷ்ண நிலைக்கு சமமானது. பசு வெண்ணெயின் உருகு நிலை 28·5°c—லிருந்து 43·5°c—வரையிலும் உள்ளது என்று காசி ஹிந்து சர்வ கலாசாலையைச் சேர்ந்த டாக்டர் காட்போல் (Godbole) சட்கோபால் முதலியவர்கள் ஆராய்ச்சியில் கண்ட உண்மை. ஆகையினுல் வனஸ்பதியின் உருகுநிலை உடலுக்குக் கெடுதல் செய்யக்கூடிய அளவுக்கு அதிகமாக உள்ளது என்று சொல்ல முடியாது.


LUX
LUX TOILET SOAP
"மேனியழகை
லக்ஸ் டாய்லட் சோப்பின்
வெண்மையான நறுமணம் கொண்ட
நுரையால் காப்பாற்றுங்கள்"
என்று கூறுகிருர் எஸ். வரலக்ஷ்மி
சினிமா நட்சத்திரங்கள் விரும்பும் அழகையளிக்கும் சோப்
LTS. 172-111-40 TM
LEVER BROTHERS (INDIA) LIMITED



# அவளுடைய பொக்கிஷம்

சூதக வியாதியினின்று விடுதலேயளித்து, புத்திர பாக்கியத்திற்கு உதவிய அருண டானிக்கை தன் அருமைக் குழந்தையைப் போல் பொக்கிஷமாகவும், வரப்ரசாதமாகவும் கருதுகிருள்.

பண்டிட் டி. கோபாலாசார்லுவின்

## அருண

கர்ப்பாசயரோக நிவாரணி

ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட், மதராஸ் 17.


# சக்தி ★ மாத வெளியீடு

| | | | |
|---|---|---|---|
| தனிப் பிரதி 'தபால்' | 0 8 | ஒரு வருஷம் | 6 0 |
| ஆறு மாதம் | 3 8 | 2 வருஷம் | 11 0 |

ரெஜிஸ்டர் மூலம்பெற விரும்புவோர் பிரதி ஒன்றுக்கு 0-3-0 விகிதம் சேர்த்து அனுப்பவேண்டும்

### பர்மா

| | | | |
|---|---|---|---|
| தனிப் பிரதி | 0 9 | ஒரு வருஷம் | 7 0 |
| ஆறு மாதம் | 4 0 | 2 வருஷம் | 13 0 |

### மலேயா, முதலிய வெளி நாடுகளுக்கு

| | | | |
|---|---|---|---|
| தனிப் பிரதி | 0 10 | ஒரு வருஷம் | 8 0 |
| ஆறு மாதம் | 4 0 | 2 வருஷம் | 15 0 |

★

**சக்தி காரியாலயம் சென்னை 14**

என்ற விலாசத்திற்குச் சந்தாத் தொகை அனுப்பவேண்டும்

வனஸ்பதியில் 'ஐசோ ஒலிக்' என்னும் அமிலம் இருக்கிறது என்று வேங்கடசுப்பிரமணியன் சொல்லுகிறார். வெண்ணெயில் வனஸ்பதியில் உள்ள அதே மாதிரியான 'ஐசோ ஒலிக்' அமிலம் இருப்பதாகக் கண்டுபிடித்த பேயர், ஜான்சன், தெண்டை என்ற டச்சு விஞ்ஞானிகள் 'நேச்சர்' (Nature-1946) பத்திரிகையில் இதைப்பற்றி எழுதியிருக்கிறார்கள்.

ஆகையால் மேலே குறிப்பிட்ட விஷயங்களிலிருந்து நாம் அறிவது என்ன? உயர்தரமான எண்ணெயை சுத்தப்படுத்தி பிறகு இறுகச் செய்கிறார்கள். துர்நாற்றமில்லாமல் நறுமணம் கொடுக்கப்பட்டு சுகாதார விதிக்குட்பட்ட பாத்திரங்களில் அடைக்கப்பட்டு வெளிவருவதே வனஸ்பதி. அது உடலுக்குக் கெடுதல் செய்யக் கூடியது அல்ல. ஆனால் அது நமது ஜனங்களின் உடல் போஷணைக்கும், நாளுக்கு நாள் அதிகரிக்கும் தேவைக்கும் போதிய கொழுப்புச் சத்தைக் கொடுக்கும் ருசிகரமான வஸ்து என்பது திண்ணம்.

*

## பென்ஸிலினையும் மிஞ்சிவிட்டது

சமீபத்தில் பிரெஞ்சு டாக்டர் ஒருவரால் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு மருந்து, டைபாய்ட் வியாதியை இரண்டுநாட்களில் குணப்படுத்திவிடுகிறது. ப்ளூ என்கிற மிகக் கொடியவியாதியையே 12 மணிநேரத்தில் சௌகரியப்படுத்திவிடுகிறது. விஷக்கடி முதலிய வியாதிகளை 4 மணி நேரத்தில் குணப்படுத்துகிறது.

பென்ஸிலினால் குணப்படுத்த முடியாத வியாதிகளையெல்லாம், இந்தப் புதுமருந்து குணப்படுத்துகிறது. குழந்தைகளுக்கு வயிற்றில் உண்டாகும் 'டையாஹோயா' என்ற வியாதி ஒவ்வொரு வருஷமும் ஆயிரக்கணக்கான குழந்தைகளைக் கொல்லுகிறது; அந்த வியாதியைத் தீர்க்க இதுவரை எந்த மருந்தும் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால் இந்தப் புதுமருந்து இரண்டுமணி நேரத்தில் அந்த வியாதியைத் தீர்த்துவிடுகிறது.

இவ்வளவுக்கும், இந்தப் புதுமருந்தின் விலை மிகமிகக் குறைவு; மருந்துக்கடைகளில் வாய் கொப்பளிக்கும் மருந்து எவ்வளவு குறைவான விலைக்குக் கிடைக்கிறதோ அவ்வளவு குறைவான விலைதான்.

இந்த ஆச்சரியமான மருந்து பிரெஞ்சுதேசத்தில் யுத்தகாலத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த விஞ்ஞான ரகசியத்தை இதுவரை பிரெஞ்சு தேசம் மறைத்து வைத்திருந்தது.

—ப்ரீ இண்டியா

## யாரைநோவது?

"இந்தா பாருங்கள்! ஐந்து மணியிலிருந்து இங்கே காத்துக் கொண்டிருக்கிறேன்; இப்பொழுது ஆறரை மணியாயிற்று. இன்னும் அந்த நண்பர் வரவில்லை. யாரை நொந்து கொள்ளுவது?"

"அடே! அந்த நண்பர் உங்களை எத்தனை மணிக்குப் பார்ப்பதாகச் சொல்லியிருந்தார்?"

"நான்கு மணிக்கு!"

—சண்டே ஸ்டாண்டர்டு

## கூந்தல் வளர்ச்சிக்கு

நீங்களே தைலம் செய்ய

# காஷ்மீர் குஸம்

60 வருஷ
நம்பிக்கை பெற்ற
ஓர் சிக்கன முறை

ஆதித்யா ஏஜன்ஸீஸ்
54, பந்தர் தெரு :: மதறாஸ்.

அவசிய குடும்ப-சஞ்சீவி
333
# ஸான்டலக்ஸ்
நறுமண சரும-ரக்ஷிணி

PUBLICITY: UNICON, MADRAS

ஆயுர்வேத வித்வான் B.V. பண்டிட்ஸ்
'சத்வைத்தியசாலை' நஞ்சன்கூடு

# ஜ்வரேக்

எவ்வித ஜ்வரங்களுக்கும்

குழந்தைகளுக்கு

- காஸ்மஸ் — கஸ்தூரி மாத்திரை
- கர்ஜன் — கோரோஜனை மாத்திரை
- பாலக்ஸ் — பேதியாக மாத்திரை



## கூலெக்ஸ்
உஷ்ண சமன ஸ்நான தைலம்

பல் உபாதைகளை கண்டிக்க
I.D.L. மெடிகேடட்
## நஞ்சன்கூடு பல்பொடி

சிறந்த மைசூர் ஊதுவத்திகள்

## பிரேமலீலா

அகர், ஜவ்வாது, ஜெயலக்ஷிமி

சோல் ஏஜண்டுகள் :

யுனைடெட் கன்ஸர்ன்
54, பந்தர் தெரு : மதராஸ்

மதுரை: 42, தெற்காவணி மூலவீதி
கோவை: 234, ராஜா தெரு
பம்பாய்: 277, தேவதார் ரோடு மாடுங்கா

அடுத்த விளையாட்டுப்
பந்தயத்தில்



# அம்ருதா

ரத்த சுத்தி
திராவகம்..



கலக்கம், ஆயாசமில்லாமல் நன்கு விளையாடி வெற்றிபெறச் செய்கின்றது.

நரம்புகளை
முறுக்கேற்றுகிறது

333.A.F.

## கேசரி குடீரம் லிட். மதராஸ்

கேஸரி குட்டீரம் லிமிட்டெட், மதருஸ்

ஒரிஸ்ஸா, நைஜாம் சமஸ்தானம், ஆந்திரா
ஜில்லாக்கள், தமிழ் நாட்டுக்கு ஏஜண்டுகள் :

சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்

பேர்ஹாம்பூர், செகந்திராபாத்,
பெஜவாடா, மதுரை.

# வனஸ்பதி

ப. வெ. வேங்கடசுப்பிரமணியன்

நெய்யை விலை கொடுத்து வாங்க இயலாத சாதாரண 'ஜனங்கள்' குறைந்த விலைக்கு வனஸ்பதி அல்லது இறுகின எண்ணெயை வாங்கி உபயோகிக்கிறார்கள். இப்படி நம் ஜனங்கள் வாங்கி உட்கொள்ளும் வனஸ்பதியை எப்படித் தயாரிக்கிறார்கள் என்று அறிவது அவசியம்.

எண்ணெயில் ஹைட்ரோஜன் அணுக்களைப் புகுத்தி குறை கொழு ஆஸிட்களை நிறை கொழு ஆஸிட்களாக மாற்றினால் எண்ணெய் கொஞ்சம் கொஞ்சமாக இறுகிக்கொண்டே வரும். நேரடியாக எண்ணெயில் ஹைட்ரோஜனைச் செலுத்தினால் இந்த மாறுதல் ஏற்படாது. இந்த மாறுதலைத் துரிதப்படுத்துவதற்கு எண்ணெயுடன் சிறிதளவு உந்து வஸ்து (காடலிஸ்ட்) வை உபயோகிக்க வேண்டும். இவ்வாறு வனஸ்பதி செய்வதற்கு உபயோகப் படுத்தும் 'உந்து வஸ்து' 'நிக்கல்' என்ற ஓர் உலோகம்.

எண்ணெய் தவிர வனஸ்பதி செய்வதற்கு வேண்டிய மூலப் பொருள்களில் முக்கியமானது ஹைட்ரோஜன். ஹைட்ரோஜன் ஜலத்தை உண்டாக்கும் வாயுக்களில் ஒன்றாதலால் அதை ஜல வாயு என்றும் சொல்லுவார்கள். ஜலத்தில் மின்சாரத்தைப் பாய்ச்சினால் அது பிராணவாயுவாகவும் ஹைட்ரோஜனாகவும் பிரிந்து விடும். இவ்வாறு நீரைப் பிரித்து ஹைட்ரோஜன் செய்வதற்கு அதிக மின்சார சக்தி தேவை. இதனால் இவ்விதம் ஹைட்ரோஜன் உற்பத்தி செய்வது மலிவாக மின்சார சக்தி கிடைக்கும் இடத்தில்தான் சாத்தியம்.

இந்தியாவில் பெரும்பான்மையான வனஸ்பதித் தொழிற்சாலைகளில் மேற்சொன்னவாறே ஹைட்ரோஜனை உற்பத்திசெய்கிறார்கள். வனஸ்பதிசெய்வதற்கு இவ்விதம் ஹைட்ரோஜன் தயார் செய்வதில் மிகவும் முக்கியமான ஓர் அனுகூலம் இருக்கிறது. வனஸ்பதி செய்வதற்கு உபயோகிக்கும் ஹைட்ரோஜன் மிகவும் சுத்தமாயிருத்தல் அவசியம். ஹைட்ரோஜன் சுத்தமாயில்லாவிட்டால், உந்து வஸ்துவாகிய நிக்கல் சீக்கிரம் வீரிய மிழந்துவிடும். ஹைட்ரோஜனில் பிராணவாயு முதலிய அந்நியப் பொருள்கள் இருந்தால், ஹைட்ரோஜன் தீப்பிடித்து தொழிற்சாலைக்கே ஆபத்தை உண்டாக்கலாம். நீரில் மின்சாரத்தைப் பாய்ச்சி, கிடைக்கும் ஹைட்ரோஜன் மிகவும் சுத்தமாயிருப்பதனால் இதை மேலும் சுத்தப்படுத்த வேண்டிய அவசியமில்லை. இதனால் வனஸ்பதி செய்யும் செலவில் சிறிதளவு சிக்கனம் ஏற்படும்.

மின்சார சக்தியை உபயோகிக்காமலும் ஹைட்ரோஜன் உற்பத்தி செய்ய முடியும். நீண்ட குழாய்களில் கரித் (கோக்) துண்டுகளை எடுத்துக்கொண்டு குழாய்களை வெளிப்புறமாகச் சூடேற்றி, கரித்துண்டுகளைத்

இது, வனஸ்பதி தயாரிக்கும் முறையை விவரிக்கும் கட்டுரை.

தணலாக்குவார்கள். இவ்வாறு சிவந்த தணல்மீது அதிகச்சூடாக்கின நீராவியைச் (சூப்பர் ஹீட்டட் ஸ்டீம்) செலுத்தினால் 'கார்பன் மானாக்ஸைட்' என்ற வாயுவும் ஹைட்ரோஜனும் கிடைக்கும். இந்த வாயுக்களைத் தனித் தனியே பிரிப்பதற்கு மிகவும் குறைந்த உஷ்ணத்திற்கு, அதாவது பனி உருகு நிலைக்கு, செ. கி. 19° டிகிரிக்கும் கீழ் ஜில்லிடச் செய்தால், கார்பன் மானாக்ஸைடு மாத்திரம் திரவ ரூபமாகி விடும். இவ்வாறு பிரிக்கப்பட்ட ஹைட்ரோஜனை வனஸ்பதி செய்ய உபயோகிக்குமுன் சுத்தப்படுத்த வேண்டியது முகவும் அவசியம். சுத்தமான ஹைட்ரோஜனை பெரிய இரும்பு உருளைகளில் அதிக அமுக்கத்தில் அடைத்து வேண்டிய பொழுது உபயோகிக்கிறார்கள்.

எவ்வளவு ஹைட்ரோஜன் தேவையாக இருக்கும்? ஒரு டன் எண்ணெயையோ, அல்லது பருத்திக் கொட்டை எண்ணெயையோ நெய் போன்று ஆக்க வேண்டும் என்று வைத்துக் கொள்ளுவோம். எவ்வளவு ஹைட்ரோஜன் வேண்டும் என்பது, அந்த எண்ணெயிலுள்ள குறை கொழு ஆஸிட்களின் அளவையும், எவ்வளவு தூரம் எண்ணெய் கட்டியாக வேண்டும் என்பதையும் பொறுத்து இருக்கும். ஆனால், சாதாரணமாக வனஸ்பதி யாக்கப்படும் எண்ணெய்களுக்கு, எண்ணெயின் கனத்தில் சுமார் ஒரு சதவிகிதம் ஹைட்ரோஜன் தேவை என்று கொள்ளலாம். ஒரு டன் எண்ணெயை வனஸ்பதி யாக்க 4000 கன அடி ஹைட்ரோஜன் தேவையாயிருக்கும். வாரம் ஒன்றுக்கு 200 டன் எண்ணெயைக் கெட்டியாக்குகிற "சிறிய" தொழிற்சாலை ஒன்றுக்கு சுமார் 8,00,000 கன அடி ஹைட்ரொஜன் தேவையாக இருக்கும். ஆகவே வனஸ்பதித் தொழிற்சாலையில் ஹைட்ரோஜனைத் தயார் செய்வதே ஒரு பெரிய தொழிலாக விருக்கும்.

நிக்கல் உந்து வஸ்துவைத் தயார் செய்வது மிகவும் முக்கியமானது. எண்ணெயுடன் நிக்கல் தூளை அப்படியே கலந்து உபயோகித்தால் ஒரு வித மாறுதலும் ஏற்படாது. நிக்கல் பார்மேட் (Nickel Formate) என்னும் நிக்கல் கொண்ட உப்பை, வனஸ்பதியாக்க வேண்டிய எண்ணெயுடன் நன்றாகக் கலந்து அதை சென்டிகிரேட் 120 டிகிரி வரை சூடேற்றி அதில் ஹைட்ரோஜனை செலுத்துகிறார்கள். இப்படிச் செய்வதனால் நிக்கல் பார்மேட் தனி நிக்கலாக மாறி எண்ணெயுடன் கலந்து இருக்கிறது. இந்த நிக்கல் கலந்த எண்ணெயைக் காற்றுப் படாமல் அண்டாக்களில் அடைத்து வைத்துக்கொள்ளுகிறார்கள். இந்த நிக்கல் கலந்த எண்ணெயை, சிறிது சிறிதாக அவ்வப்பொழுது அதிகப்படியான எண்ணெயுடன் கலந்து வனஸ்பதி செய்கிறார்கள்.

வனஸ்பதி செய்வதற்கு முன் எண்ணெயி லிருக்கும் ஈரத்தை நீக்க வேண்டும். ஏனென்றால் உந்து வஸ்து ஈரமானால் அது எண்ணெயுடன் நன்றாகக் கலக்காது. இதனால் உந்து வஸ்துவின் உபயோகம் மிகவும் குறைந்து விடும்.

எண்ணெயைச் சுத்தம் செய்வதற்கு, முதலில் காரத்தின் உதவியைக் கொண்டு தனிக் கொழு ஆஸிட்களை நீக்குகிறார்கள். சுத்தப்படுத்தின எண்ணெய் வெளுக்

கிற அண்டாவிற்கு (பிளீச்சிங் டாங்க்) குழாய் மூலம் வருகிறது. இந்த அண்டாவில், எண்ணெய்க்கு மேலுள்ள காற்றை பம்புகள் மூலம் எடுத்து வெற்றிட (வாக்குவம்) மாக்குகிறார்கள். பிறகு அண்டாவிலுள்ள குழாய்ச் சுருளின் வழியாக அதிகச் சூடாக்கின நீராவியைச் செலுத்தி எண்ணெயைச் சூடேற்றுகிறார்கள். இதனால் எண்ணெயிலுள்ள ஈரம் நீங்கி விடுகிறது. ஈரம் நீங்கின எண்ணெய்க்குச் சுமார் 2 சத விகிதம் எலும்புக் கரியும், சுமார் 3 சத விகிதம் உவர் மண்ணும் சேர்த்து, செ. கி. 120 டிகிரிக்குச் சூடேற்றுகிறார்கள். இந்த உஷ்ணத்தில் எண்ணெயைச் சுமார் 2 மணி நேரம் நன்றாகக் கலக்குகிறார்கள். பிறகு எண்ணெயை ஆறவைத்து வடி கட்டுகிறார்கள். வடிகட்டின எண்ணெய் நிறம் நீங்கி பார்வைக்கு நீர் போன்று இருக்கும். இந்த எண்ணெயைக் குழாய் மூலம் வேறொரு அண்டாவில் செலுத்துகிறார்கள். இந்த அண்டாவில் தான் வனஸ்பதி உண்டாகப்போகிறது.

## வனஸ்பதி அண்டாவின் அமைப்பு

வெளுத்த சுத்தமான எண்ணெய் அண்டாவின் மேல்பாகத்திலிருக்கும் குழாய் வழியாக அண்டாவிற்கு வருகிறது. அண்டாவின் கீழ்ப் பாகத்தில் வந்து முடிவடையும் குழாயின் நுண்ணிய துவாரங்களின் வழியாக ஹைட்ரோஜன் எண்ணெயில் புகுகிறது. உபயோகப் படுத்தின ஹைட்ரோஜன் வெளியே போவதற்கு அண்டாவின் மேல் பாகத்தில் ஒரு குழாய் அமைந்திருக்கிறது. அண்டாவினுள் அதிகச் சூடாக்கின நீராவி புகுந்து எண்ணெயைச் சூடாக்கியபின் வெளியேறுகிறது. அண்டாவின் அடிப்பாகத்திலிருந்து ஒரு குழாயின் மூலம் எண்ணெய் வெளி வந்து ஒரு பம்பின் உதவியால் மீண்டும் அண்டாவின் மேல் பாகத்திற்கு வந்து, எண்ணெயின் பரப்புக்கு மேல் மழை போல் தெளிக்கிறது. இவ்வாறு அடிப் பாகத்தினின்றும் எண்ணெய் எடுக்கப்பட்டு மேல் பாகத்தில் நன்றாகத் தெளிக்கப் படுவதனால், எண்ணெய் முழுவதும் நன்றாக ஹைட்ரோஜனுடன் கலக்கிறது. எண்ணெய் வேண்டிய அளவு இறுகினவுடன் அண்டாவின் அடியிலிருக்கும் குழாய் மூலம் ஒரு பம்பை அடைந்து அதினின்றும் அதிக அழுக்கத்தில் (Pressure) ஒரு அழுக்க வடிகட்டிக்குச் (Filter Press) செல்லுகிறது. வடிகட்டின வனஸ்பதி ஒரு குழாய் மூலமாக வனஸ்பதி கிடங்கிற்குச் செல்கிறது. வனஸ்பதி அண்டாவிலுள்ள ஹைட்ரோஜனின் அழுக்கத்தை அளவிட அண்டாவின் மேல் பாகத்தில் ஒரு அழுக்க மானி (Pressure Gauge) அமைந்திருக்கிறது.

வனஸ்பதி அண்டாவில் வந்து சேரும் சுத்தமான எண்ணெயுடன் குறிப்பிட்ட அளவு நிக்கல் கலந்த எண்ணெயையும், சுமார் 2 சத விகிதம் உவர் மண்ணையும் சேர்த்து, குழாய்ச் சுருள்களின் கொதி நீராவியைச் செலுத்தி அதை செ. கி. 125 டிகிரி வரை சூடேற்றுகிறார்கள். பின்னர் ஹைட்ரோஜனை எண்ணெய்க்குள் புகுத்தி, எண்ணெயையும் மின்சாரக் கலப்பான் மூலம் நன்றாகக் கலக்கிக் கொண்டேயிருக்கிறார்கள். இவ்வாறு ஹைட்ரோஜனை உட்செலுத்துவது சுமார் 2 மணி நேரம் தொடர்ந்து நடத்தப்

படுகிறது. எண்ணெயையும் அடிப்பாகத்தி லிருந்து எடுத்து மேல் பாகத்திலுள்ள ஹைட்ரோ ஜன்மீது தெளித்த வண்ணமா கவே இருக்கிறது. எண்ணெயும் வர வர இறுகிக் கொண்டே வரும். எண்ணெய் வேண்டிய அளவு இறுகின பின் குழாய்ச் சுருள் வழியாக குளிர்ந்த நீரைச் செலுத்தி எண்ணெயை ஆற்று கிறார்கள். எண்ணெயும் வேண் டிய அளவு ஆறினவுடன் அழுக்க வடிகட்டியின் மூலம் வடி கட்டுகிறார்கள். வடிகட்டி யின் கனத்த துணியில் தங்கும் நிக்கலைத் திரும்பவும் சில முறை உபயோகிக்கலாம்.

இறுக்கின எண்ணெயில் பின் னர் அதிகச் சூடான நீராவியைச் செலுத்தி எண்ணெயின் மணத் தையும் நீக்கிவிடுவார்கள். பிறகு எண்ணெயில் நெய் மணம் தரக் கூடிய சில பொருள்களைச் சேர்த் துத் தகர டின்களில் அடைத் துக் குளிர்ச்சியான அறைகளில் வைத்து விடுவார்கள். சில மணி நேரங்களில் எண்ணெய் உறைந்து நெய் போன்று மணல் மணலாக ஆகிவிடும்.

சோப்பு, மெழுகுவர்த்தி முதலி யவை செய்வதற்கு உபயோகப் படுத்தும் எண்ணெயை சுமார் செ. கி. 45 டிகிரிக்கு மேல் உரு கும்படி இறுக்குவார்கள். உண வாகக் கொள்ளும் வனஸ்பதி செய்ய சுமார் செ. கி. 35 டிகி ரிக்குள் உருகும்படி இறுக்கு வார்கள்.

எண்ணெயில் காரத்தைச் சேர்த்து சுத்தம் செய்யும் பொழுது சிறிது சோப்பும் கிடைக்குமென்று பார்த்தோம். இந்த சோப்புடன் எண்ணெயும் கலந்தே தானிருக்கும். இப்ப டிக் கிடைக்கும் சோப்பு எண் ணெயின் எடையில் சுமார் 5 சத விகிதத்துக்கு மேலிருக்கும். இந்த எண்ணெய் கலந்த சோப் பைச் சலவை சோப்புத் தொழிற் சாலைக்கு விற்று விடுவார்கள். இந்த சோப்புடன் மற்றும் தகுந்த எண்ணெய்களைக் கலந்து காரத்துடன் கொதிக்க வைத்து அழகான சோப்புகள் செய்ய லாம். ஆகவே அனேகமாக எல்லா வனஸ்பதி தொழிற்சாலையுடன் ஒரு சோப்புத் தொழிற்சாலையும் சேர்ந்தே காணப்படும்.

*

### உயர்ந்தது

கிஞ்சின் ஜுங்கா மலைச்சிகரம் எப்போதும் மேகங்களால் மூடப்பட் டிருக்கும் என்று உள்ளூர்க்காரர் ஒருவர் என்னிடம் தெரிவித்திருந்தார். ஒரு சமயம் ஒரு யாத்ரிகர் அங்கே வந்து கிஞ்சின் ஜுங்காவின் சிகரத் தைப் பார்க்க வேணடுமென்று இருபத்திரண்டுநாட்கள் காத்திருந்தா ராம். அப்படியும், அதன் சிகரத்தைப் பார்க்காமலேயே திரும்ப வேண்டியிருந்ததாம். ஆனல், அவர் முழுவதும் ஏமாற்றம் அடைய வில்லை. ஓட்டல் பில் வந்ததும், ஹிமாலயத்திலேயே மிக உயர்ந்த விஷயம் எது என்பதைப் பார்த்துவிட்டோம், என்ற திருப்தியை அவர் அடைந்தா ராம்!

—மார்க் டுவெயின்

### மிஞ்சக் கூடியது

அநுபவம் என்பது, நம்முடைய பொருள்களனைத்தையும் இழந்த பிறகு நம்மிடம் மிஞ்சியிருப்பது.

—காரோசனெக்

Godrej 'CHAVI' BRAND

# கோத்ரெஜ் சாவி மார்க் சோப்புகளின்

# நாணயமான விலைகள்

ஒவ்வொரு சோப்பின் நியாயமான சில்லறை விலை, அதனுடைய சித்திரத்தின் கீழ் குறிக்கப்பட்டிருக்கிறது. (சுங்கம் 'ஆக்டிராய்' அல்லது 'டர்மினல்' வரி, வேறு ஏதேனும் வரிகள் கட்டவேண்டிய இடங்களில் விலைகள் சற்று அதிகமாக இருக்கும்.) உப சாமான்களின் அக விலை ஏற்றத்தினால் அநேகமாய் 10-4-1947 முதல் பெரும்பாலான சாமான்களின் விலையை நாங்கள் மிகவும் வருத்தத்துடன் உயர்த்தும்படி நேரிட்டிருக்கிறது.



நெ. 1—11 அணா.



நெ. 2—8½ அணா.



'வத்னி'—6 அணா.
'வத்னி' (சிறிய சைஸ்)-1¾ அணா



ஸாண்டல்—7 அணா.



லிம்டா (வேப்)—7 அணா.



கஸ்—7 அணா.




டர்கிஷ் பாத்—4½ அணா.



ஷேவிங் ஸ்டிக்
(கார்டன்)—7½ அணா.
விலைகளில் மாறுதலில்லை.
ஷேவிங் ஸ்டிக்
(தகர டப்பா)—10 அணா.




ஷேவிங் 'ரவுண்டு'
4½ அணா.
விலையில் மாறுதலில்லை.

கோத்ரெஜ் ஸோப்ஸ், லிமிடெட்.

தாவர எண்ணைகளால் 'டாய்லெட்' (ஸ்நான) சோப்புகளை முதல் முதல் இந்தியாவில் செய்தவர்

# உங்கள் பல் வைத்தியர் சொல்லுவார்

பற்களையும், ஈறையும் "மில்க் ஆப் மெக்னீஷியா டூத் பேஸ்ட்" காப்பாற்றுவதுபோல் வேறு எதுவும் கிடையாது. "பிலிப்ஸ் டூத் பேஸ்ட்" பற்களுக்கு பூரண பாதுகாப்பளிக்கிறது. ஏனென்றால் இதில் வைத்திய சாஸ்திரத்தில் கண்டுள்ள பற்களைக் கெடுக்கும் துர் நீர்களைச் சமனப்படுத்தக்கூடிய சக்திவாய்ந்த "பிலிப்ஸ் மில்க் ஆப் மெக்னீஷியா" 75 சத விகிதம் "பிலிப்ஸ் டூத் பேஸ்டில்" கலந்திருப்பதால் பற்களுக்கு பூரணப் பாதுகாப்பளிக்கிறது. பிலிப்ஸ் டூத் பேஸ்ட் ஒன்றுதான் சுத்தம் செய்தல், பள பளப்பாக்குதல், காப்பாற்றுதல் ஆகிய மூவகை வேலைகளையும் செய்கிறது.






நாசத்தைத் தடுப்பது
பிலிப்ஸின் குணம்

No. 3

## சூதகத்தை நிறுத்தியது



குமரி (Tablets) சூதகக் கோளாறுகளை எந்த நிலையிலும் நிறுத்த வல்லது. தீமை விளைவிக்காமல் கஷ்ட நிவர்த்தி யளிக்கிறது. ஆயிரக்கணக்கானவர்கள் திருப்தி யடைந்திருக்கின்றனர். விலை ரூ. 3

நாள்பட்ட கோளாறுகளுக்கு விலை ரூ. 5

மிக்க கடுமையான கோளாறுகளுக்கு விலை ரூ. 8

கர்ப்பத் தடை மாத்திரைகள் (Tablets)
6 மாத உபயோகத்திற்கு விலை ரூ. 4

(வி. பி. க்கு 12 அணு அதிகப்படி)

Mrs. P. DEVEE, F.D.S. (M.S)
Tollygunge, : : CALCUTTA

ஸ்டாக்கிஸ்டுகள்: ஹரி அண்ட் சன், 93, சைனு பஜார் ரோட், சென்னை
ராகவன் அண்ட் கம்பெனி
ஸ்ரீ நரசிம்ம ராஜா ரோட், பெங்களூர் சிடி

தொடர்கதை



# சாக்கடையிலிருந்து

பி. கேசவதேவ்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கல்யாணி பதில் சொல்லாமல் நின்றாள்.

“ஏன் பதில் சொல்லவில்லை?”

அவள் மாதவனைப் பார்த்தாள். ஆனால், பதில் சொல்லவில்லை.

“மாமாவுக்கு நாள் தோறும் சாப்பாடு போடுவதாகச் சொல், அம்மா! அப்படியானால், தினந் தோறும் நான் மாமா கூட இருந்து சாப்பிடலாம்” என்றாள் கமலம்.

கதவுக்குப் பின்னே நின்ற கல்யாணி சொன்னாள்: “ஜனங்கள் என்ன நினைப்பார்கள்!”

“ஜனங்கள் என்ன நினைப்பார்கள்...ஜனங்கள் எதைத்தான் சொல்லக் கூடாது?”

“ஆண்கள் இல்லாத வீட்டில் அன்னியன் வசித்தால்...”

“வசித்தால் என்ன?”

“பெற்ற குழந்தைக்குப் பால் கொடுக்காதவர்கள், ஜனங்கள்!”

“பெற்ற குழந்தைக்கு அவர்கள் பால் கொடுக்கவில்லையா?... பேசாமல் இருங்கள்...ஜனங்கள் சொல்லுவார்களாம்... அவர்கள் பேச்சை உடைப்பில் போடுங்கள்.” அவன் ஆவேசத்துடன் பேசினான். “குழந்தாய்! நான் ராத்திரி வருவேன். இனி நீ என்னும் என்னுடன் சாப்பிடலாம்”

அவன் வீதிக்குச் சென்று ரிக்ஷாவை இழுத்துக் கொண்டு போனான். அன்று மாலை ஒருவன் அரிசி முதலிய சாமான்களை அந்த வீட்டிற்குக் கொண்டு போனான்.

அன்று ராத்திரியும் மாதவன் கையில் ஏதோ இருந்தது. அதை அவன் கல்யாணியிடம் கொடுத்தான். அவள் அதை அவிழ்த்துப் பார்த்தாள். ஒரு வேட்டியும், ஐம்பதும் இருந்தது.

“இது எதற்காக?”

“உடுத்திக் கொள்ள.”

சிறிது நேரம் அவள் மௌனமாக இருந்தாள். பிறகு சொன்னாள்: “இதற்கெல்லாம் எனக்கு யோகமில்லை.”

“வேட்டி உடுத்திக்கொள்ள யோகம் வேண்டுமோ, என்ன?”

“ஜனங்கள் என்ன சொல்லுவார்கள்?”

மாதவன் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லவில்லை.

மாதவனும், கமலமும் சாப்பிட உட்கார்ந்தார்கள். கல்யாணி அவர்களுக்குப் பரிமாறினாள். “கமலம்! பள்ளிக்கூடத்தில் படிக்க நீ விரும்புகிறாயா?”

“ஆம்; நான் பள்ளிக் கூடத்திற்குப் போக வேண்டும். நான் படிக்க வேண்டும்.”

"படிப்பில் அவளுக்கு நிரம்ப உற்சாகம்" என்று கல்யாணி சொன்னாள்.

"அப்படியானால் நாளைய தினம் நான் அவளைப் பள்ளிக் கூடத்தில் சேர்க்கிறேன்!"

"அதனால் செலவுதானே!"

"செலவைப் பற்றிக் கவலைப் பட வேண்டாம்."

மறு நாள் மாதவன் கமலத்தைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்தான். அவளுக்குச் சிலேட்டும், புத்தகங்களும் வாங்கிக் கொடுத்தான்.

## 5

அந்த இடிந்த குடிசை புதுமை பெற்றது. கூரையைப் பனை ஓலைகள் அலங்கரித்தன. அந்த வீட்டுக்கு ஒரு அடுக்களையும், இரண்டு அறைகளும். அவை புத்துயிர் பெற்றன. தெற்கு அறையில் மாதவன் வசித்தான். அவன் தகரப் பெட்டி அந்த அறையில் இருந்தது. கமலத்தின் பாவாடைகளும், ஜம்பர்களும் கொடியில் தொங்கின. அந்த அறையில் அவள் புத்தகங்களும் இருந்தன. அங்கே உட்கார்ந்துகொண்டு தான் அவள் படிப்பாள். கல்யாணி அந்த அறைக்குப் போக மாட்டாள்.

கமலம் உற்சாகத்துடன் படித்தாள். பாவாடையும் ஜம்பரும் அணிந்து கொண்டு, கண்ணாடி வளையல்கள் அணிந்துகொண்டு அவள் பள்ளிக்கூடத்திற்குப் போவதைக் கண்டு மாதவனும், கல்யாணியும் மகிழ்வார்கள். தினந்தோறும் வேலை முடிந்து திரும்பி வரும் பொழுது அவளுக்காக அவன் ஏதேனும் வாங்கிக் கொண்டு வருவான். அவன் ஏதாவது கொடுக்கவில்லை யென்றால் அவள் வருந்துவாள். மாதவனைக் கண்டதும் அவள் பெரிய வாயாடியாக மாறிவிடுவாள். பள்ளிக்கூட விஷயங்கள், வழியில் கண்ட காட்சிகள், நண்பர்களின் குணங்கள், அண்டை வீட்டுக்காரர்களைப்பற்றி அவள் அபிப்பிராயம், அவள் தேவைகள், ஆதர்சங்கள்—இவைகளைப் பற்றியெல்லாம் அவள் சொல்லுவாள். மாதவன் இவைகளைக் கவனத்துடன் கேட்பான். அவளுக்குப் பாடத் தெரியும். அவள் பிறவிப் பாடகி. அவளுக்குப் பல பாட்டுக்கள் தெரியும். அவள் அவைகளையெல்லாம் பாடுவாள். அவளுக்குப் பல சந்தேகங்கள். கிராமபோன் எவ்வாறு பாடுகிறது, மோட்டார் எப்படி ஓடுகிறது, எண்ணெயும், திரியும் இல்லாத வீதி விளக்கு எவ்வாறு எரிகிறது—இவை அவள் சந்தேகங்கள். தனக்குத் தெரிந்த வரையில் அவன் இவைகளை விளக்குவான்.

மாதவனும், கல்யாணியும் அதிகம் பேச மாட்டார்கள். சில வார்த்தைகளில் வீட்டு விஷயங்களைப் பேசுவார்கள். ஆனால், கல்யாணியை மாதவன் நேசித்தான்; மாதவனைக் கல்யாணி நேசித்தாள். அவன் இரண்டு மூன்று வேட்டிகள் அவளுக்கு வாங்கிக் கொடுத்தான். கமலத்திற்குப் பாவாடையும், ஜம்பரும் தைக்கும் பொழுதெல்லாம் கல்யாணிக்கும் ஜம்பர் தைப்பது வழக்கம். அவள் அவைகளை அணியவில்லை. பழைய வேட்டிகளைத் தோய்த்து அணிந்து கொள்வாள். புதிய உடைகள் அணிய அவளுக்குக் கூச்சம்.

ஒரு நாள் அவள் கண்ணாடியில் முகத்தைப் பார்த்தாள். பட்டினி அவள் முகத்தில் தோண்டின குழிகள் மறைந்து விட்டன. எண்ணெய் படாததால் பழுத்

திருந்த கூந்தல் இப்போது கருத்திருந்தது. புருவங்கள் அடர்ந்து வளர்ந்திருந்தன. ஒன்றுமில்லாதவாறு கண்கள் புத்தொளியுடன் பிரகாசித்தன. அவள் சிறிது நேரம் கண்ணாடியையே இமை கொட்டாது பார்த்துக்கொண்டு நின்றாள்.

அன்று அவள் குளித்ததும் புது வேட்டியும், ஜம்பரும் அணிந்தாள். கூந்தலைச் சீவி முடித்தாள். குங்குமப் பொட்டும் இட்டுக்கொண்டாள். கண்ணாடியைப் பார்த்து அவள் புன்னகை புரிந்தாள். அந்தப் புன்னகையில் புது அழகு பிரதிபலித்தது.

அந்தி நேரமானதும் மாதவன் வந்தான். விளக்குக்கு அருகில்



உட்கார்ந்து கமலம் பாடம் படித்துக்கொண்டிருந்தாள். கல்யாணி புதல்விக்கு அருகில் உட்கார்ந்துகொண்டிருந்தாள். மாதவன் உள்ளே பிரவேசித்ததும் கல்யாணி எழுந்திருந்தாள். "மகளே, மாமா வந்துவிட்டார்."

கமலம் ஓடிச் சென்று மாதவன் கையைப் பிடித்துக்கொண்டு தொங்கினாள். "மாமா! அம்மா புது வேட்டியும் ஜம்பரும் அணிந்திருக்கிறாள்."

கல்யாணி அடுக்களைக்குச் சென்றாள்.

சாப்பாடு ஆனதும், கஞ்சாக் குழாயை எடுத்துக்கொண்டு மாதவன் திண்ணையில் உட்கார்ந்தான். ரிக்ஷா இழுக்க ஆரம்பித்ததும், நண்பர்கள் இந்த வித்தையை அவனுக்குக் கற்றுக் கொடுத்தனர். அவன் புகையிலையையும், கஞ்சாவையும் துண்டு துண்டாக அறுத்துக்கொண்டிருந்தான்.

கதவுக்குப் பின்னே நின்ற கல்யாணி மாதவனை உற்றுப் பார்த்தாள். அவள் நெடு மூச்சு விட்டாள். மாதவன் திரும்பிப் பார்த்தான். "ஏன் படுக்கவில்லை?"

"படுக்கிறேன்."

"கமலம் தூங்கினாளா?"

"ஆம் தூங்கிவிட்டாள்."

மௌனம்! அவன் கஞ்சாவைத் துண்டாக்கவில்லை. அவன் அசையாது உட்கார்ந்திருந்தான்.

மீண்டும் நெடு மூச்சு!

மாதவன் திரும்பிப் பார்த்தான். கல்யாணி எதையோ சொல்ல முயன்றாள். ஆனால் அவள் அதைச் சொல்லவில்லை.

"கமலம் தூங்கினாளா?"

"ஆம்; தூங்கிவிட்டாள்."

அதற்கு முன் அந்தக் கேள்வியை அவன் கேட்டதையும், அவள் அதற்குப் பதில் சொன்னதையும் அவர்கள் இருவரும் மறந்தனர். அவர்கள் என்னென்னமோ சொல்ல நினைத்தனர். சொல்ல வேண்டியதைச் சொல்லாமல் இருக்க அவர்கள் முயன்றனர்.

"நான் அவளை பி. ஏ. வரையில் படிக்க வைப்பேன்" என்றான் மாதவன்.

"அவள் சமர்த்து."

"அவள் அழகி."

"அவள் என் புதல்வி."

"ஆம்."

கஞ்சா இழுத்ததும் மாதவன் தெற்கு அறையில் படுத்தான். கல்யாணி வடக்கு அறையில் படுத்தாள். அன்றிரவு அவர்கள் இருவரும் தூங்கவில்லை!

* * *

அண்டை வீட்டுக்காரர்கள் என்னென்னமோ சொன்னார்கள். கல்யாணியைக் கண்டதும் அர்த்த புஷ்டியுடன் அவர்கள் சிரித்தார்கள். பரஸ்பரம் குசுகுசு வென்று பேசிக்கொண்டார்கள்.

அன்னியன் அவள் வீட்டில் ஏன் வசிக்கிறான்? அவளுக்கும், அவள் புதல்விக்கும் வேண்டியதெல்லாம் அவன் எதற்காகக் கொடுக்கிறான்? அவள் புதல்வியைப்பள்ளிக்கூடத்தில்சேர்த்ததேன்? வீட்டை ரிப்பேர் செய்ததேன்? நல்ல வேட்டிகளும், ஜம்பரும், சோப்பும், சீப்பும், கண்ணாடியும், குங்குமமும் எதற்காக வாங்கிக் கொடுக்கிறான்? இத்தகைய நூற்றுக் கணக்கான கேள்விகள் ஒருவரை ஒருவர் கேட்டுக்கொண்டார்கள்.

"அவள் பதினெட்டு வயதுப் பெண்ணைப் போன்று இருக்கிருள்." இப்படி கல்யாணியை வர்ணித்தாள் அடுத்த வீட்டுக்காரி.

"அவள் பிரசவித்திருப்பதாக யாரும் சொல்ல மாட்டார்கள்" என்ருள் இன்னொருத்தி.

"அவன் நல்லவன், அல்லவா?" என்று கல்யாணியிடம் கேட்டான் ஒருவன்.

கல்யாணி தலையை அசைத்தாள்.

"அவன் கருமி அல்ல. அல்லவா, கல்யாணி!"

அதற்கும் அவள் தலையை அசைத்தாள்.

"அவன் ஏனைய ரிக்ஷாக்காரர்களைப் போன்றவன் அல்ல. பெரிய மனிதர்கள் அவன் ரிக்ஷாவில் தான் ஏறுகிருர்கள். பணம் நிறையக் கிடைக்கிறது. கடவுள் கருணை உள்ளவர், கல்யாணி!"

அதற்கும் அவள் தலையை அசைத்தாள்.

ஒரு நாள் கல்யாணி மாதவனிடம் கேட்டாள்: "இப்படி வாழ்க்கை நடத்தப் போதுமான பணம் இருக்கிறதா? செலவைக் கொஞ்சம சுருக்க வேண்டும்."

"செலவைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். செலவு நடக்கும். தேவைகளைக் குறைக்க வேண்டாம்."

"எனினும் வரவுக்குத் தகுந்தவாறு செலவு செய்ய வேண்டும் அல்லவா?"

"செலவு அதிகரிக்கும் பொழுது வரவும் அதிகரிக்கும்."

அவன் சொன்னது உண்மை தான். செலவு அதிகரித்ததும் அவன் வருவாயும் அதிகரித்தது. அவன் புதிய வேகத்துடனும், உற்சாகத்துடனும் வேலை செய்தான். அவன் வாழ்க்கையில் சாரம் இருந்தது. அவசிய மற்ற செலவுகளை அவன் குறைத்தான். காலையில் கஞ்சி குடித்துவிட்டு வேலைக்குச் செல்லும்பொழுது சோற்றுமூட்டையும் கொண்டு போவான். மத்தியானம் உணவு அருந்துவான். அவசியமான பொழுது மாத்திரம்தான் தேநீர் அருந்துவான். அது வரையில், கொடுக்கும் கூலியை வாங்கிக் கொள்வான். அப்பொழுது கூலி கேட்டு வாங்கினன். கமலத்தையும், கல்யாணியையும் உத்தேசித்து அவன் தன் செலவைக் குறைத்தான்; அதிகம் சம்பாதித்தான். கஞ்சாவைக் குறைக்க மாத்திரம் அவனல் முடியவில்லை.

ஒரு நாள் மாதவன் கமலத்திடம் கேட்டான்: "குழந்தாய்! நீ சினிமா பார்க்கவேண்டுமா?"

"ஆம்; பார்க்க வேண்டும், மாமா—பார்க்க வேண்டும்."

அவன் கல்யாணியிடம் கேட்டான்: "சினிமாவுக்குப் போகலாமா?"

"ஜனங்கள் என்ன சொல்லுவார்கள்?" என்று தரையைப் பார்த்துக்கொண்டு சொன்னள் கல்யாணி.

மாதவன் பதில் சொல்லவில்லை.

கமலம் சினிமாவுக்குச் செல்லத் தயாரானள். அவள் கையைப் பிடித்துக்கொண்டு மாதவன் நடக்க ஆரம்பித்ததும் கல்யாணி கேட்டாள்: "எப்பொழுது வருவீர்கள்?"

"பதினெரு மணிக்கு வருவோம்."

"அது வரையில் நான் தனியே இருக்க முடியுமா?"

"நாங்கள் வரும் வரையில் அடுத்த வீட்டுக் கிழவி துணை இருக்கட்டும்."

"அவள் வரமாட்டாள்."

"அப்படியானால், என்ன செய்யலாம்?"

"எனக்குத் தெரியுமா?"

"அப்படியானால், புறப்படு."

அவள் உள்ளே சென்றாள். புதிய உடைகள் அணிந்து கொண்டு வெளியே வந்தாள். கூந்தலைச் சீவி முடித்து, புதிய உடைகள் அணிந்து கொண்டு, குங்குமப் பொட்டுடன் நிற்கும் அவளை மாதவன் கடைக்கண்ணால் பார்த்தான்! கல்யாணி புன்னகை புரிந்தாள். "இந்த அழுக்கு வேட்டியை அணிந்துகொண்டா சினிமாவுக்குப் போகிறீர்கள்?" என்று கல்யாணி கேட்டாள்.

"இதை அணிந்துகொண்டு போனால் என்ன?"

"வேலைக்குச் செல்லும் பொழுது அணியும் உடை அது. அதை அணிந்துகொண்டா சினிமாவுக்குப் போவது.........? மகளே! பெட்டியைத் திறந்து புதிய வேட்டியும், சட்டையும் எடுத்து மாமாவுக்குக் கொடு."

கமலம் உள்ளே ஓடினாள். அவள் வேட்டியும், சட்டையும் கொண்டு வந்தாள். மாதவன் அவைகளை அணிந்துகொண்டான். முதன் முறையாக அவன் கூந்தலைச் சீர்ப்படுத்தினான். அவனைக் கடைக் கண்ணால் பார்த்து அவள் புன்னகை புரிந்தாள். கதவைப் பூட்டி, சாவியை மாதவனிடம் கொடுத்தாள் கல்யாணி.

கமலத்தின் கையைப் பிடித்துக் கொண்டு மாதவன் நடந்தான். கல்யாணி பின்னே நடந்தாள்.

அடுத்த வீட்டுக்காரி ஜானகி எதிரில் வந்தாள். அவள் மாதவனைக் கூர்ந்து பார்த்தாள். அர்த்த புஷ்டியுடன் சிரித்துக் கொண்டு அவள் கல்யாணியிடம் கேட்டாள்: 'எங்கே போகிறாய்?'

"சினிமாவுக்கு!" அவள் தலை குனிந்தாள.

அவர்கள் பெரிய வீதியை அடைந்தனர். "எங்கே போகிறாய்?" என்று யாதவனின் நண்பன் கேட்டான்.

"சினிமாவுக்கு."

"இந்தக் குழந்தை யார்?"

"அவள் குழந்தை" என்று பின்னே சுட்டிக் காட்டினான்.

இன்னொருவன் கேட்டான்;

"எங்கே போகிறாய்?"

"சினிமாவுக்கு."

"இந்தப் பெண் யார்?"

"இந்தக் குழந்தையின் தாயார்!"

அவன் அர்த்தபுஷ்டியுடன் சிரித்தான்.

பத்து மணிக்குச் சினிமா முடிந்தது. அவர்கள் வீடு திரும்பினார்கள். புதிய படங்கள் வந்த பொழுதெல்லாம் மாதவன் கமலத்தையும், கல்யாணியையும் சினிமாவுக்கு அழைத்துச் சென்றான்.

அன்று இரவு வெகு நேரம் வரையில் மாதவன் வீடு திரும்பவில்லை. கல்யாணி சாப்பிடாமல் அவன் வருகைக்காகக் காத்திருந்தாள். கமலம் சாப்பிட்டுவிட்டு உறங்கினாள். வெகு நேரமாயும் அவன் வராததால் கல்யாணி வீதிக்குச் சென்று அவனை எதிர் பார்த்துக்கொண்டு நின்றாள். சிறிது நேரத்திற்குப் பிறகு ரிக்ஷாவை இழுத்துக்கொண்டு

மாதவன் வருவதை அவள் கண்டாள்.

வீட்டிற்கு அருகில் ரிக்ஷாவை வைக்க ஒரு கொட்டகை இருந்தது. ரிக்ஷாவை இழுத்துக் கொண்டு கொட்டகையில் நுழைந்தான். ரிக்ஷாவைக் கொட்டகையில் வைத்துவிட்டு அவன் திரும்பினான்.

"யார் அங்கே?" என்று அவன் கேட்டான்.

"நான் தான்"

"இங்கே என் நிற்கிறாய்?"

"நீங்கள் வராததால்."

அவன் அவளை அணுகினான்.

"ஏன் தூங்கவில்லை?"

"தூக்கம் வரவில்லை"

"சாப்பிட்டாயா?"

"இல்லை."

"ஏன் சாப்பிடவில்லை?"

"நீங்கள் வராததால்!"

அமைதி!

மாதவன் அவளை நெருங்கினான். அவன் வலது கை அவள்மீது விழுந்தது. அவள் முகம் அவன் மார்பில் சாய்ந்தது. அவன் அவளைத் தழுவினான்.

## 6

கமலம் நான்காவது வகுப்புப் பரீட்சையில் ஜயித்தாள். அவளை ஆங்கிலம் படிக்க ஆங்கிலப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்ப மாதவன் முடிவு செய்திருந்தான். ஆங்கிலம் படிக்க அவளுக்கும் அளவு கடந்த ஆசை.

தன் புதல்வி ஆங்கிலம் படித்து பெரிய வேலையில் அமர வேண்டுமென்று கல்யாணியும் ஆசைப்பட்டாள். எனினும், அந்த ஆசையை அடக்கிக்கொண்டு அவள் கேட்டாள்: "மலையாளம் படிப்பது மாதிரியா, ஆங்கிலம் படிப்பது? சம்பளம் கொடுக்க வேண்டுமே; புத்தகங்களும் வாங்க வேண்டும். ஏனைய மாணவிகளைப்போல் நல்ல உடைகள் அணிந்துகொண்டு பள்ளிக்கூடத்திற்குப் போக வேண்டும். இதற்கெல்லாம் பணம் வேண்டுமே?"

மாதவன் செலவைப் பொருட்படுத்தவில்லை. கமலத்தின் நன்மைக்காகச் செய்யும் எந்த வேலையும் கடினமானதென்றோ, அதிகமானதென்றோ, அவன் கருதவில்லை; அவன் உறுதியான குரலில் சொன்னான்: "எல்லாம் நடக்கும். அவளை நான் ஆங்கிலம் படிக்கவைப்பேன். அவளுக்குப் புத்தகங்கள் வாங்கிக் கொடுப்பேன்—சம்பளமும் கொடுப்பேன். அவளுக்காகத்தான் நான் வேலை செய்கிறேன்."

கல்யாணியின் இருதயம் நிறைந்தது. அவள் மேலே பார்த்துக் கை கூப்பினாள்.

கமலம் ஆங்கிலப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்தாள். அவள் புதிது புதிதாகப் படிக்கும் வார்த்தைகளை மாதவனுக்குச் சொல்லுவாள். அவள் மாதவனைக் கேட்பாள்: "வாட் ஈஸ் யுவர் நேம்." மாதவனை அவள் "அங்கிள்" என்று அழைத்தாள். கல்யாணியை "மதர்" என்று அழைத்தாள்.

குறிப்பிட்ட தினத்தில் சம்பளம் கொடுத்துவிட வேண்டும்; ஏனைய மாணவிகளைப் போல் அவளும் உடை அணிய வேண்டும். இது மாதவனின் தீர்ப்பு. அவள் பள்ளிக்கூடத்திற்குப் போகுமுன் அவன் வேலைக்குச் சென்றுவிடுவான். அவள் பள்ளிக்கூடத்திற்குப் போவதைக்காண அவன் வழியில் காத்திருப்பான். பெரிய வீட்டுப் பெண்களுடன் அவள்

பள்ளிக்கூடத்திற்குப் போவதைக் கண்டு அவன் பெருமை அடைவான். அவன் உடல் சிலிர்க்கும். ஒரு நாள் அவன் பள்ளிக்கூடத்திற்கு அருகில் நின்ருன். அன்று மாஜிஸ்திரேட்டின் புதல்வி நளினியின் தோளில் கையைப் போட்டுக் கொண்டு நடந்தாள் கமலம். அவன் மனம் அன்று குளிர்ந்த மாதிரி வேறு என்றும் குளிர்ந்ததில்லை.

கல்யாணி திறமையாகக் குடும்பத்தை நிர்வகித்தாள். தன்னுல் தாங்க முடியாத சுமையைச் சுமக்க மாதவன் முடிவு செய்திருக்கிருன் என்பது அவளுக்குத் தெரியும்: அவள் வீட்டுச் செலவுகளைக் குறைத்தாள். கொல்லையில் செடிகள் நட்டாள்; கோழிகளை வளர்த்தாள். மாதவனின் சுமையைக் குறைக்க அவள் செய்த முயற்சி இது.



நீதிபதியின் மகள் அணிந்திருக்கும் ஜம்பரைப் போன்று தனக்கும் ஒரு ஜம்பர் வேண்டும் என்று கமலம் மாதவனிடம் சொன்ஞள். அந்தத் துணியின் ஒரு துண்டு அவளிடம் இருந்தது. மறு நாள் ஜம்பர் தைத்துக் கொடுக்க மாதவன் வாக்களித்தான். அதைக் கேட்டுக்கொண்டிருந்த கல்யாணிக்குக் கோபம் வந்தது. "அவள் ஆட்டுகிறபடியெல்லாம் ஆட வேண்டாம். இருப்பதை அணிந்தால் போதும். பணக்காரர்களைப் போன்று நெளிந்தால், இருப்பதும் போய் விடும்."

கமலத்திற்குக் கோபம் வந்தது. "நான் உன்னிடம் கேட்கவில்லையே!"

"ஆம். அவள் என்னிடம் தானே கேட்டாள்." மாதவன் கமலத்தை ஆதரித்தான். "அவளுக்கு வேண்டியவைகளை நான் கொடுப்பேன். அவளுக்கு எந்த விதமான குறையும் இருக்கக் கூடாது."

மறு நாள் புதிய பாவாடையும் ஜம்பரும் அணிந்து கொண்டு. அவள் பள்ளிக்கூடத்திற்குச் சென்ருள்.

கமலம் நன்ருகப் படித்தாள். அவளுக்குப் பிரசங்கம் செய்யவும் தெரியும். அவள் அழகாகப் பேசுவாள். அவள் பாட்டு எவரையும் கவரும். அவள் சாமர்த்தியமாகப் பேசுவாள்; சுறு சுறுப்பாக வேலை செய்வாள். ஆசிரியர்கள் அவளை

நேசித்தனர்; மாணவிகள் அவளைக் கௌரவித்தனர். பெரிய வீட்டுப் பெண்கள் அவளுடன் நெருங்கிப் பழகினர். அவர்கள் வீடுகளுக்கு அவள் போவதுண்டு. அவர்கள் பெற்றோர்களை அவள் சந்திக்கிறாள்.

தன் நண்பர்களை வீட்டிற்கு அழைக்க அவளுக்கு ஆசை. ஆனால், அந்தக் கூரை வீட்டிற்கு வரும்படி அவர்களை எவ்வாறு அழைக்க முடியும்? அவர்கள் வந்தால் அவர்களுக்கு எதைக் கொடுக்க முடியும்? கல்வி அறிவற்ற மாதாவையும், ரிக்ஷாக்காரனான மாதவனையும் அவர்களுக்கு எவ்வாறு அறிமுகம் செய்து வைப்பது?

அவள் வீட்டைப் பற்றியும், பெற்றோர்களைப் பற்றியும் அவர்கள் கேட்டார்கள். இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்லாமல் அவள் தப்பித்துக்கொண்டாள். அவர்கள் அவளை நேசித்தனர்—கௌரவித்தனர். அவள் சிறிய குடிசையில் வசிப்பதையும், அவளைப் பராமரிப்பவன் ஒரு ரிக்ஷாக்காரன் என்பதையும் அவர்கள் அறிந்தால் நட்பும், கௌரவமும் இடிந்து தகர்ந்து விடுமென்று அவள் பயந்தாள். ஒரு நாள் நளினி சொன்னாள். "நான் உன் வீட்டிற்கு வர ஆசைப்படுகிறேன்."

கமலத்தின் மனம் கலங்கிற்று! 'எங்கள் வேலைக்காரன் ஒரு முட்டாள், நளினி! இன்னொரு வேலைக்காரன் வந்ததும் நீ வரலாம்'

"நான் வேலைக்காரனைக் காண உன் வீட்டிற்கு வரவில்லை. உன் அன்னையைக் காண வருகிறேன்."

"அம்மா படுத்த படுக்கையாக இருக்கிறாள். அம்மா குணம் அடைந்ததும் உன்னை அழைத்துச் செல்கிறேன்."

அவள் ஒருவாறு ஆபத்திலிருந்து தப்பினாள்.

ஒரு நாள் புத்தகம் படித்துக் கொண்டு வீட்டு வாசலில் நின்றாள் கமலம். வீதியில் மோட்டார் சங்கின் சத்தம் கேட்டு அவள் நிமிர்ந்து பார்த்தாள். சகமாணவி



சந்திரிகையை அவள் கண்டாள். சந்திரிகையும், அவள் தந்தையும் மோட்டாரில் எங்கோ போகிருர்கள். சந்திரிகை சிரித்தாள். கமலத்தின் முகம் இருண்டது.

மறுநாள் கமலம் பள்ளிக்கூடத்திற்குச் சென்றதும் சந்திரிகை கேட்டாள்: "அதுதான் உன் வீடா?"

"அல்ல. அதற்கு அப்பால் இருக்கிறது என் வீடு. அங்கே நான் சும்மா நின்றேன்!"

மாதவனை வழியில் கண்டால் காணுதது போல் நடிப்பாள் கமலம். வீட்டிற்குச் சென்ருல் கூட அவள் மாதவனிடம் அதிகமாகப்பேசமாட்டாள். கல்யாணியிடம் அவசியமான பொழுது மாத்திரம் பேசுவாள். மாதவன் அவளிடம் ஏதாவது கேட்டால் இரண்டொரு வார்த்தைகளில் பதில் சொல்லுவாள். அவன் பாடச் சொன்னுல் படிக்க வேண்டும்என்று சொல்லுவாள். அவர்களுக்கும் அவளுக்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை என்பதைப் போல், அவர்களைவிட்டு வெகுதூரம் விலகிச் சென்றவளைப் போல், அவள் எப்பொழுதும் அறையில் உட்கார்ந்து படிப்பாள். தன் வேலையில் மாத்திரம்தான் அவள் கவனம் செலுத்தினுள்.

தெற்கு அறையை அவள் படங்களாலும், வர்ணக் காகிதங்களாலும் அலங்கரித்தாள். படிப்பு, தூக்கம் எல்லாம் அந்த அறையில்தான். அந்த அறையில் வேறு யாரும் பிரவேசிக்கக் கூடாது என்று அவள் கட்டளை இட்டாள். அந்த அறைக்கு யாரும் போக மாட்டார்கள். மாதவன் வடக்கு அறையில் வசித்தான். அவன் தகரப்பெட்டியும், கஞ்சாக்குழாயும் வடக்கு அறையில் இருந்தன.

புதல்வியிடம் காணப்படும் இந்த மாற்றங்களைக் கல்யாணி கண்டாள். ஆனுல், அவள் ஒன்றும் சொல்லவில்லை.

ஒருநாள் மாதவன் சொன்னுன்: "கமலம்! ஒரு பாட்டுப் பாடேன்."

"இப்பொழுது பாடமுடியாது. நான் படிக்க வேண்டும்."

கல்யாணிக்குக் கோபம் வந்தது. "ஏன் பாடமாட்டேன் என்கிருய்? பாடின பிறகு படித்தால் போதும்...படிப்பாம், படிப்பு!"

"பாடவேண்டாம் அவள் படிக்கட்டும். படிக்கவில்லையென்ருல் பரீட்சை தேற முடியாதல்லவா?"

கமலத்திடம் ஏற்பட்ட மாற்றங்களை மாதவனும் கண்டான். இதைப்பற்றி அவன் சிறிதும் கவலைப்படவில்லை. அவள் தனக்கு நன்றி செலுத்த வேண்டும் என்ருே, தன்னை அவள் மதிக்க வேண்டும் என்ருே அவன் எதிர்பார்க்கவில்லை. வாழ்க்கையில் ஒரு லட்சியம் இருக்கவேண்டும்; நேசிப்பதற்கு ஒருவர் இருக்க வேண்டும்—அவன் இதைத்தான் விரும்பினுன். இது அவனுக்கும் கமலத்திற்கும் உள்ள பந்தம்.

கமலம் வருடந்தோறும் பரீட்சையில் தேர்ச்சி பெற்ருள். அவளை எல்லோரும் ஏற்றிப் போற்றினர்கள். அவள் எதிர்காலம் இன்பம் நிறைந்ததாக இருக்கும் என்று ஆசிரியர்கள் அவளை வாழ்த்தினுர்கள்.

அவளுடைய செலவு தினந்தோறும் அதிகரித்தது. வருடந்தோறும் சம்பளமும் அதிகரித்தது.

(தொடரும்)

# புத்தக உலகம்

**திருமணம்:** [ஆசிரியர்: ப. ஸ்ரீனிவாசன். கிடைக்குமிடம்: நவபாரதி பிரசுராலயம், திருநெல்வேலி ஜங்ஷன். விலை ரூபா 3]

இந்தப் புத்தகத்தில் மொத்தம் பதினொரு கதைகள் இருக்கின்றன. இவற்றில் மூன்று சக்தி, கலைமகள், கதைக்கடல், முதலிய சஞ்சிகைகளில் வெளி வந்தவை. (ஆனால், கதைக்கடலில் வெளிவந்துள்ளது என்ற விபரத்தைப் பிரசுரகர்த்தர்கள் குறிப்பிடத் தவறி விட்டார்கள்.)

சமூகத்திலுள்ள குறைபாடுகளையும், தனிப்பட்டவர்களின் குரூர புத்திகளையும் ஒழித்துக்காட்ட வேண்டுமென்ற நோக்கத்துடன் ஆசிரியர் பெரும்பான்மையான கதைகளை எழுதியிருந்த போதிலும், கதைகள் கேவலம் சீர்திருத்தப் பிரசங்கங்களாகவோ, ஆவேசக் கூச்சல்களாகவோ இல்லாமல், கலைப் பண்பு நிறைந்து விளங்குகின்றன. அதாவது ஒவ்வொரு கதையும் கதை என்ற அம்சத்தில் ரசிகர்களுக்குத் திருப்தியளித்த பின்னரே, சீர்திருத்தப் பறையை முழக்குகிறது. இதனால்தான் இந்தக் கதைகளை இலக்கியமாக வரவேற்க முடிகிறது.

ஆசிரியரின் நடையில் ஏராளமாகக் காணப்படும் சமத்காரமான சொற்பிரயோகங்களும், உவமானங்களும், கதைக்கு மிகுந்த வேகத்தையும் உணர்ச்சியையும் அளிக்கின்றன. "கூடு சிதைந்தது," 'தாசித் தெருவில்', 'குளிர்' 'தாடகை' முதலிய கதைகள் குறிப்பிடத் தக்கவை. ஆனால் எல்லாக் கதைகளிலும், ஆசிரியரின் எதிர்கால வளர்ச்சியைக் காட்டும் அம்சங்கள் நிறைந்திருக்கின்றன. இனி, சமூகத்தின் மேலோட்டமான தோற்றத்தைச் சித்திரிப்பதுடன் நில்லாது, தத்துவ ரீதியான அடிப்படைகளை நிர்மாணித்து மனித இதயத்தைச் சித்திரிக்கும் கலையின் உச்ச ஸ்தானத்தை எட்டும் முயற்சியில் ஆசிரியர் ஈடுபடுவார் என்று நம்புகிறோம். அதற்கு வேண்டிய உபகரணங்களும் அவரிடத்தில் இருக்கின்றன.

கடைசியாக, ஆசிரியர் வரவேற்கப்பட வேண்டிய இளம் எழுத்தாளர் என்றும் குறிப்பிட விரும்புகிறோம்.

**வ. உ. சி. சுய சரிதை:** [ஆசிரியர்: வ. உ. சி. கிடைக்குமிடம்: பாரி நிலையம் 59. பிராட்வே, சென்னை. விலை. ரூ. 3-8-0.]

இது முல்லைப் பதிப்பக வெளியீடு. காலஞ்சென்ற தேச பக்த வீரர் ஸ்ரீ வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் வாழ்க்கையில் அனுபவித்த இன்னல்கள், இன்னல்களிடையே சலியாது நாட்டுக்காக உழைத்த குன்றாத தேசபக்தி, அவர் செய்த தியாகம்—எல்லாம் இந்தப் புத்தகத்தில் விளக்கமாகக் காணப்படுகின்றன. இந்தியாவின் தலைசிறந்த தேசபக்தத் தியாகிகளில் முதன்மை ஸ்தானத்தை வகிக்கும் இந்த மகா புருஷரின் சுய சரிதை ஒவ்வொரு தமிழனிடத்திலும் இருக்க வேண்டும். இப் புத்தகத்தை மாணவர்களுக்கு உப-பாடமாகவும் வைக்க வேண்டும்.

அகவல் எளிய நடையில் இருக்கிறது. தெளிவான வசனத்தைப் படிப்பதைப் போல இந்த அகவலையும் சாதாரணமாகப் படிக்கலாம்.

புத்தகத்திற்கு அதிகமாக விலை வைக்கப்பட்டிருக்கிறது. புத்தகத்தின் பைண்டும் உறுதியில்லாமல் இருக்கிறது. நல்ல புத்தகத்துக்கு இப்படிப்பட்ட குறைகள் இருக்கக் கூடாது.

—கு. அ.

**மதிப்புரைக்கு இரண்டு இரண்டு புத்தகங்கள் அனுப்ப வேண்டும்**

Edited, Printed and Published by Vai. Govindan at the Shakti Press Ltd. (Shanti Press) 115-E, Mowbrays Road, Royapettah, Madras, 14.



## வயிற்றுக் கோளாறுகளிலிருந்து விடுதலை

நீங்கள் வயிற்று வலி, வயிற்று எரிச்சல், அஜீரண ஏப்பம் முதலியவற்றால் துன்பமடைந்தாலும் அதிவிரைவில் குணமடைந்து குதூகலமடைவீர்கள்—உடனடியாக "மில்க் ஆப் மெக்நீஷியா" சாப்பிட ஆரம்பியுங்கள். ஹ்ருதய எரிச்சலால் உண்டாகும் உபாதையும், வாயுத் தொந்தரவுகளும் சடுதியில் ஒழிகின்றன. இரவில் வயிற்று உபாதையால் தூக்கமில்லாதிருந்தால் படுக்கும்பொழுது "மில்க் ஆப் மெக்நீஷியா"வை உபயோகியுங்கள். அன்றைய வேலையைக் குதூகலமாகச் செய்யும் ஊக்கத்துடன் எழுந்திருப்பீர்கள். "பிலிப்ஸ் மில்க் ஆப் மெக்நீஷியா" வயிற்றுப் புளிப்பை ஒழித்து மலத்தை இளக்கக் கூடிய ஓர் அரிய சாதனம் என்பதை நீங்கள் மறவாதீர்கள்.

# PHILLIPS

"MILK OF MAGNESIA"




LIQUID or TABLETS

No. 1


மனோஹரமான ரோஜாக்களின் மனதை மயக்கும் பரிமளத்தையும், அவைகளின் நேர்த்தியான பட்டுப்போன்ற மென்மையையும் வினோலியா ஒயிட் ரோஸ் உங்களை அனுபவிக்கச் செய்யும். உங்கள் இஷ்டத்திற்குரிய இச்சோப் மேனிக்கு மிக நன்மையளிக்கிறது; உங்கள் சௌந்தரியத்திற்கு அத்தியாவசியமானது.
VINOLIA WHITE ROSE SOAP
வினோலியா
ஒயிட் ரோஸ் சோப்
VWR. 25-111 TM
VINOLIA COMPANY LIMITED, LONDON, ENGLAND

THE UNITED COMMERCIAL BANK LIMITED

# யுனைடெட் கமர்ஷியல் பாங்கு லிமிடெட்

2, ராயல் எக்ஸ்சேஞ்சு பிளேஸ், கல்கத்தா

செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 2-கோடி
ரிசர்வ் நிதி ரூ. 30-லட்சம்

ஸ்ரீ. ஜி. டி. பிர்லா
(சேர்மன்)

பி. டி. தாகூர்
ஜெனரல் மானேஜர்

தென் கிளைகளின் தொகுதி :
சென்னை (மெயின்), சௌகார்பேட்டை,
பெங்களூர், கோயம்புத்தூர், மதுரை,
காரைக்குடி, புதுக்கோட்டை, மைசூர்

தென் கிளைகளின் மானேஜர் :
ஸ்ரீ. கே. ஆர். கே. ஐயங்கார்
310-11, லிங்கி செட்டி தெரு,
சென்னை

எல்லாவிதமான நாணயமாற்று அலுவல்களும் வியாபார விஷயங்களும் கையாளுவதற்குத் தகுதியுள்ளவர்கள்

எங்கள்
3 வருட
காஷ் சர்டிபிகேட்டுகளில்
முதலீடு செய்யுங்கள்

இந்தியாவிலும், பர்மாவிலும் கிளைகள் எங்கும் உள்ளன.
உலகம் முழுவதும் ஏஜன்ஸி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

A. S. P. U .C. 6.

# உங்கள் குழந்தை !



இந்த உலகத்தில் ஒரு

★ அறிஞன்

★ விஞ்ஞானி

★ அரசியல் தலைவன்

★ வழிகாட்டி

★ கவிஞன்

உண்மையா என்று கேட்கிறீர்களா! ஆம். முற்றிலும் உண்மை. உண்மையாக வேண்டுமானால் நீங்கள் ஒன்று செய்ய வேண்டும். குழந்தையின் மன நிலையறிந்து தக்கவாறு அறிவை வளர்க்க வேண்டும். அறிவை வளர்க்க உங்களால் ஓரளவுதான் நேரத்தைச் செலவிட முடியும். முழு நேரத்தையும் அவர்களுக்காகச் செலவிட ஒருவர் உண்டு. அவர்தான் 'அணில்.' வாரம் ஒரு முறை உங்கள் வீட்டுக்கு வருவார். அவருக்கு நீங்கள் கொடுக்கவேண்டியது சன்மானமாக வருடத்திற்கு ரூ. மூன்றுதான். உங்கள் ஊர் 'அணில்' விற்பனையாளரிடம் வாரந்தோறும் ஓரணாக் கொடுத்தால் போதும். சக்தி காரியாலயம், சென்னை—14. என்ற விலாசத்திற்கு ரூபாய் அனுப்புங்கள்.


நம்பத்தகுந்தது
10 Saridon
BRAND ANALGESIC TABLETS.
Saridon
ஸாரிடோன்
எல்லா வலிகளையும் சீக்கிரத்தில் ஜயிக்கவல்லது

# பொங்கலோ பொங்கல்!...




அரிய கட்டுரைகள், கவிதைகள், அழகிய
படங்கள்—இவைகளுடன் வெளிவருகிறது

குறிப்பு: சக்தி சந்தாதாரர்களுக்கு தை இதழுக்குப் பதிலாக அனுப்பிக்கப்பெறும். அதிகப் பணம் அனுப்பிக்க வேண்டுவதில்லை.

'சக்தி' வருஷ சந்தா ரூ. 6. இரண்டு வருஷங்களுக்கு ரூ. 11

**சக்தி காரியாலயம்** ராயப்பேட்டை. சென்னை 14



# ராஜ மோடியான சம்பத்து

ரத்தினாபரணங்களை அணிவது ராஜ மோடியான சம்பத்து. ஆபரணங்கள் அழகுமட்டுமா செய்கின்றன?

உலகில் எந்த நாட்டுக்குப் போனாலும் ஆபரணங்களின் பொருள் மதிப்பு மாறுவதில்லை. சென்றவிடமெல்லாம் சிறப்புத்தான்! ஆபரணங்களைப்போன்ற சேமநிதி ஒன்று உண்டா?

கடந்த ஐம்பது வருஷ காலமாக இந்தியாவிலுப் பர்மாவிலும் பொது ஜனங்களுக்கு திருப்தியளித்து வரும் எங்கள் ஆபரண வியாபாரம் நம்பிக்கைக்குப் பெயர் பெற்றது. நாணயத்துக்கும் நீடித்த சௌந்தர்ய சம்பத்துக்கும் எடுத்துக் காட்டுகள் எங்கள் ஆபரணங்கள்.

## ஸூராஜ்மல்ஸ்

**313, எஸ்பிளனேட், மதராஸ்**